# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 தை 16 திங்கட்கிழமை (29-01-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:63


# பூமியதிர்ச்சிக்குப் பலியானோரின் தொகை 30 ஆயிரத்தை எட்டியது!

புதுடில்லி,ஜன.29

இந்தியாவின் மேற்குக் கரையோரத்தில் குஜராத் மாநிலம் மற்றும் இடங்களைக் கடந்த வெள்ளிக்கிழமை காலை தாக்கிய மிக மோசமான பூமியதிர்ச்சியில் உயிரிழந்த பொதுமக்களின் எண்ணிக்கை 25 ஆயிரத்துக்கும் 30 ஆயிரத்துக்கும் இடைப்பட்டதாக இருக்கும் என்று செய்தி ஏஜென்ஸிகள் நேற்று மாலை அறிவித்தன.

பல்வேறு இடங்களிலும் இடிபாடுகளுக்குள் இன்னும் உயிருடன் இருக்கக்கூடும் எனக் கருதப்படுகின்ற சுமார் 17 ஆயிரம் பேரை மீட்கும் முயற்சி தொடர்வதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள குச் மாவட்டத்தில் அரைவாசிக்கும் குறைவான கட்டடங்களே எஞ்சியிருப்பதாகவும் -

அவை கூட மிக ஆபத்தான நிலையிலேயே காணப்படுவதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

பெரும் பூமியதிர்ச்சிக்குப் பின்னான சிறிய அதிர்வுகள் தொடர்வதாகவும் -

நேற்று உணரப்பட்ட இத்தகைய மூன்று அதிர்வுகளில் ஒன்று ரிச்டர் அலகில் 5.9 என்ற அளவில் இருந்ததாகவும் -

இத்தகைய அதிர்வினால் எஞ்சியுள்ள கட்டடங்களும், கட்டட இடிபாடுகளும் கூட மோசமாகச் சேதமடையலாம் என்பதால் தற்போது இடிபாடுகளுக்குள் சிக்கி இருப்போரை மீட்கும் பணி மிக ஆபத்தாக உள்ளதாகவும் - மேலும் தெரிவிக்கப்பட்டது.

குச் பகுதியில் விமானப் படைத் தளத்தில் ஏற்பட்ட மோசமான பாதிப்புக்களில் இருநூறுக்கும் குறையாத எண்ணிக்கையில் விமானப் படையினர் உயிரிழந்ததாகக் கூறப்பட்டது.

கற்குவியல்கள், கொங்கிறீட் தளங்கள், சுவர்கள், இடிபாடுகள் போன்றவற்றை அகற்றுவதற்காக புல்டோசர்கள், நிலத்தைத் தோண்டும் பாரிய கருவிகள் என்பன முழு அளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இடிபாடுகளுள் சிக்கியிருப்பவர்களைக் கண்டுபிடிப்பதற்காக மோப்ப நாய்களும் பயன்படுத்தப்படுகின்றன.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் சகல ஆஸ்பத்திரிக் கட்டடங்களும் தகர்ந்து போய்விட்டதால் இந்திய இராணுவத்தினரும் ஏனைய மருத்துவ அதிகாரிகளும் ஆங்காங்கே வீதியோரத்திலும், பொதுஇடங்களிலும் அமைத்துள்ள கள ஆஸ்பத்திரிகளில் வைத்து, பூமியதிர்ச்சியில் காயமடைந்தோருக்கு சிகிச்சை அளிக்கப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட இடங்களுக்கு நிவாரணப் பொருள்களை அனுப்பும் பணியும் ஓரளவு முன்னேற்றம் கண்டிருப்

(16ஆம் பக்கம் பார்க்க)



குச் மாவட்டத்தில் ஓரிடத்தில் வீட்டின் கட்டட இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்திருக்கும் தனது சகோதரியின் சடலத்தைப் பார்த்தவாறு, இடிபாடுகளுக்கு நடுவில் சிக்கிக் காணாமல்போன தாயைத் தேடும் ஓர் (அனாதைச்) சிறுவன்!

# சர்வதேச நிர்ப்பந்தங்களுக்கு அடிபணிய அரசாங்கம் மறுப்பு!

## விடுதலைப் புலிகளின் யுத்தநிறுத்தத்துக்கு சாதகமாகப் பதிலளிக்கும் விவகாரத்தில்

கொழும்பு,ஜனவரி29

**விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமாக அறிவித்திருக்கும் யுத்தநிறுத்தத்துக்கு சாதகமான முறையில் பிரதிபலிப்பை வெளிப்படுத்தி, சமாதானப் பேச்சுகளுக்கான ஒரு முன்னோடி நடவடிக்கையாக போர் நிறுத்தத்தைப் பிரகடனம் செய்யுமாறு இலங்கை அரசாங்கத்துக்கு சர்வதேச சமூகம் கடுமையான நெருக்குதல்களைக் கொடுத்து வருவதாகத் தெரியவருகிறது.**

**ஆனால் அந்த அழுத்தங்களுக்கு அடி பணிவதற்கோ இது விடயத்தில் தனது நிலைப்பாட்டை மாற்றுவதற்கோ அரசாங்கம் திட்டவட்டமாக மறுத்து விட்டதாகவும் தெரியவந்தது.**

விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்புக்குச் செவி சாய்க்கும்படி கொழும்பில் உள்ள வெளிநாட்டு ராஜதந்திரிகளும் அரசை வற்புறுத்தி வருகிறார்கள்.

போருக்கு அளவுக்கு மீறிய நிதியைச் செலவழித்து நாட்டில் பெரியதொரு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டிருக்கும் அரசுக்கு போரைத் தொடருவதனால் ஏற்படக்கூடிய மேலதிக சுமையைத் தாங்க முடியாது என்றும் - அவர்கள் வலியுறுத்துகின்றார்கள்.

அரசு போர்நிறுத்தத்துக்கு இணங்கினால் புலிகள் பேச்சுக்கு இறங்க நிர்ப்பந்திக்கப்படுவார்கள் என்று வெளிநாட்டு ராஜதந்திரிகள் அரச உயர் பீடத்துக்குச் சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

எனினும் சர்வதேச சமூகத்தில் இருந்துவரும் இத்தகைய நெருக்குதல்களுக்கு விட்டுக்கொடுப்பதில்லை என்று அரச உயர்பீடம் திட்டவட்டமாக முடிவு செய்துள்ளது என்றும் கூறப்படுகிறது.

புலிகள் அரசாங்கத்துடன் நேரடிப் பேச்சுவார்த்தைக்கு வரக்கூடிய நிர்ப்பந்த நிலையினை அவர்களுக்கு உருவாக்கும் வகையில் மட்டுப்படுத்தப்பட்ட ஒரு காலத்துக்குப் போர் நிறுத்தம் ஒன்றைச் செய்வது உகந்தது என்றும் -

தற்போதைய பொருளாதார யுத்த நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கு இத்தகைய உத்தி அவசியமானது என்றும் - அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஆனால் இத்தகைய வாதங்களுக்கு எடுபடுவதில்லை என்று அரசு கங்கணம் கட்டியிருப்பதாகவும் அறிய வருகிறது.

(உ-7)

# பயணிகள் கப்பல் நாளை இங்கிருந்து புறப்படும்

## பயணச்சீட்டு வழங்கல் இன்று

"சிற்றி ஒவ் றிங்கோ" பயணிகள் கப்பல் நாளை செவ்வாய்க்கிழமை 400 பயணிகளுடன் வடக்கில் இருந்து திருமலை நோக்கிப் புறப்படும் என வடமாகாண மீள்குடியமர்வு புனர்வாழ்வு அதிகாரசபையின் யாழ்.அலுவலகம் அறிவித்துள்ளது.

முதலாவது கப்பல் சேவைக்கென கடந்த 25 ஆம் திகதி வியாழக்கிழமை யாழ்.சிறாம்பியடியில் உள்ள மணியம் கட்டடத்தில் பதிவுகளை மேற்கொண்டு துண்டு பெற்றவர்கள் நாளைய கப்பல் சேவை மூலம் பயணம் செய்ய முடியும் எனவும் -

இவ்வாறு துண்டு பெற்றவர்களுக்கான பயணச்சீட்டுக்கள் இன்று மேற்படி அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும் எனவும் -

அந்த அலுவலகம் அறிவித்துள்ளது.

(உ-7)

## திட்டமிட்டபடி 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பல் மீண்டும் இன்று முதல் சேவை

திருகோணமலை,ஜன.29

திருகோணமலைக்கும் - வடபகுதிக்கும் இடையிலான "சிற்றி ஒவ் றிங்கோ" பயணிகள் கப்பல் சேவை திட்டமிட்டபடி இன்று திங்கட்கிழமை முதல் மீண்டும் ஆரம்பமாகிறது.

திருகோணமலைத் துறைமுகத்தில் தற்போது தரித்து நிற்கும் "சிற்றி ஒவ் றிங்கோ" கப்பல் இன்று மாலை 400 பயணிகளுடன் வடபகுதி நோக்கிப் புறப்படும் என திருமலைப் பட்டணமும் சூழலும் பிரதேச செயலர் வி.வேலும்மயிலும் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார்.

ஒவ்வொரு வாரமும் பிரதி திங்கள், புதன்கிழமைகளில் திருகோணமலையில் இருந்து புறப்படும் இந்தக் கப்பல் வடக்கில் இருந்து செவ்வாய், வியாழன் ஆகிய தினங்களில் பயணிகளை ஏற்றிக்கொண்டு திருகோணமலைக்குத் திரும்பும் எனவும் -

அவர் தெரிவித்தார்.

(உ)

# தேவைப்படும்போது ஆனையிறவை இராணுவத்தினர் மீளக் கைப்பற்றுவர்!

## வடபகுதித் தளபதி கூறுகிறார்



யாழ்ப்பாணம்,ஜன.29

"இராணுவத்தின் யுத்த உத்தியில் ஆனையிறவைக் கைப்பற்றுவது அவசியமானால் குறித்த நேரத்தில் அது கைப்பற்றப்படும்."

- இப்படிக் கூறியிருக்கின்றார் வடபகுதி இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா.

'த சண்டே ரைம்ஸ்' பத்திரிகையின் இராணுவ விமர்சகர் இக்பால் அத்தாஸுக்கு கடந்த வாரம் பலாலியில் வைத்து வழங்கிய பேட்டி ஒன்றிலேயே அவர் இப்படிக் கூறியிருக்கின்றார்.

அந்தப் பேட்டியில் அவர் தெரிவித்த முக்கிய விடயங்கள் வருமாறு:-

யாழ்ப்பாணத்தைப் பிடிப்பதற்கு பிரபாகரனுக்கு எந்த வழியும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

பிரதேசங்களைக் கைப்பற்றும் வலுவை அவர் இப்போது இழந்துவிட்டார். அதற்காக அவர் மீண்டும்

(15ஆம் பக்கம் பார்க்க)

# நச்சு மீனை உண்ட மூவர் பரிதாப மரணம்

## முழங்காவிலில் சம்பவம்!

வவுனியா,ஜன.29

நச்சு மீனான முள்ளுப்பேத்தையை கறி சமைத்து உட்கொண்ட 3 பேர் துடிதுடித்துப் பலியான பரிதாபகரமான சம்பவம் ஒன்று முழங்காவில் பகுதியில் நேற்று இடம்பெற்றது.

ஆறு பிள்ளைகளின் தாயான பன்னீர்க்கிளாஸ் செல்வராணி (வயது-34), நேசம் உத்தமதேவி (வயது-19), சகாயம் ரசினா (வயது-9) ஆகியோரே இவ்வாறு உயிரிழந்தவர்களாவர்.

நேற்று நண்பகல் உணவுடன் இவர்கள் முள்ளுப்பேத்தை மீனை உட்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-7-164)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## நான்காம் ஆண்டு நினைவலையில்



தோற்றம் 12 - 04 - 1951

மறைவு 11 - 02 - 1997

### திருமதி ஜெகதீஸ்வரி சிவதாசன்
(குரும்பசிட்டி)

திதி : 29-01-2001

ஆண்டு நான்கானதம்மா!
ஆறுதல் எமக்கில்லை
ஆத்மா சாந்தி பெற
ஆண்டவனை வேண்டுகின்றோம்!

*ஏழாலை மேற்கு,*
*சுன்னாகம்.* (83527)

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள்.


**லஷ்சுமி** இனுவில்
3ஆவது வெற்றி வாரமாக
**விஜயகாந்த்**
**மீனா,** நடித்த
**வானத்தைப் போல**
(தமிழ்)
காட்சிகள் 11.00, 2.30 (புதிய நேரம்) (83541)

**நாகம்ஸ்**
சுன்னாகம்
**டைட்டானிக்**
(தமிழ் ~ பிலிம்)
காட்சிகள்:10.30, 2.30 (புதிய நேரம்) (C/15042)

**ராஜா** யாழ்ப்பாணம்
இன்றுமுதல்
குதூகல ஆரம்பம்
**மாதவன், ஷாலினி**
மற்றும் பலர் நடிப்பில்
**அலைபாயுதே**
காட்சிகள்: 10.30, 2.00 (பு.நே.) (C/14851)

மலிவு விலையில்
உயர் தரமான கணனிகள், உதிரிப்பாகங்கள்
**MONITOR, KEY BOARD, SPEAKERS, C.D.S., MOUSE, FLOPPY DISKETS, DUST COVER, PRINTER, SCANNER, U.P.S., CARTRIDGES, MODEM, RIBBONS,**
இன்னும் பல உதிரிப்பாகங்கள்.
மேலும் புதிய **CD** கள்
மலிவு விலையில்
பெற்றுக் கொள்ளலாம்.
**COMPUTER TYPING, PRINTING, E-MAIL, FAX**
வசதிகள் யாவற்றையும் ஒரே இடத்தில் குறைந்த செலவில் செய்து கொள்ள நாடுங்கள்



**SRI MURUGAN COMPUTER SYSTEMS**
**303, K.K.S ROAD - JAFFNA**
**T.P: 2670,3588 FAX: 3214**
E-MAIL: *DELSMSKR@eureka.lk*
SMS *COMJA@sltNet.lk*
*குறிப்பு : எம்மிடம் பதிவு செய்தவர்கள் தயவு செய்து உடன் தொடர்பு கொள்ளவும்.* (C/15042)


## திருமண அழைப்பு

உ
சிவமயம்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் தை மாதம் 16ஆம் நாள் இன்று (29.01.2001) திங்கட்கிழமை பகல் 10.30 மணி தொடக்கம் 11.35 மணிவரையுள்ள மீன லக்கினத்திலும், உத்திரட்டாதி நட்சத்திரத்திலும் சித்தயோகத்திலும் கூடும் சுபமுகூர்த்த வேளையில்,

திரு.திருமதி முத்தையா நாயுடு
அவர்களின் கனிஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**இராமசுவாமி** (இராமர்)
அவர்களுக்கும்



எமது கனிஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
**வனஜா**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு இல.15, புவனேஸ்வரி அம்பாள் வீதியில் அமைந்துள்ள மணமகள் இல்லத்தில் திருமணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சமேதரராக வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து மதிய விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடி நிற்கும்:

மு.வடிவழகு குடும்பத்தினர்
(அளவெட்டி)
தற்காலிக முகவரி:
180, மூத்தவிநாயகர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

திருமதி ச.அருளம்மா (தாய்)
திரு.திருமதி இரகுபதி.

(இரு வீட்டார் அழைப்பு) (83534)


**லாலா சோப் ஸ்தாபனத்தாரின்**
**அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு**
*பாவனையாளர்களே!*
*பரிசு பார்க்கும் நாள் :* **28-02-2001**
பரிசுகளின் விவரம்
முதலாம் பரிசு - **2 பவுண் தங்க நாணயம்**
2ஆம் பரிசு - **1 பவுண் தங்க நாணயம்**
3ஆம் பரிசு - **1/2 பவுண் தங்க நாணயம்.**
**மேலும் 1000 ரூபா பெறுமதியான 6 சாறிகள் ஆறுதல் பரிசுகளாக வழங்கப்படும்.**
*ரிக்கற் விவரம்: 10 ரூபா மட்டும்.*
**லாலா சோப் தொழிற்சாலை**
அச்சுவேலி. (C/15026)


**வேலையற்ற பட்டதாரிகள் சங்கம்**
**அவசரக் கலந்துரையாடல்**

விடயம் : வரவு செலவுத்திட்டப் பணிப்பாளரினால் 1999ஆம் ஆண்டு நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் தோற்றி இதுவரை வேலை கிடையாதோர்.

இடம் : சங்க அலுவலகம் (பழம் றோட், கந்தர்மடம்)

காலம் : 31.01.2001 புதன்கிழமை காலை 10 மணி.

(83538) - **தலைவர்.**

## நீங்காத நினைவலைகள்



மண்ணுலகில் 1929 - 10 - 12

விண்ணுலகில் 2000 - 12 - 21

### அடைக்கலம் ஞானப்பிரகாசம்
(யாழ். போதனா வைத்தியசாலை ஓய்வுபெற்ற பரிசாரகர்)

பாசத்தின் உறைவிடமான எங்கள் அப்பாவே!
ஒருடல் ஈர்தொழிலாகச் சிறப்பாக சேவையாற்றியவரே!
நாற்பது தினங்களாகியும் எங்கள் கவலை ஆறவில்லை!
ஆண்டவன் தாள் சேர்ந்திருக்கத் துதி செய்து அஞ்சலிக்கின்றோம்.

(83539)

மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், மைத்துனர்கள்.



மண்ணுலகில் 1959 - 06 - 20

விண்ணுலகில் 1999 - 01 - 29

### ஞானப்பிரகாசம் அலோசியஸ்
(போதகர்)

ஆண்டுகள் இரண்டு கடந்தாலும்
ஆறவில்லை உம்பிரிவுத் துயர்
ஆண்டவர் பணி செய்வதே என் மூச்சு என்றாய்
அவர் பாதவடி செய்வதற்கோ?
காலங்கள் ஓடினாலும் உம் நினைவுகள் மாறாது என்றும்.

**பிரிவால் துயருறும்:**

தாய், மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், மாமன், மாமி,
மைத்துனர்கள்,

*126, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு.*


**லாலா சோப்**
**சன்சைன் சோப்..**
மாணவ
மாணவிகளே...!
?
(C/15025)

**கிறிஸ்ரல் சென்ரர்**
நெல்லியடி
**A/L DAY 2001**
அளவையியல் -
வினாவிடை
**யாழ்.S.S.மனோகரன்**
ஆரம்பம் : **30.01.2001**
பி.ப. **3.30**
**2002 A/L - 4.30**
அனுமதியை முன் கூட்டியே
பெற்றுக்கொள்ளவும். (83532)

உதயன்

## இதுவும் நன்மைக்கே!

எல்லாம் நன்மைக்கே என்று கருதுவோர் உளர். ''தெற்கிலும் இனிமேல் சீனி பங்கீட்டு அடிப்படையில்'' என்ற உதயனின் நேற்றைய செய்தியும் அந்த வகையில் நோக்கப்பட வேண்டியதாகும்.

1970 களின் முற்பகுதியில் சிறிமாவோ பண்டாரநாயக்கா பிரதமராக இருந்த போது, வெளிநாட்டுப் பொருள்கள் இறக்குமதிக்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. அவ்வேளை தென்னிலங்கை மக்களும் பாண், அரிசி, மா, சீனி ஆகிய அத்தியாவசியப் பொருள்களுக்குக் கூட்டுறவுக் கடைகள் மற்றும் கடைகளுக்கு முன்னால் மணிக் கணக்கில் கால் கடுக்கக் காத்திருக்க நேர்ந்தது.

கொழும்பு உட்படப் பெரும் நகரங்களில் மக்கள் பாண் உட்பட்ட உணவுப் பொருள்களைப் பெறுவதற்கு நள்ளிரவிலேயே ''கியூ''வில் இடம் பிடித்தனர். சீனி உட்படப் பல பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவியதால் அவை பங்கீட்டுக்கு மட்டுமே வழங்கப்பட்டன.

சீனியைக் கையில் வைத்து நக்கிக் கொண்டு ''காட்ட'' (தேநீர்) குடித்ததனால் மக்களின கைரேகைகள் தேய்ந்து போனதாக பத்திரிகைகள் கருத்துப் படங்கள் ('காட்டூன்') வெளியிட்டன.

அரிசித் தட்டுப்பாட்டினால் தென்னிலங்கை மக்கள் மரவள்ளிக் கிழங்கையே முக்கிய உணவாக்கினர், நாள்பட்ட கிழங்குகளை உட்கொண்டு அவர்கள் மரணமான பரிதாப நிகழ்வுகளுக்கும் 'அம்மா'வின் ஆட்சிக் காலத்தில் பஞ்சமிருக்கவில்லை.

தாயாரின் ஆட்சிக் காலத்தின் பின்னர் இப்போது மகளாரின் ஆட்சிக் காலத்தில் மீண்டும் தென்னிலங்கைச் சிங்கள மக்கள் சீனியைக் கையில் வைத்து நக்கிக் கொண்டு தேநீர் குடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகியுள்ளது!

வெளிநாட்டுச் செலாவணியை மிச்சம் பிடிக்க வேண்டிய நெருக்கடியான தேவை கருதி வெளிநாட்டு இறக்குமதிக்கு அப்போது கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிப்பதற்காகவே அந்தக் கடும் நடவடிக்கை என்று அப்போது விளக்கம் கூறப்பட்டது.

இப்போது .........?

ரூபாவின் பெறுமதியை — நாணய மதிப்பை — தீர்மானிப்பதை மிதக்கவிடும் பொருளாதாரக் கொள்கையின் பலாபலன் — விளைவு — விலை உயர்வையும், தட்டுப்பாட்டையும் உண்டாக்கிப் பங்கீட்டு விநியோகத்துக்கு வழி செய்துள்ளது!

இதற்கு மூலகாரணம் அரசாங்கம் வடக்கு — கிழக்கில் நடத்தும் போர்; அதற்காகச் செலவிடப்படும் பெருந்தொகைப் பணம்.

நாட்டின் பொருளாதார பலத்தை விஞ்சும் விதத்தில் போர்ச் செலவு அமைந்ததன் விளைவே ரூபா மதிப்பை மிதக்கவிடுவதற்கு நிர்ப்பந்தித்துள்ளது. ஜனாதிபதி சந்திரிகா இதனைஒப்புக்கொண்டுள்ளார்.

போரின் விளைவு இப்போது சிங்கள மக்களின் வயிற்றில் பேரிடியாக விழுந்துள்ளது. போர் வேண்டாம் என்று சொல்வதற்கு, அதனை நிறுத்துமாறு அழுத்தம் கொடுப்பதற்கு அந்த இடி உந்தும். போருக்கு எதிராக அவர்கள் கிளர்ந்தெழும் சாத்தியம் மெத்தவும் உண்டு.

அரசு போர் நிறுத்தம் செய்யப் பின்னடிக்கும் இவ்வேளையில் இத்தகைய அழுத்தம் வருமாயின் பெருநன்மையே செய்யும்.

# கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சிவஞானம் மீது நம்பிக்கைத் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜன 29

''யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சி. வீ. கே. சிவஞானம் மீது எமக்கு முழு நம்பிக்கை உண்டு.''

— இவ்வாறு மேற்படி சமாசத்தின் அலுவலகத்தில் நேற்று யாழ். மாவட்டத்தில் உள்ள ப. நோ. கூ. சங்கங்களின் தலைவர்கள் மற்றும் சமாச இயக்குநர் சபை உறுப்பினர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

கடந்த 17 ஆம் திகதி கொழும்பில் வடக்கு, கிழக்கு மாகாண ஆளுநருடன் இடம்பெற்ற சந்திப்பு ஒன்றில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி. மகேஸ்வரன் இந்தச் சமாசத்தின் தலைவர் சி.வி கே.சிவஞானத்திற்கு எதிராக ஆளுநரிடம் புகார் செய்திருந்தார் எனச் செய்திகள் வெளியாகியிருந்தன.

இச்செய்திகள் தொடர்பாக ஆராயும் பொருட்டு நேற்று நடைபெற்ற கூட்டத்திலேயே இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தத் தீர்மானத்தின் பிரதிகளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, வடக்கு — கிழக்கு மாகாண ஆளுநர், மாகாண அமைச்சின் பிரதம செயலாளர், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கூட்டுறவுத்துறை அமைச்சர், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் உரையாற்றிய சங்கத் தலைவர்கள் பலரும், தலைவர் சிவஞானத்தின் பணிகள் தொடரவேண்டும். அவரின் தலைமையில் கூட்டுறவுத்துறை மேலோங்கி வருகிறது. எனவே அவருக்கு நாங்கள் என்றும் பக்கத்துணையாக செயற்படுவோம் என்றும் —

### நிரூபிக்கவேண்டும்

கூட்டுறவுத்துறையில் ஊழல்கள், மோசடிகள் இருந்தால் அவற்றைப் பகிரங்கமாக நிரூபிக்கவேண்டும். கூட்டுறவு மீதும் தலைவர் மீதும் தேவையற்ற குற்றச்சாட்டுக்களை சுமத்துவதை வன்மையாகக் கண்டிக்கிறோம் என்றும்— கூறினார்கள்.

கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ. கனகசபாபதி உரையாற்றும்போது கூறியதாவது:-

தலைவர், சி·வி.கே. சிவஞானம் மீதும் கூட்டுறவுத்துறை மீதும் கொண்ட காழ்ப்புணர்ச்சியினால் சிலர் தேவையற்ற குற்றச்சாட்டுக்களைச் சுமத்திக் கொண்டிருக்கிறார்கள்.

கூட்டுறவுத்துறைக்கு கல் எறிவது, அதனை உடைப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவது என்பன நீண்டகாலமாகத் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில் நாம் பிரச்சினைகளுக்குமுகம் கொடுத்து கூட்டுறவுத்துறையை மேலும் கட்டி எழுப்புவோம்.

ப.நோ.கூ. சங்கங்கள் ஒவ்வொன்றும் சமாசம் மூலம் பொருள்கள் கொள்வனவுக்கான கூறு விலைகளைக் கோருவதுடன் கொழும்பிலிருந்து தனிக்கப்பலில் ப. நோ. கூ. சங்கங்களுக்குரிய முழுப் பொருள்களையும் எடுத்து வருவதற்கு முயற்சிகள் செய்யவேண்டும் — என்றார்.

### விளக்கம்

சமாசத்தின் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் தனக்கு எதிரானகுற்றசசாட்டுகளுக்கு விளக்கமளிக்கையில் கூறியதாவது:-

கடந்த தேர்தலுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் கூட்டுறவுத்துறைக்கு எதிராக இத்தகைய அரசியல் தலையீடுகள் இருக்கவில்லை. அப்போதிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களோ அரச அதிகாரிகளோ கூட்டுறவுத்துறையில் குறுக்கீடு செய்யவில்லை.

எங்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு அரசியல் சித்தாந்தங்கள், கொள்கைகள் இருக்கின்ற போதும் கூட்டுறவுத்துறையைப் பொறுத்தவரையில் நாங்கள் ஒரேகொடியின் கீழ் செயற்பட்டு வருகின்றோம்.

அண்மையில் லொறிக் கொள்வனவு தொடர்பாக எம்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஆளுநருடைய சந்திப்பில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் எங்களுக்கு எதிராக அர்த்தமற்ற குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியுள்ளார்.

'சமாசத்தின் தலைவர் சி. வீ. கே. சிவஞானம் தலைமைப் பதவியிலிருந்து மாற்றப்படவேண்டும்; சமாசத்தில் கொள்வனவு நடவடிக்கைகளில் கூறுவிலைகள் கோரப்படுவதில்லை; ஊழல்கள் நடக்கின்றன; ஊழல் மோசடிகள் பற்றி தட்டிக் கேட்பவர்கள் தலைவரால் அச்சுறுத்தப்படுகிறார்கள்; ப. நோ. கூ. சங்கங்கள் சுயாதீனமாக இயங்குவதற்கு தலைவர் தடையாக இருக்கிறார்' — இவைதான் தற்பொழுது எம்மீது சு[மத்]தப்பட்ட குற்றச்சாட்டுகள்.

எமது துறை ஒரு ஜனநாயக அமைப்பு. தலைவரை நீக்குவதற்கு எமது சபைக்கு உரிமை இருக்கிறது. எங்களுக்கு தனித்துவம், கௌரவம், தன்மானம் எல்லாம் இருக்கின்றன. எங்களுக்கும் ஆற்றல் உள்ளது. எமது பொருள்களின் கொள்வனவுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தொடர்புகள் இல்லை.

ப. நோ. கூ. சங்கங்களின் சுயாதீன செயற்பாட்டுக்கு நான் ஒருபோதும் தடையாக இருந்ததில்லை.

நான்எவரையும் அச்சுறுத்தவில்லை; எந்தச் சக்தியும் எனக்குப் பின்னணியில் இல்லை.

நான் தன்மானத்தைப் பெரிதாக நினைப்பவன் இந்தச் சமாசத்தின் தலைவராக இருக்க வேண்டிய தேவை எதுவும் எனக்கு இல்லை.

நான் அரச சேவையில் இருந்து ஓய்வுபெற்ற காரணத்தினால் இந்தச்சமூதாயத்துக்குப் பயன்பட வேண்டும் என்பதற்காகவே கூட்டுறவுத்துறைக்கு வந்தேன்.

என்னைத் தெரிவு செய்த நீங்கள் அனைவரும் தலைமையை விட்டு விலகுமாறு கூறினால் இந்தப் பதவியில் இருந்து ஒதுங்கத் தயாராக இருக்கின்றேன்—என்றார்.

சமாசத்தின் உப தலைவரும் சுன்னாகம் ப. நோ. கூ. சங்கத்தின் தலைவருமான எஸ். குமரவேல் நன்றியுரை வழங்கினார். அவர் கூறியதாவது;-

ஒரு காலத்தில் தனியார் துறையினர் கூட்டுறவுத்துறையை தாக்கினார்கள் இன்று அரசியல்வாதி ஒருவர் தாக்கி வருகிறார்.

பல முனைத் தாக்குதலின் மத்தியில் சமாசம் இன்று இயங்கிக் கொண்டிருக்கிறது.

சமாசத்தை உடைப்பதற்கு சிலர் முயற்சி செய்கிறார்கள். இதற்கு நாம் எவரும் பலியாகக் கூடாது.

தலைவர் சிவஞானம் மீது நாங்கள் மதிப்பு வைத்திருக்கிறோம்; நம்பிக்கை வைத்திருக்கிறோம். அவர் எமது கூட்டுறவுத் துறைக்குக் கிடைத்தது எமக்கு கிடைத்த பேறாகவே கருதுகின்றோம்.

அவர் கூட்டுறவுத்துறையை விட்டு ஒதுங்க நாம் ஒருபோதும் விடமாட்டோம் —என்றார்

(உ-5)

## வரலாற்றுக் கழக கருத்தரங்கு

கோப்பாய், ஜன. 29

யாழ். பல்கலைக்கழக வரலாற்றுக் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 2001 ஆம் ஆண்டிற்கான கருத்தரங்குத் தொடர் I நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வரலாற்றுத்துறை மண்டபத்தில் நடைபெறும்.

வரலாற்றுக் கழகத் தலைவர் செல்வி வி. பிரபாலினி தலைமையில் நடைபெறும் இக் கருத்தரங்கில் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் 'இராணுவ நடவடிக்கைகளினால் யாழ்ப்பாண பாரம்பரியத்தில் ஏற்பட்ட தாக்கங்களும்' — விளைவுகளும் ஓர் ஆய்வுக் கண்ணோட்டம், என்ற தலைப்பில் கருத்துரை வழங்குவார். ( ஐ -- 72 )

## நாளை

தை 17

செவ்வாய்க்கிழமை

திதி: ஷஷ்டி

பின் இரவு 3.32 வரை.

நட்சத்திரம்: ரேவதி

பின் இரவு 5.01 வரை,

ஷஷ்டி விரதம்

சுபநேரம்: 11.09—12.36

ராகுகாலம்: 3.36 —5.06

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## சமய சந்நிதிகளில்

வலி. வடக்கு, ஜன. 29

ஏழாலை தெற்கு வசந்தபுரம் அருள்மிகு வசந்த நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து பத்து நாள்கள் உற்சவம் இடம்பெறும்.

இசைஞான திலகம் சிவத்திரு. வ. குமாரசாமி ஐயாவின் ஆன்மீகச் சொற்பொழிவு பத்து நாள்களும் நடைபெறவுள்ளது. (ஐ-86)

## உறுதி கையளிபபு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன. 29

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி அமைக்கப்படவிருக்கும் காணிக்கான உறுதி கையளிக்கும் வைபவம் நாளை காலை 10 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த வைபவத்தில் கோப்பாய் பிரதேச செயலர் க. கேதீஸ்வரன் கல்வியற் கல்லூரி நிர்வாகத்திடம் உத்தியோக பூர்வமாக உறுதியைக் கையளிப்பர், (உ-5)

## காணாமற்போன சைக்கிள்கள் மீட்பு

யாழ்ப்பாணம், ஜன 29

மானிப்பாய்ப் பகுதியில் காணாமல்போன 8 சைக்கிள்கள் மானிப்பாய்ப் பொலீஸாரால் நேற்று மீட்கப்பட்டன

அண்மையில் மானிப்பாய்ப் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்ட திருட்டுச் சந்தேக நபர்கள் 4 பேர் கொடுத்த தகவலின் பேரிலேயே தாம் சைக்கிள்களை மீட்டுள்ளதாகவும் —

உரியவர்கள் பொலீஸ் நிலையத்துக்கு நேரில் சமூகமளித்து அடையாளம் காட்டி சைக்கிள்களைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் —

மானிப்பாய் பொலீஸார் அறிவித்துள்ளனர்

(உ-/)

## ஆள் கொணர்வு மனு தாக்கல் செய்ய நடவடிக்கை

யாழ்ப்பாணம் ஜன 29

வடபகுதியில் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு காணாமற் போனதாகக் கூறப்படும் அருளானந்தம் செல்வக்குமார், மாணிக்கம் டெனிகாந்த் ஆகியோர் தொடர்பாக ஆள் கொணர்வு மனு தாக்கல் செய்யப்படவுள்ளது.

மனித கௌரவத்துக்கான மன்றத்தினால் இம் மனு தாக்கல் செய்யப்படவுள்ளதால் இவர்களது உறவினர்களான அருளானந்தம் திலகவதி (யாழ்ப்பாணம்), மாணிக்கம் நாகேஸ்வரி (அளவெட்டி) ஆகியோரை தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ்ப்பாணம் மணியம் கட்டடத்தில் இயங்கும் இந்த மன்றத்தின் இணைப்பாளர் ஐ. சிவராசா கேட்டுள்ளார்.

(உ-5)

## தென்மராட்சிப் பகுதியில் கிராம அலுவலாகளின் ஆவணங்களும் தப்பவில்லை

தென்மராட்சி, ஜன. 29

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள தமது அலுவலகங்களில் ஆவணங்களை மீட்டு வரச் சென்ற கிராம அலுவலர்கள் பலர் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

கிராம அலுவலர்களின் அலுவலகங்கள் இருந்த கட்டடங்கள் சேதமடைந்த நிலையில் காணப்பட்டன அங்கிருந்த அனைத்து ஆவணங்களும் வெள்ளத்தில் நனைந்து பாவிக்க முடியாத அளவுக்குச் சேதமடைந்த நிலையில் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது

படையினரால் மீட்கப்பட்ட தென்மராட்சிப் பிரதேசத்தில் கிராம அலுவலர்களின் அலுவலக ஆவணங்கள் மீட்பதற்கு இதுவரை 17 கிராம அலுவலர்கள் அழைத்துச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

### உதயவாக்கு

ஆசையை வென்ற மனிதனை, உலகத்தில் எவராலும் வெல்ல முடியாது.

# பொருள்கள் விலை உயர்வுக்கு தொடரும் யுத்தமே காரணம்!

## ஒப்புக்கொள்கிறார் ஜனாதிபதி

பொருள்களின் விலை உயர்வு குறித்து குரல் எழுப்புபவர்கள் நாட்டில் யுத்தமொன்று நடைபெறுவதை மறந்துள்ளனர். யுத்தத்துக்காக 3,300 கோடி ரூபா மேலதிகமாகச் செலவிடப்படுவதினாலேயே பொருள்களின் விலை உயர்ந்துள்ளது. நாம் யுத்தத்தைத் தொடரும் அதேவேளை பொருள்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது.

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

விலைவாசி உயர்வு. நிதி நெருக்கடி மற்றும் சமாதான முயற்சிகள் தொடர்பாக ஆராயவென ஆளுங்கட்சி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சுதந்திரக்கட்சி அமைப்பாளர்கள் ஆகியோர் அடங்கிய விசேட கூட்டமொன்றை ஜனாதிபதி நடத்தினார்.

ஜனாதிபதி மாளிகையில் கடந்த 26 திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்ற இக் கூட்டம் சுமார் ஆறு மணி நேரம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகள் பற்றிய நம்பகத்தன்மை ஏற்படும் வரை அரசாங்கம் யுத்த நிறுத்தத்துக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளாது.

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சொல் ஹெய்மிடமிருந்து பேச்சு வார்த்தை பற்றிய விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு குறித்து அரசாங்கம் சாதகமான பதிலை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றது.

யுத்தத்தை வெற்றிகரமாகக் கொண்டு நடத்தும் அதே வேளை சமாதான முயற்சிகளையும் அரசாங்கம் முன்னெடுத்துச் செல்லும். புலிகள் யுத்த நிறுத்தத்தை அறிவித்தபோதும் யுத்த நிறுத்தமொன்றை மேற்கொள்ள ஓர் ஒழுங்கு முறையுள்ளது.

நோர்வேயின் சமாதான முயற்சிக்கு அரசாங்கம் பூரண ஆதரவு வழங்குகின்றது. பேச்சு வார்த்தையை ஆரம்பிப்பதற்கு சாதகமான பதில் புலிகளிடமிருந்து கிடைக்காத பட்சத்தில் அரசியல் தீர்வு முன் வைக்கப்படும்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அரசியல் தீர்வுதான் பிரதானமானது என்ற அரசின் நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை.

நாடு முகம் கொடுத்துள்ள நெருக்கடி நிலை இன்னும் ஒரு மாதத்தில்சுமுக நிலைக்கு திரும்பும். பொருள்களின் விலை உயர்வை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

பொருள்களின் விலை உயர்வு தொடர்பாக கிராமம் கிராமமாகச் சென்று மக்களுக்கு அறிவூட்டுமாறு சு.க. அமைப்பாளர்களுக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

யுத்தத்திற்காக 3,300கோடி ரூபா மேலதிகமாக செலவிட்டதாலேபொருள்களின் விலை உயர்ந்துள்ளது. எரிபொருள் விலை சகல நாடுகளிலும் உயர்ந்துள்ளது.

யுத்தத்தைத் திட்டமிட்டு ஒழுங்காகவும் வெற்றிகரமாகவும் மேற்கொள்வதாலே பொருள் விலை உயர்ந்துள்ளது. புலிகளுக்குப் பாரிய பின்னடைவு ஏற்பட்டு வருகிறது. யுத்தத்திற்கு விரைவில் முடிவு காண முடியும்— இவ்வாறு ஜனாதிபதி தெரிவித்தார். (ஐ)

## அபிவிருத்தி நிதிக்கு அன்பளிப்பு

நெல்லியடி, ஜன. 29

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச் சபைக்கு உதவி அரசாங்க அதிபர் ஒருவர் உட்பட இருவர் 10 ஆயிரம் ரூபாவை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை வைத்தியசாலையில் நடைபெற்ற கண்ணாடி வழங்கும் வைபவம், போசன கூட திறப்பு விழா வேளையில் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி. பி. வேலாயுதபிள்ளை 5 ஆயிரம் ரூபாவும் பருத்தித்துறையைச் சேர்ந்த திருமதி தெய்வானைப் பிள்ளை 5 ஆயிரம் ரூபாவும் மாவட்ட வைத்திய அதிகாரியிடம் அன்பளிப்புச் செய்தனர். ( ஐ — 109 )

## மீன் சந்தை அமைப்பு

நெல்லியடி, ஜன. 29

வல்வெட்டித்துறைச் சந்திப் பகுதியில் 75 லட்சம் ரூபா செலவில் மீன் சந்தை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

வல்வை நகர சபைத் தலைவர் எம். கே. சிவாஜிலிங்கம் தலைமையில் இவ் விழா இடம்பெறும். (ஐ.109)

## காணி கையளிப்பு வைபவம்

நெல்லியடி, ஜன. 29

பொலிகண்டியிலுள்ள சாரதா ஆச்சிரம காணி கையளிப்பும், முன்பள்ளி பாலர் பாடசாலை, பொது நூலகத் திறப்புவிழாவும் இன்று திங்கள் நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளன.

இவ் வைபவத்தில், வல்வை நகரசபைத் தலைவர் எம்.கே. சிவாஜிலிங்கம், பருத்தித்துறை ஸ்ரீசாரதா சேவாச்சிரம முதல்வர் சுவாமி சித்ரூபானந்தா உள்பட மலேசியாவிலிருந்து வருகைதந்துள்ள சாரதா ஆச்சிரமத் தொண்டர்களும் கலந்து கொள்வார்கள். (ஐ-109)

## இடவசதி இல்லாததால் சித்த விரிவுரைகள் தாமதம்

கோப்பாய், ஜன. 29

யாழ் பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறைக்கு நிரந்தரக் கட்டடம் இன்மையால் மாணவர்களுக்குரிய விரிவுரைகள் தாமதமடைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சித்த மருத்துவத்துறை கைதடியில் இருந்து இடம் பெயர்ந்த பின்னர் மருத்துவ பீடம், கலைப்பீட மாணவர் பொது அறை ஆகியவற்றில் இயங்கி வந்தது.

தற்போது கலைப்பீட மாணவர் பொது அறை மாணவர்கள் பாவனைக்கு விடப்பட இருப்பதால் சித்த மருத்துவத்துறைக்கு இடப்பற்றாக்குறைஏற்பட்டுள்ளது.

இதனால் இம்மாத நடுப்பகுதியில் ஆரம்பமாக இருந்த சித்த மருத்துவத்துறை அனைத்து வருட விரிவுரைகளும் பிற்போடப்பட்டுள்ளன.

சித்த மருத்துவத்துறைக்கு புதியதொரு கட்டடத்தை கொள்வனவு செய்யும் முயற்சியில் பல்கலைக்கழக நிர்வாகம் ஈடுபட்டுள்ளது. (ஐ-72)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற
ஆணையாளராகக் கடமையாற்றிய

உயர்திரு.

**வே. பொ. பாலசிங்கம்**

வடக்கு கிழக்கு உள்ளூராட்சி ஆணையாளராகப்
பதவி உயர்வு பெற்றிருப்பதைப் பாராட்டுவதுடன்
அவர் நீடுழி வாழ சத்தியசாயி பாபா
அருள் புரிவாராக!

**தலைவர், செயலாளர்,**
**உறுப்பினர், உத்தியோகத்தர்கள்,**
**ஊழியர் நலன்புரிச் சங்கம்,**
**சாவகச்சேரி பிரதேச சபை.**

(83526)

---

## பாராட்டுகிறோம்

★★★★★★★★★★★★★★★★★

**திரு. வே. பொ. பாலசிங்கம்**

(உள்ளூராட்சி ஆணையாளர் வடக்கு—கிழக்கு
மாகாணம், திருகோணமலை)

யாழ். மாநகரசபை ஊழியர் நலன்புரிச் சங்க
முன்னாள் தலைவரும் இச்சபையில் பலகாலம்
மாநகர ஆணையாளராகக் கடமையாற்றி
தற்போது வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி
ஆணையாளராகப் பதவி ஏற்றமையைப்
பாராட்டி வாழ்த்துவதுடன்
மேலும் பல உயர் பதவிகளைப் பெற்று
நீடுழி காலம் வாழ எல்லாம் வல்ல இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிச்சங்கம்,**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்.**

(சி/15036)

---

## கணக்காய்வு அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் 31 — 12 — 2000 ஆம் வரையான காலத்திற்குரிய கணக்காய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 25 - 10 - 98 இற்கு முற்பட்ட காலத்திற்கான கணக்குப் புத்தகங்கள், கணக்கு அறிக்கைகள் மற்றும் ஆவணங்கள் சங்கத்தில் இல்லாமையால், சங்கத்துடன் கொடுக்கல் வாங்கலில் ஈடுபட்டோர், வருமதிகள்/செல்மதிகள் இருப்பின் அதனை உறுதிப்படுத்துவதற்கு 05-02- 2001 க்கு முன்னர் எழுத்து மூலம் தொடர்பு கொள்ளவும். இத் திகதிக்குப் பின்னர் மேற்கொள்ளும் தொடர்புகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா.

**செயலாளர்** **தலைவர்**

தொடர்பு:-

**அரச கால்நடை வைத்திய காரியாலயம்**
சங்கரத்தை சந்தி (அருகாமை),
வட்டுக்கோட்டை.

(சி-15016)

---

## யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை
## மனைப்பொருளியல் டிப்ளோமா, அடிப்படைப் பயிற்சிக்கான
## விண்ணப்பம் கோரல்

அ) மனைப்பொருளியல் அடிப்படை பயிற்சி நெறி

தையல், மனையியல், பூவேலை, தலையலங்காரம், ஐசிங், சிற்றுண்டி தயாரித்தல், முதலுதவி, கூட்டுறவு ஆகிய விடயங்களை உள்ளடக்கிய 6 மாத காலப்பயிற்சி.

பதிவுக்கட்டணம் 150/- மட்டும், பயிற்சி இலவசம்.

ஆ) மனைப்பொருளியல் டிப்ளோமா

கூட்டுறவுச் சங்கங்களில் நடத்தப்பட்ட அடிப்படைப் பயிற்சியில் பயிற்சி பெற்றவர்களும் ஏனைய நிறுவனங்களில் அடிப்படைப் பயிற்சி பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். தொழிலசு தையல், டெயின்ரிங், ஐசிங், முகஒப்பனை, மேலதிக மனையியல் நுட்பங்கள் உள்ளடக்கப்பட்ட 6 மாத காலப்பயிற்சி.

பதிவுக்கட்டணம் 250/- பயிற்சி இலவசம்.

பயிற்சி பெற விரும்புவோர் 06-02-2001-ற்கு முன் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

மாவட்டச் செயலாளர், யாழ். மாவட்டக்
கூட்டுறவுச்சபை, கூட்டுறவாளர் வீரசிங்கம்
மண்டபம் 2 ஆம் மாடி, இல. 12,
கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(சி/15035) மாவட்டச் செயலாளர்.

---

## கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய முன்னாள் அதிபர்

**இராமலிங்கம் வேலுப்பிள்ளை**

அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு வேதனை அடைந்து கண்ணீர்ப்பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம். குடும்பத்தாருடன் இணைந்து ஆன்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,**
**யா/நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்,**
**நெடுந்தீவு.**

[83533]

---

## நெஞ்சம் நெருடும்
## 31 ஆம் நாள் நினைவலைகள்

எம் சக மாணவி காயத்திரியின்
சகோதரியின் கணவர்

**பொன்னையா கமலரூபன்**
[விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்]

அவர்கள் மண்ணுலகம் விட்டு நீங்கி மாதம் ஒன்று ஆனாலும் அவர் நினைவுகள் எம் மனதை விட்டு என்றும் நீங்காது!

**முதலாம் வருட மாணவர்கள்,**
**பிரயோக விஞ்ஞானபீடம்,**
**வவுனியா வளாகம், யாழ். பல்கலைக்கழகம்.**

[சி/15038]

# வவுனியா 'பாஸ்' நடைமுறைகளை தளர்த்த தளபதி பலகல்ல இணக்கம்

கொழும்பு,ஜன.29

வவுனியாவில் 'பாஸ்' நடைமுறையால் பொதுமக்கள் தொடர்ந்து அனுபவித்து வரும் கஷ்டங்களுக்குத் தீர்வுகாண வெகுவிரைவில் சாதகமான நடவடிக்கைகளை எடுக்க விருப்பதாக இராணுவத் தளபதி லெப டினனட் ஜெனரல் பலகல்ல உறுதியளித்துள்ளார்.

இது தொடர்பாக வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் நேரடியாக முறையிட்டதை அடுத்தே 'பாஸ்' நடைமுறையில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு இராணுவத் தளபதி இணக்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நிரந்தர வதிவிட 'பாஸ்' தவிர்ந்த ஏனைய 'பாஸ்' நடைமுறைகளில் ஆகக் கூடியது 3 மாதப் 'பாஸ்' மட்டுமே வழங்கப்படுகிறது. இதனால் பொதுமக்கள் பல்வேறு நெருக்கடிகளையும் அசௌகரியங்களையும் எதிர்கொள்வதையும் இராணுவத் தளபதியிடம் சித்தார்த்தன் எடுத்து விளக்கினார். (ஐ)

## கல்விச்சாலைக் காட்சிகள்



சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற வலிகாமம் மேற்கு பிரதேச செயலக தையல் மனையியல் பொருள்காட்சியினை வடக்கு - கிழக்கு மாகாணக் கிராம அபிவிருத்தித் திணைக்கள கிராம அபிவிருத்தி உதவியாளர் கு.பாலகிருஷ்ணன் நாடாவை வெட்டித் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம். அருகில பிரதேச செயலர் நா.வேதநாயகனும் காணப்படுகின்றார். (ஐ-175)



புங்குடுதீவு கணேசா மகாவித்தியாலய செயற்பாட்டறைக் கட்டட நூலகத்தினை அண்மையில் வேலணைப் பிரதேச சபைத் தலைவர் ந.கருணாகரகுருமூர்த்தி நாடா வெட்டி சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்தார். அச்சமயம் எடுக்கப்பட்ட படம் இது. அருகில் பாடசாலை அதிபரும் உள்ளார். *(படம்: வேலணைச் செய்தியாளர்.)*



மானிப்பாய் சென்.ஆன்ஸ் பாடசாலைக்கு பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடைத் திட்டத்தின் கீழ் தொலைக்காட்சிப் பெட்டி, வீடியோ டெக் என்பன அண்மையில் வழங்கப்பட்டன.

மானிப்பாய்த் தொகுதி ஈ.பி.டி.பி. அமைப்பாளர் வெலிச்சோர் அன்ரன் ஜோண்சன் அவற்றைப் பாடசாலை அதிபரிடம் வழங்குவதைப் படத்தில் காணலாம். (ஐ-185)



ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் 14 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட செயற்பாட்டுக் கல்விக்கான ஆய்வு மண்டபத்தை கல்வித் திணைக்கள பொறியியலாளர் கு.சிவபாலன் திறந்து வைக்கிறார். அருகே கல்லூரி அதிபர் க.சிவர்ஜி, உதவிக் கல்விப்பணிப்பாளர் அ.தற்பரானந்தன் ஆகியோர் காணப்படுகின்றனர். (ஐ)

## 62 ஆயிரம் பேர் சிகிச்சை பெற்றனர்

கோப்பாய்,ஜன.29

கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் கடந்த ஆண்டு மட்டும் 62 ஆயிரத்து 513 நோயாளிகள் சிகிச்சை பெற்றுள்ளனர்.

நாய்க் கடிக்காக 494 பேரும், வயிற்றோட்டநோய்க்காக 307 பேரும் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளனர். ஜுன் மாதம் மட்டும் வயிற்றோட்ட நோய்க்காக 90 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

பெருமளவு வளப்பற்றாக்குறை நிலவும் இவ்வைத்தியசாலையில் பெரும் எண்ணிக்கையான நோயாளிகள் சிகிச்சை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-72)

## முகாமைத்துவக் கருத்தரங்கு

நெல்லியடி,ஜன.29

வடமராட்சிப் பகுதியில் உள்ள வங்கி முகாமையாளர்கள், பாடசாலை அதிபர்கள், நகரசபை, பிரதேச சபை செயலாளர்கள், லயன்ஸ் கழக உறுப்பினர்களுக்கான, முகாமைத்துவக் கருத்தரங்கு அண்மையில் பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

வடமராட்சி லயன்ஸ் கழக அனுசரணையில் இடம்பெற்ற இக்கருத்தரங்குக்கு வடமராட்சி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் என்.சோமசுந்தரம் தலைமை வகித்தார்.

யாழ். அரசாங்க செயலக நிர்வாக உத்தியோகத்தர் கே.வீரபத்திர பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

யாழ்.பல்கலைக்கழக முகாமைத் துறைத் தலைவர் என்.நடராசசுந்தரம் உட்பட பலர் கருத்துரை வழங்கினார்கள். (ஐ-109)

## ஆசிரியர் செயலமர்வு

தென்மராட்சி,ஜன.29

தென்மராட்சி கல்வி வலயப்பாடசாலைகளில் தரம் 11 இல் வர்த்தக பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் பெப்ரவரி நான்காம் திகதியும் -

தரம் 6 இல் தமிழ்ப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு பெப்ரவரி பத்தாம் திகதியும் - நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறுமென வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ-117)

## கட்டட வேலை பூர்த்தி

கோப்பாய்,ஜன.29

சுமார், 5வருட காலமாக புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியில் இயங்கிவரும் புத்தூர் மெ.மி.த.க. பாடசாலை மீண்டும் பழைய கட்டடத்தில் இயங்க உள்ளது.திருத்த வேலைகள் பூர்த்தியடைந்து வருகின்றன.

1995 ஆம் ஆண்டு யாழ்குடா நாட்டில் இடம்பெற்ற 'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கையின் போது மிக மோசமாக சேதமடைந்திருந்த இப்பாடசாலை போதிய நிதி வசதியின்மையால் புனரமைப்புச் செய்ய முடியாது புத்தூர் ஸ்ரீ சோமஸ் கந்தக் கல்லூரியின் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. (ஐ-72)

## தடுப்பு மருந்துகள் வந்தன

யாழ்சுகாதார திணைக்களத்திற்குத் தேவையான ஏற்பு நோய்த் தடுப்பு ஊசி மருந்து மற்றும் குழந்தைப்பிள்ளைகளுக்குப் போடப்படும் நோய்த்தடுப்பு ஊசி மருந்துகள் விமானம் மூலம் கடந்த வாரம் எடுத்து வரப்பட்டுள்ளன. (ஐ-135)

# வாசகர் திருமுகம்

## பருத்தித்துறை ஓராம் கட்டை சந்தியில் லொறிக்காரர் சாகசம்!

பருத்தித்துறை நகரப்பகுதியில் ஓராம் கட்டைச் சந்தியை லொறி தரிப்பிடமாகப் பயன்படுத்துகிறார்கள். அந்தச் சந்தியோ ஏற்கனவே ஆபத்தானது. அதுவும் வீதி விபத்து நிறைந்த இந்தக் காலகட்டத்தில் சொல்லவா வேண்டும்!

இந்தச் சந்தியின் அருகில் பெரிய வெற்றுக் காணி ஒன்று இருக்கிறது. அதில் லொறிகளை நிறுத்துகிறார்கள். அங்கு இடப்பற்றாக்குறை வந்ததும் வீதியிலும் லொறிகளை வரிசையாக நிறுத்துகிறார்கள். அதுவோ போக்குவரத்து நிறைந்த வீதி. அந்த வீதியால் இன்னுமொரு பெரிய வாகனம் வரும் போது பாதசாரிகள், சயிக்கிள்காரர்கள் திணற வேண்டியுள்ளது. பெரிய ஆபத்துக்களைச் சந்திக்கவும் இடமுண்டு.

இதைவிடவும் மோசமானது என்னவெனில் இந்த லொறிகள் அங்கிருந்து திடீர் திடீரென புறப்படும். இரைச்சல் மட்டுமே கேட்கும். அவ்வளவு லொறிகள் மத்தியில் எந்த லொறி புறப்படுகின்றது எனத் தெரியாது.

லொறிச்சாரதிகள் வீதியால் செல்லும் எந்த வாகனங்களைப் பற்றியும் கருத்தில் எடுப்பதில்லை. அந்த லொறிச் சாரதிகள் அந்த இடத்தில் தாம் மட்டுமே அந்த வீதியைப் பாவிப்பதாக நினைத்துக் கொண்டு கண்டபடி அங்குமிங்குமாக வெட்டி 'சாகஸம்' புரிகின்றனர்.

இதனால் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் பாடசாலை மாணவர்களும் வயோதிபர்களும் தான். இந்தச் சந்தியைத் தாண்டியே பருத்தித்துறையிலுள்ள பிரபலமான 4 பாடசாலைகளுக்கும் மாணவர்கள் செல்ல வேண்டும். அத்துடன் அவ்விடத்தில் 4 தனியார் கல்வி நிறுவனங்களும் இருககின்றன.

மாணவர்கள் சமாந்தரமாகச் செல்கின்றார்கள் எனக் குறை கூறுகின்றார்கள். அது உண்மைதான். ஆனால் தற்போது வீதி விபத்து பற்றிய விழிப்புணர்வு மாணவர் மத்தியில் ஏற்பட்டு இருப்பதால் அவர்கள் பொறுப்புணர்வுடன் செயற்படுவதை அவதானிக்க முடிகிறது.

அத்துடன் பருத்தித்துறை சந்தை, கடைத்தெரு, அரச நிறுவனங்கள் பலவற்றிற்கும் இவ்வழியூடாகவே மக்கள் செல்லவேண்டும்.அவர்கள் படும் சிரமங்களோ ஏராளம். நேரில் பார்த்தால் தான் புரியும்.

இது சம்பந்தமாக யாராவது நடவடிக்கை எடுப்பார்களா?

*பருத்தித்துறை.* **- பாதிக்கப்பட்ட மாணவர்கள்**

## நோயாளர் கொழும்பு செல்ல விசேட ஒழுங்கு முறை அவசியம்

யாழ்.குடாநாட்டிலிருந்து ஒருவர் வெளியே செல்ல வேண்டுமானால் எத்தனையோ படிமுறைகளில் பாதுகாப்பு அனுமதியைப் பெற்றுச் செல்ல வேண்டும். அனுமதி பெறுவதிலும் பிரயாணத்தை மேற்கொள்வதிலும் பல கஷ்டங்களையும் இன்னல்களையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது. பயணத்துக்கான பயணச்சீட்டுப் பெறும் வரை, கிராம சேவையாளர், உதவிஅரசாங்க அதிபர் உட்பட ஒருவர் சுமார் ஏழு படிநிலைகளைத் தாண்ட வேண்டியிருக்கிறது!....இதற்காகப் பல மணிநேரத்தையும் பல நாள்களையும், ஏன் சில கிழமைகளையும் வீணே செலவிடவேண்டியிருக்கிறது.

இம்மாதம் இரண்டு குழந்தைகளை உடனடி சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையிலிருந்து கொழும்பு சிறுவர் வைத்திய சாலைக்கு விமான மூலம் அவசரமாக அனுப்ப வேண்டியிருந்தது. ஒரு குழந்தைக்கு வயது ஆறு மாதங்கள், மற்றைய குழந்தை பிறந்து 5 நாள்கள் தான்.

வைத்தியர்களுடைய கனிவான வேண்டுகோளிற்கு இணங்கி, மேலே சொல்லப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு அனுமதி பெறுவதையும், பயணச் சீட்டுப் பெற்றுக் கொடுப்பதையும், நடைமுறைச் சிக்கல்களைக் கருத்திற் கொண்டு மனமுவந்து ஏற்றுக் கொண்டேன்.

பச்சிளம் குழந்தைகள் என்ற படியினால்; பாதுகாப்பு அனுமதி, பயண அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதிலும், பயணச்சீட்டுப் பெறுவதிலும்; எல்லா அதிகாரிகளும் கருணையுடனும் காருண்யத்துடனும் நடந்து கொண்டார்கள் அவர்களுக்கு என் நன்றி உரித்தாகட்டும்.

ஆனால் முதலிலே ஆறு மாதங்களேயான குழந்தையையும், பெற்றோரையும் அனுப்புவதற்காக;

எல்லாமாக ஒன்பது அதிகாரிகளிடத்திலே கையொப்பம் பெற வேண்டியிருந்தது.

இதனால் அவசர சிகிச்சையாக இருந்தும், ஓரிரு நாள்கள் தாமதமாகவே பயணம் மேற்கொள்ளப்பட்டது. வைத்தியசாலை சிற்றாலய ஆன்மகுரு என்ற படியினாலே ஒன்பது, பத்து மணித்தியாலங்களைச் செலவழித்து ஓரிரு நாள்களிலேயே இவர்களை அனுப்ப முடிந்தது.

ஆன்மகுரு என்ற படியினால் சிலருடைய கேள்விக்குத் தக்க பதில் கொடுத்து, பலருடைய முணுமுணுப்புக்களுக்குச் செவி மடுக்காது, பல வரிசைகளைத் தாண்டி, இவ்வுதவியைச் செய்ய முடிந்தது.

இந்த அனுபவத்தில் இருந்து நான் விளங்கிக் கொள்ள விளைவது; இத்தனை படிமுறைகளும் பல நோய்களினால் வருந்துகின்ற நோயாளருக்குத் தேவைதானா?

இத்தாமதத்தை நிவர்த்தி செய்ய முடியாதா?

ஏன் ஆபத்திலே இருக்கும் அவசர நோயாளருக்குப் பாதுகாப்பு அனுமதி, பயண அனுமதிப்பத்திரம், பயணச்சீட்டுப் பெறுவதில் விசேட ஒழுங்கு முறைகளை அமைக்கக் கூடாது?

இம் முழுச் செயற்பாட்டினையும் இலகுவாகவும் எளிதாகவும், துரிதமாகவும் மேற்கொள்ள அதிகாரிகள் அதிக கவனம் எடுத்து, நோயாளர்களின் இத்துயரத்தைப் போக்க ஆவன செய்வார்கள் என எதிர் பார்க்கின்றேன்.

*புனித வேளாங்கண்ணி ஆலயம்,*
*போதனா வைத்தியசாலை*
*யாழ்ப்பாணம்.* **அருள்திரு.செ.அன்புராசா**

## கிளை முகாமையாளர் மறுக்கிறார்

கடந்த 05-01-2001 ஆம் திகதி அன்று வெளிவந்த உதயனின் 5 ஆம் பக்கத்தில் உள்ள *'வாசகர் திருமுகத்தில்'* எமது கிளையான நவிண்டில் 15 கிளையில் சென்ற நிவாரண கொடுப்பனவில் பழுதடைந்த அரிசியும் குறைந்த சீனியும் வழங்கப்பட்டதாக வி.எஸ்.குமார் என்பவர் பத்திரிகை மூலம் வெளியிட்டார். இக்கிளை முகாமையாளராகிய நான் அதனை முற்றுமுழுதாக மறுக்கிறேன். இப்பழியை சுமத்தியவர் எம்மிடம் வந்து நிவாரணம் பெறாதவர் என்பதையும் முன் விரோதம் காரணமாக அவமானப்படுத்தவே இப்பழியைச் சுமத்தினார் என்பதையும் நாம் அறியத் தருகிறோம்.

*கிளை முகாமையாளர்*
*நவிண்டில் - 15* **- வே.திவாகரன்**

உ
சிவமய

காரைநகர்,



# பாலாவோடை குறிஞ்சாக்குளி ஸ்ரீ
# மகா கும்பாபிஷே
29.01

## வரலாற்றுப் பழைமை மிக்க ஆலயம்

காரைநகரிலுள்ள அருள்மிகு அம்மன் ஆலயங்களான பெருங்கோயில்களில் ஒன்றாக விளங்குவதே பாலாவோடை குறிஞ்சாக்குளி ஸ்ரீ முத்துமாரியம்மன் திருக்கோயிலாகும். இவ்வாலயம் ஆரம்ப காலத்தில் மடாலயமாக இருந்து சைவக் குருவானவரால் பூசை செய்து வழிபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறு வரலாற்றுப் பழைமை மிக்க இவ்வாலயம் நீலக்கடல் ஓரத்தில் அமைந்திருப்பது மிகச் சிறப்பம்சமாகும். பலவகைச் சிறப்பு மிகு இவ்வாலயத்தின் வருடாந்த மஹோற்சவம் வைகாசி விசாகப் பூரணையை பத்தாம்நாள் திருவிழாவாகக் கொண்டு நிறைவெய்துவதும் அதிவிஷேடச் சிறப்பம்சமாகும். இதனை அடுத்து 11ஆம் நாள் பூங்காவனத் திருவிழாவும், அதன்பின் விசேட விழாவாக பொங்கல் நடத்தி மடைபரவி வழிவெட்டும் முறையான வேள்வியும் நடைபெறுவது வழமையானதொன்றாகும்.

இன்று நடைபெறும் இத் திருக்கோயிலின் மகா கும்பாபிஷேகம் புதிதாக அமைந்த இராஜகோபுரத்துடன் நடைபெறுவது குறிப்பிடத்தக்கதாகும். அதாவது இன்றைய மஹா கும்பாபிஷேகம் அம்பாளுக்கும் இராஜகோபுரத்துக்கும் மற்றும் பரிவார மூர்த்திகளான பிள்ளையார், சுப்பிரமணியர், நவக்கிரகம், வைரவர், சண்டேசுவரி ஆகியவைகளுக்கும் நடைபெறுகின்றது.

இத்திருக்கோயிலில் கடைசியாக 1977 இல் கும்பாபிஷேகம் நடைபெற்ற பின் இப்போர்க்கால சூழ்நிலையிலும் எல்லாம்வல்ல ஸ்ரீமுத்துமாரி அம்பாளின் திருவருட் கடாட்சத்தினால் இன்றைய கும்பாபிஷேகம் நடைபெறுவது இக்கிராம அடியார்களின் தவப்பயனாகும். அத்தோடு கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பது போல இக்கிராம அடியார்களுக்கு கோபுர தரிசனம் கிடைத்திருப்பது. மிகப்பெரும் பேறாகும். இப்பகுதி அம்பாள் பக்தர்களின் பரவசமாக ஓர் அறங்காவலர் சபையும் அங்குரார்ப்பணமாகியுள்ளதும் அம்பாளின் அருட்பேறாகும்.

இத்திருக்கோயிலில் ஒவ்வொரு மாதமும் தமிழ் முதல் திகதிகளில் மாதப்பிறப்புத் திருவிழாக்கள் நடைபெற்று வந்தன. அத்துடன் ஒவ்வொரு மாதமும் பௌர்ணமித் திருவிழாவும் நடைபெறுவது வழமையாகும். இவ்வாறு பாலாவோடை குறிஞ்சாக்குளி ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருக்கோயிலில் அடியார்களினால் நடத்தப்பட்ட சகல திருவிழாக்களும் தொடர்ந்து நடைபெற எல்லாம் வல்ல முத்துமாரி அம்பாள் திருவருள் பாலிக்க வேண்டும் என அம்பாள் தாள் பணிந்து வேண்டுகிறோம். மேலும் ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் மஹா கும்பாபிஷேகம் இனிதே நிறைவெய்திட வேண்டுவதோடு எம்பணி தொடர எம்பிராட்டி துணைபுரிவாளாக.

ச.ச.இராசரத்தினம் *(தலைவர்)*
*அறங்காவலர் சபை,*
*பாலாவோடை ஸ்ரீ முத்துமாரி அம்மன்.*

---

## அருள் சுரக்கும் ஸ்ரீ முத்துமாரிக்கு மகா கும்பாபிஷேகம்

"என் கடன் பண் செய்து கிடப்பதே" எனும் மணிவாசகரின் அருள் மொழி போன்று அம்பாளுக்குத் தொண்டு செய்திட எமக்குக் கிடைத்த பெரும்பேறு தவப்பயனே ஆகும். அம்பாளின் அடியாருள் ஒருவனாய் அடியேன் ஆற்றும் பணி நன்றே நடந்திட, நல்லருள் நல்கிட நாளும் குறிஞ்சாக்குளி ஸ்ரீமுத்துமாரியம்மன் திருவருளே வேண்டும்.

பாலாவோடையில் குடிகொண்ட குறிஞ்சாக்குளி ஸ்ரீமுத்துமாரியம்பாளின் மகா கும்பாபிஷேகத்தைக் காண்பதற்கு முன்னதாக, எம்முடன் தோளொடு தோள் நின்று அம்பாளின் பணியில் முழுப்பங்காற்றிய எம் மைத்துனரான க.பொன்னுத்துரையின் திடீர் மரணம் எமக்குப் பெரும் இழப்பாகும். இதற்கு மத்தியில் அம்பாளின் கும்பாபிஷேகம் இனிதே நிறைவேற அவளருளே எமக்குத் துணைக்குத் துணையாக வல்லமை வந்தது. அம்பாள் ஆலயத்தில் 1977ஆம் ஆண்டு நடைபெற்ற கும்பாபிஷேகத்துக்குப் பின்னர் அடுத்து நடைபெறும் கும்பாபிஷேகம் இதுவாகும். இக்கோயிலின் இன்றைய கும்பாபிஷேகத்தின் மிகச்சிறப்பாக புதிதாக அமைக்கப்பட்ட இராஜ கோபுரத்திற்கான கும்பாபிஷேகமும் குறிப்பிடத்தக்கதாகும்.

இத்தனையும் அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்பாளின் திருவருளாலேயே நடந்தேறுகின்றவை என்பது என் நம்பிக்கை.

உலகத்தின் சக்தியாக விளங்கும் அன்னை பராசக்தியின் வடிவமே முத்துமாரி. கருணைக் கடலான அவளின் பாதார விந்தங்களை விழுந்து, எமது நாட்டையும் மக்களையும் பீடித்துள்ள இன்னல்கள் நீங்க இறைஞ்சுவோமாக. முத்துமாரித் தாயே முழு மக்களுக்கும் அருள் சுரந்து நல்வாழ்வு தா!

எஸ்.எஸ்.பாலச்சந்திரன்,
*செயலாளர்,*
*அறங்காவலர் சபை.*



ஸ்ரீ முத்தும


**யாழ்.காலணியகம்**
11,நவீனசந்தை,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**C.S.K.S.**
**சிவா வர்த்தக நிலையம்**
102, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

பாலாவோடை அம்மன் துணை
**இளவரசி ரெக்ஸ்ரைல்**
(அனைத்துப் புடைவை வகைகளின் சங்கமம்)
57,நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.

**ஸ்ரீ வேல் றேடேஸ் பல்பொருள் வாணிபம்**
211A, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
"ஆதி சிவனுடைய சக்தி எங்கள்
அன்னை அருள் பெறுதல் முக்தி
மீதி உயிர் இருக்கும்போதே அதை
வெல்லல் சுகத்திற்கு யுக்தி" என்றும்

அம்பிகை அருள் அனைவருக்கும்
கிடைக்க அருள் புரியட்டும்!
**நா.பிரபாகரன்**
59,60, சத்திரத்துச் சந்தி, யாழ்ப்பாணம்.

அம்பிகை கும்பாபிஷேகம் இனிதே நிறைவேறட்டும்!
**தேவி ஸ்ரோர்ஸ்**
102, பழைய பூங்கா வீதி, சுண்டுக்குளி,யாழ்ப்பாணம்.

அம்பிகை துணை
**மலர் புடைவை அகம்**
18, (67A) பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

அம்பிகை கும்பாபிஷேகம் இனிதே நிறைவேறட்டும்!
**சிவகணேஷன் ஸ்ரோர்ஸ்**
(அழகிய ஜவுளிகளின் ஆலயம்)
41, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

**ஐங்கரன் ஸ்ரோ**

**C.S.K.K**

**S.V.முருகேசு**

பாலாவோடை அம்மன் கும்பாபிஷேகம் இனிதே நிறைவேறட்டு
**இ.ச.பேரம்பலம் சக நி**

**(PH) பேப்ப ஹ**

அம்பிகை அருளாட்சி அனைவருக்கும் கிடைப்பதாக. உயர்தரமான க
மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். 303,
**SRI MURUGAN COMPUTER SYSTEMS** E-Ma

**RUPA VERSATILE TRADES** Di St
No.104 A, Stanley Road, Jaffna.

**சீமாட்டி புடைவைக் க**
(வண்ணப் பட்டுப் புடைவைகளின் சங்கமம்)

# கட்டியிருந்த முரட்டுக் காளையை அவிழ்த்து விட்ட நிலையில் அரசு!

ரூபாவின் பெறுமதி மளமளவென வீழ்ச்சி கண்டுவருவதை அடுத்து உருவாகியுள்ள பொருளாதார நிலைமையை விளக்குகிறது இக்கட்டுரை.

பிரபல பொருளியல் ஆசிரியர் வரைந்த இக்கட்டுரையின் முதல் பகுதி நேற்றைய உதயனில் வெளியாகி இருந்தது. அதன் இறுதிப் பகுதி இது.

### IV சாதக விளைவுகள்

1. ஏற்றுமதியாளர் வருமானங்கள் அதிகரிக்கலாம். ஏற்றுமதியாளர்கள் ரூபா வடிவில் அதிக வருமானங்களைப் பெறக்கூடியதாக இருக்கும். வெளிநாட்டு நாணய வடிவில் இலங்கை ஏற்றுமதிப் பொருள்கள் மலிவாக அமைவதால் ஏற்றுமதிகள் அதிகரிக்கும் வாய்ப்புகளும் இருப்பதால் ஏற்றுமதித் துறையில் வளர்ச்சி காணப்படும்.

2. இறக்குமதிப் பொருள்களின் விலைகள் ரூபாவில் அதிகரிப்பதனால் இறக்குமதி அளவுகள் குறையலாம். இதனால் அந்நிய நாணய வடிவில் இறக்குமதிச் செலவுகள் குறையலாம்.

3. உல்லாசப் பிரயாணிகளுக்கு இங்கு தங்குவது அவர்களது நாணயத்தில் குறைந்த செலவாக அமைவதால் அவர்களது வருகை அதிகரித்து சுற்றுலாத்துறை வளர்ச்சியடையலாம். அவை மூலமான அந்நிய செலாவணி வருவாய் அதிகரிக்கும்.

4. இறக்குமதிப் பொருள்களின் விலை உயர்வு இறக்குமதிப் பதிலீட்டுப் பொருள்களின் உள்நாட்டு உற்பத்திகளை அதிகரிக்கலாம். குறிப்பாக நெல், மிளகாய், உருளைக் கிழங்கு மற்றும் உப உணவு உற்பத்திகள் அதிகரிக்கலாம்.

5. வட்டிவீதங்களைக் குறைக்கக் கூடியதாக இருக்கும். கடந்த சில மாதங்களாக வர்த்தகப் பற்றாக்குறைகள் காரணமாகத் தொடர்ச்சியான நாணயப் பெறுமதித்தேய்வு எதிர்பார்க்கப்பட்டதன் விளைவாக அவற்றை உறுதிப்படுத்தும் வகையில் வட்டிவீதங்களை அதிகரிக்க வேண்டிய அவசியமேற்பட்டது. தற்போது ரூபா மிதக்கவிடப்பட்டதால் வங்கியில் கடன் வட்டிவீதம் குறையலாம்.

6. வட்டிவீத வீழ்ச்சியானது உள்நாட்டுக்குள் முதலீட்டையும் நுகர்வையும் அதிகரிக்கும். இவ்வகையில் முதலீடும் நுகர்வும் அதிகரிப்பது பொருளாதாரத்தை சுறுசுறுப்பான (Humming) நிலையில் வைத்திருக்க உதவும்.

7. ரூபாவின் மிகைப் பெறுமானத்தை (Over valued Currency) நீக்கி, உண்மைத் தன்மையான நாணயமாற்று வீதத்தைப் பேணுவதன் மூலம் அந்நிய செலாவணிச் சந்தையிலுள்ள கறுப்புச்சந்தையை நீக்கவும் உதவும். இத்தகைய நிலைமை ஏற்றுமதிகளின் போட்டித் தன்மையைப் பேணுவதனூடாக ஏற்றுமதியை அதிகரித்து ஏற்றுமதி வருமானத்தைப் பேணவும், இறக்குமதிகளைக் குறைத்துக் கொள்ளவும் வழியமைக்கும்.

8. ஏற்றுமதியாளர்கள், வெளிநாடுகளில் வேலைசெய்வோர் தாம் பெறும வருமானங்களில் பெரும்பகுதியை வெளிநாடுகளிலேயே முடக்கி வைத்துள்ளனர். இதனை அவர்கள் இங்கு கொண்டுவருவதற்கு உந்து சக்தியாக அமையலாம்.

9. வெளிநாட்டு முதலீடுகளை வரவழைப்பதற்கும் உதவும்.

10. உள்ளூர் மூலவளப் பயன்பாடுகள் அதிகரிக்கும். வேலை வாய்ப்புகள் பெருகலாம்.

11. மேற்கூறப்பட்டவை நிகழுமையின் வர்த்தகநிலுவை, சென்மதிநிலுவை என்பன சாதகமடையலாம் என்றும் நீண்ட காலத்தில் ரூபாவின் பெறுமதியை உறுதிப்படுத்தும் என்றும், நாணயக் கொள்கையையும் (Monetary Policy) வெளிநாட்டு நாணயமாற்று வீதக் கொள்கையையும் (Exchange Rate Policy) ஒத்திசைவாக ஒழுங்கமைக்கவும் இது உதவும் என்றும், முதலீட்டையும் நீண்டகால நோக்குடனான பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்குப் பங்களிப்பைச் செய்யுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## ஒன்றில் ஒன்று தங்கி உள்ள யுத்தமும் பொருளாதாரமும்

### V பாதக விளைவுகள்

1. ரூபாவின் பெறுமதி தொடர்ந்து வீழ்ச்சியடையலாம். மிகப் பாரிய யுத்த, பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ள காலகட்டத்தில் இவ்வாறான நடவடிக்கையினால் ரூபாவின் பெறுமதி வேகமாகவும் மோசமாகவும் வீழ்ச்சியடையலாம். சிறிய அளவிலான வெளிநாட்டு நாணயச் சந்தையைக் கொண்டுள்ள இலங்கையானது சிங்கப்பூர் போன்ற உறுதியான பொருளாதாரப் பின்புலத்தைக் கொண்ட நாடுகளைப் போன்று ரூபாவைச் சுதந்திரமாக மிதக்கவிட்டுள்ளமையானது ரூபா மீதான நம்பிக்கையை இழக்கச் செய்து உள்நாட்டு, வெளிநாட்டு நிதிச் சந்தை நடவடிக்கைகளிலும், வர்த்தக நடவடிக்கைகளிலும் பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும். ஏற்றுமதி, இறக்குமதியில் பெருமளவில் தங்கியுள்ள இலங்கையில் இதன் தாக்கம் மிகவும் உயர்ந்தளவில் காணப்படும்.

2. ரூபா அடிப்படையில் கூடுதல் விலை கொடுத்து இறக்குமதி செய்வதால் இறக்குமதிப் பொருள்களின் உள்நாட்டு விலைகள் அதிகரிக்கும். ஏற்கனவே இறக்குமதி செய்து வைத்திருந்த பொருள்களின் விலைகளைக் கூட, வியாபாரிகள் தற்போது உயர்த்தியுள்ளனர். புதிய நாணயமாற்று வீதப்படி இப்பொருள்களை இறக்குமதி செய்யும் போது மேலும் விலைகள் அதிகரிக்கும். இறக்குமதிச் செலவுகள் அதிகரிப்பதாலும் (நாணயத்தின் உறுதியற்ற தன்மையாலும்) சில இறக்குமதிப் பொருள்களின் தொகையும் குறைவடையக் கூடிய அபாயமும் காணப்படுகிறது. இந்நிலையில் அப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படுவது தவிர்க்கமுடியாததாகி விடும். உதாரணமாக முன்பு கொழும்பில் 31.50 சதத்திற்கு விற்கப்பட்ட ஒரு கிலோ சீனி 35 ரூபாவாகவும், 45 ரூபா விற்கப்பட்ட பருப்பு ஒரு கிலோ 50 ரூபாவாகவும், பெரிய வெங்காயம் ஒரு கிலோ 30 ரூபாவிலிருந்து 35 ரூபாவாகவும், செத்தல் மிளகாய் கிலோ 88 ரூபாவிலிருந்து 105 ரூபாவாகவும் உடனடியாகவே அதிகரித்துள்ளன.

3. தங்கத்தின் விலைகளும் உயர்ந்துள்ளன. இது ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியைக் காட்டப் போதுமானதாகும். ரூபா பெறுமதி வீழ்ச்சியைத் தொடர்ந்து இலங்கை வங்கி விற்பனை செய்யும் 24 கரட் ஒரு பவுண் தங்கத்தின் விலை கடந்த வாரம் 6840 ரூபாவாவிலிருந்து தற்போது 7,170 ரூபாவுக்கு உயர்ந்துள்ளது. இது ஆபரணத் தொழிலில் நிச்சயமற்ற நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது.

4. முழுமையாக நோக்குகையில் இலங்கையில் தீவிர பணவீக்கம் உடனடியாக உருவாகியுள்ளது. இறக்குமதி முடிவுப்பொருள்களின் வழியாகவும், மூலப்பொருள்கள் வழியாகவும், கூலிச்சம்பள உயர்வுகளூடாகவும் தொடர் பணவீக்கம் ஒன்றுக்குள் நாடு செல்லக் கூடிய அபாயநிலை காணப்படுகின்றது.

✪ வரிச்சுமையின் சுமையினாலும், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினாலும் ஏற்கனவே நசுங்கியுள்ள மக்கள் இந்த முடிவினால் மேலும் பாதிகப்படுவதைத் தடுக்க முடியாதிருக்கும்.

✪ பணவீக்கத்தின் காரணமாக ரூபாவின் வெளிநாட்டு நாணய மாற்றுப் பெறுமதி தொடர்ந்து வீழ்ச்சியடைந்து செல்வதை தடுக்கமுடியாதிருக்கும். இது ரூபாவை மிதக்க விட்டதன் மூலம் அடைய எதிர்பார்க்கப்பட்ட நன்மைகளை இல்லாமல் செய்து விடக் கூடிய அபாயநிலை உண்டு.

4. மக்களிடையேயான வருமான ஏற்றத்தாழ்வு அதிகரிக்கும். ஏற்றுமதித் துறை, உல்லாசப்பயணத்துறை, வெளிநாட்டு வேலைவாய்ப்பில் பணம் சம்பாதிப்போர் போன்றோரது ரூபா வடிவிலான வருமானங்கள் அதிகரிக்கும். மறுபுறம் நிரந்தர வருமானம் பெறுபவர்கள், சேமிப்புக்களை ரூபாவடிவில் வைப்பிலிட்டோர், வறியவர்கள் மிக மோசமாக பாதிக்கப்படுவர். பட்டினி நோய் என்பவற்றினால் மரணங்கள் என்பன நிகழலாம்.

5. இலங்கையின் பிரதான ஏற்றுமதிகளாக விளங்கும் கைத்தொழில் ஏற்றுமதிகளாகவும் (ஆடை, பெற்றோலிய உற்பத்திகள்) அதிகளவு இறக்குமதிகளை கொண்டிருப்பதனால் ஏற்றுமதியில் அதிகரிப்பு ஏற்படும் நிலையில் இறக்குமதிகளிலும் அதிகரிப்பினை ஏற்படுத்தவே செய்யும். அத்துடன் இறக்குமதி செய்யப்படுபவற்றில் பெரும்பாலானவை அரிசி, மா, பால்மா, மிளகாய், பருப்பு, சீனி, பெற்றோலியப் பொருள்கள், உரவகைகள் போன்ற கேள்வி நெகிழ்ச்சி குறைந்த அத்தியாவசியப் பொருள்களாக இருப்பதால் இறக்குமதி பெருமளவு குறைய மாட்டாது. எனவே வர்த்தக நிலுவை, சென்மதி நிலுவை என்பன பாதகமாக அமைந்து நாணயப் பெறுமதி தேய்விற்கே தொடர்ந்து இட்டுச் செல்லும் நிலை காணப்படுகிறது.

6. அரச வரவு செலவு திட்டத்திலும் செலவுகள் அதிகரித்து பற்றாக் குறையை ஏற்படுத்தும். இப்பற்றாக் குறை நிதியீட்டம் வங்கித்துறைகளில் கடன் படவேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்திப் பணவீக்கத்துக்கும் அதனூடாக நாணயப்பெறுமதி தேய்விற்கும் இட்டுச் செல்லும்.

7. வெளிநாட்டில் கல்வி பெறுவதற்கான கட்டணங்கள் செலவுகள் அதிகரிக்கும். வெளிநாடு செல்வதற்கான கட்டணங்கள் அதிகரிக்கும்.

8. போட்டி நிலையில் வர்த்தக வங்கிகளால் நிர்ணயிக்கப்படுவதால் நாணய மாற்றுவீதக்கொள்கை, நாணயக் கொள்கை என்பவற்றினூடாக அரசினால் பொருளாதாரத்தை வழிப்படுத்த முடியாதிருக்கும். கட்டியிருந்த முரட்டுக்காளையை அவிட்டு விட்ட பின் கட்டிவைக்க முயலுவதை போன்று அரசு பொருளாதாரத்தை உறுதிப்படுத்த அவலப்பட நேரிடும். வெளிநாட்டு வங்கிகளினதும் நிறுவனங்களாதும் ஆட்சிக்குள் நாடு சிக்க வேண்டிவரும்.

9. அரசியல் ரீதியில் எதிர்ப்புப் போராட்டங்கள், கிளர்ச்சிகளையும் அவற்றின் பாதிப்புக்களையும் பொருளாதாரம் தாங்க வேண்டியதாக இருக்கும். அரசியல் மாற்றங்களும் இடம் பெறலாம்.

### VI அறைகூவல்

மேற்காட்டிய பாதக விளைவுகளிலிருந்து மீளுவதற்கு நாடு எதிர்கொள்ளும் பிரதான அறைகூவலாக அமைந்திருப்பது தொடரும் யுத்தமாகும். அதனை நிறுத்திச் சமாதானத்தை ஏற்படுத்தப் போவதாக பதவியிலிருந்த அரசும், பதவிக்கு வந்த அரசும் தொடர்ந்து கூறிவந்த போதும் உள்ளார்ந்த உணர்வுடன் எந்த அரசியல் தலைமையுமே சிந்தித்ததாகத் தெரியவில்லை. அவ்வாறான உணர்வுடன் அரப்பணிப்புடன் சமாதானத்தை ஏற்படுத்தினால் மட்டுமே நாடு நெருக்கடிகளிலிருந்து ஓரளவு விடுபடக் கூடிய சாத்தியம் காணப்படுகிறது.

நாடு எதிர்நோக்கும் அடுத்த முக்கிய பிரச்சினை தீர்க்கதரிசனமற்ற பொருளாதாரக் கொள்கைகளைப் பின்பற்றி வருவதாகும். உள்ளூர் விவசாயத்துறை முற்றாகவே செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளது. இறக்குமதிப் பொருள்களின் விலைகள் உயரினும் அவற்றின் உள்நாட்டு உற்பத்திகளை அதிகரிக்கக்கூடிய அடிதளம் உடைக்கப்பட்டுவிட்டது.

ஏற்றுமதி நோக்கிய கைத்தொழில கொள்கை முன்வைக்கப்பட்ட போதும், முக்கிய ஏற்றுமதியாக விளங்கும் (53%) ஆடைகள் உட்பட கைத்தொழில்களுக்கு வேண்டிய மூலப் பொருள்கள் உற்பத்தி எதுவும் உருவாக்கியிருக்கவில்லை. இன்றும் அதிக இறக்குமதி உள்ளீடுகளைக் கொண்ட ஏற்றுமதிகளே முதன்மை ஏற்றுமதிகளாக விளங்குகின்றன. இவற்றின் தேறிய வருமானம் மிக்க குறைவாக 30 வீதம் வரையே காணப்படுகின்றது. ஆடைகள் ஏற்றுமதியிலும் கூட உலக வர்த்தக அமைப்பின்(WTO) ஏற்பாட்டிற்கமைய 'பலிநஸ்' உடன் படிக்கைகள் நீக்கப்படும் போது அவற்றிற்கான ஏற்றுமதி அனுமதிப் பங்குகள் இல்லாது உலக சந்தையில் போட்டியிடக்கூடிய வகையில் தரத்திலும், விலையிலும் முன்னேற்றம் காணப்படவில்லை.

### முடிவுரை

நாட்டின் உற்பத்தி, வருமானம் வளர்ச்சியடைந்து வருகின்றது; இதன் மூலம் சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கான பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளக்கூடியதாக அரசின் பொருளாதார நிலை முன்னேற்றம் கண்டுவருகின்றது; வேலையற்றோருக்கு வேலை வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுவருகின்றது; வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு சமுர்த்தித் திட்டத்தின் மூலம் நிவாரணம் வழங்கப்படுகின்றது; பாரிய யுத்த செலவினங்களுக்கு மத்தியிலும் மக்களைப் பட்டினிக்குட்படுத்தாது அவர்களது தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன என்று ஆட்சியாளர் கூறிவருகின்றனர்.

**வே.கருணாகரன்**

உண்மையில் அரசு வடக்கு கிழக்கு யுத்தம், பொருளாதார யுத்தம் இரண்டு யுத்தங்களை ஒரே நேரத்தில் தொடர்கின்றது. இவையிரண்டும் ஒன்றில் ஒன்று தங்கியுள்ளவையாகும் கடந்த 17 வருடங்களாக நாட்டைச் சீரழித்து வரும் யுத்தத்தின் காரணத்தைக் கண்டு அதற்குத் தீர்வு காணாதவரை ரூபா நாணயத்தின் தேய்வும், நாட்டின் உடைவும் தவிர்க்க முடியாததாகி விடும்.

எனவே யுத்தம் நிறுத்தப்பட்டு அனைவரும் மகிழ்வுடன் வாழ எல்லோரும் இறைவனை வேண்டுவோமாக!

✱

---

# தொண்டர் ஆசிரியர் விவகாரம்; கல்வி அமைச்சருடன் ஈ.பி.டி.பி. பேச்சு

யாழ்ப்பாணம், ஜன.29

தொண்டர் ஆசிரியர்களது நியமனம் தொடர்பாக ஈ.பி.டி.பி. அமைப்பு கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்தவுடன் பேச்சு நடத்தி உள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தொண்டர் ஆசிரியர்களாக கடமை புரிகின்றவர்களுக்கான நியமனம் வழங்கப்படுவது தொடர்பாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

வடக்கு-கிழக்கில் நிலவுகின்ற போர்ச் சூழலுக்கு மத்தியிலும் - கஷ்டப் பிரதேசங்களுக்கான போக்குவரத்து வசதியீனங்களுக்கு இடையிலும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக தொண்டராசிரியர்கள் பெரும் பங்காற்றியுள்ளனர். இம் மாகாணத்திலுள்ள மாணவர்களின் கல்வி வளர்ச்சி எந்த வகையிலும் பாதிப்படையக்கூடாது என்பதற்காக பணி புரிந்தவர்களின் நிலைமைகள் குறித்து கல்வி அமைச்சருக்குச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதனையடுத்து அடிப்படைத் தகைமைகள் மற்றும் மூன்று வருட சேவை என்பவற்றைக் கொண்ட தொண்டர்களுக்கு ஆசிரியர்களாக நியமனம் வழங்கப்படவுள்ளது.

எனினும் ஆசிரிய நியமனம் தொடர்பான விடயத்தை சுயலாப நோக்கிலும், மலிவான அரசியல் விளம்பரம் தேடும் வகையிலும் பயன்படுத்த சிலர் முனைவது வேடிக்கையானது ஆகும். கடந்த பல ஆண்டுகளாகத் தொண்டர் ஆசிரியர்களின் நியமனம் தொடர்பான விடயத்தில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி அக்கறை காட்டி வந்துள்ளது. என்பதுடன் மாணவர்களின் கல்வி மேம்பாடு கருதி தொண்டர் ஆசிரியர்களாகப் பணியாற்றிய பலரை ஊக்குவித்தும் வந்துள்ளது என்பது தெரிந்ததே - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

---

# கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை கட்டடங்கள் பெருமளவில் சேதம்

தென்மராட்சி, ஜன.29

கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலைக் கட்டடம் இருந்த இடம் தெரியாத அளவுக்கு சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது. மாணவர்களின் பிறப்புச் சான்றிதழ்கள் உட்பட அனைத்து ஆவணங்களும் பாடசாலை வெளியில் வீசப்பட்டுள்ளன. பாடசாலைக்கு அருகில் 'மிக்' விமானம் குண்டு வீழ்ந்ததில் அங்கு பாரிய குழி ஏற்பட்டுள்ளது. அதனைச் சுற்றி வெள்ளைத் துணி கட்டப்பட்டுள்ளது. பாடசாலைக்கு அருகில் நின்ற 150 வருட பழமை வாய்ந்த புளியமரம் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டது. பாடசாலைக்கு அருகில் காணப்பட்ட ஐம்பதுக்கும் மேற்பட்ட பல வீடுகள் தரைமட்டமாகியும் சேதமடைந்தும் உள்ளன.

- இவ்வாறு கடந்த வெள்ளியன்று இப்பகுதியில் உள்ள தமது இருப்பிடங்களைப் பார்த்துவிட்டுத் திரும்பிய பொதுமக்கள் தெரிவித்தனர்.

நாவெலி, கைதடி ஊடாக சுமார் பத்து மைல் தூரத்திற்கு நடந்து சென்றதாகவும் சுமார் நான்கு மைல் தூரத்திற்கு கடலுக்குள் நெஞ்சளவு தண்ணீர் உள்ள பகுதியில் நடந்து சென்றதாகவும் - சில பெண்கள் தண்ணீருக்குள் நடந்து செல்லும் வேளையில், அங்கு ஷெல் வீழ்ந்து வெடித்து, பள்ளங்களுக்குள் வீழ்ந்து நீரில் மூழ்கிப் பின்னர் காப்பாற்றப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(உ-117)

## பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் நாளும்

சங்கானை, ஜன.29

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் நாளும் எதிர்வரும் வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் ச.கைலாசநாதன் தலைமையில் பாடசாலை திறந்தவெளி அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மைவிருந்தினராக வலிகாமம் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதனும், சிறப்பு விருந்தினராகச் சங்கானைக் கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. செல்லையாவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இளைப்பாறிய அதிபர் சைவப் புலவர் சு.செல்லத்துரை நிறுவுநர் நினைவுரை வழங்கவுள்ளார். (ஐ-29)

# மருதனார்மடம் அருள்மிகு ஸ்ரீ

# மகாகும்பாபிஷேகச் சிறப்


சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்
தொலைத்தொடர்பு சேவை
காங்கேசன்துறை சாலை, சுன்னாகம்.
உள்நாட்டுத் தொலைபேசி - 070-212380
வெளிநாட்டுத் தொலைநகல் - 0090-70-212380

புகழ் பல்பொருள் களஞ்சியம்
(பலசரக்கு வியாபாரத்தில் புகழ் பெற்றவர்)
இல.3, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.

மங்கை சில்க்
(மங்கையர் மனங்கவர்ந்த ஜவுளி மாளிகை)
இல.8 நவீன சந்தை, சுன்னாகம். இல.15, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

மளிகைப்பொருள் விற்பனையால்
மக்களின் மனங்கவர்ந்த ஸ்தாபனம்
பிள்ளையார் பல்பொருள் வாணிபம்
காங்கேசன்துறை சாலை - மருதனார்மடம்.

நாகம்ஸ் சினிமா & நாகம்ஸ் பாட்டா
அங்கீகாரம் பெற்ற பாட்டா விற்பனையாளர்கள்.
நவீன சந்தை, சுன்னாகம்.

அழகு சாதனப் பொருள்கள், பாலமா, பிஸ்கட், ரொபி வகைகள்
ஆங்கில மருந்து வகைகளை நிறைவுடன் பெற்றிட
ஜெயசக்தி மருந்தகம்
10, மானிப்பாய் வீதி, சந்தைமுன்பாக, மருதனார்மடம்.

☎ 3568,3569
வெளிநாடு - 0094 213568, 0094 213569
R.M.S. தொலைத்தொடர்பு சேவை
(தொலைத்தொடர்பியல் நிபுணர்கள்)
டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.

தங்கப் பவுண்
நகைப் பிரியர்களின் சொர்க்கம்
சுபேந்திரன் நகைத்தொழிலகம்
18, டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.

தரமான போட்டோஸ்ரற் சேவைக்கு
கௌரி தொலைத்தொடர்பு சேவை
கே.கே.எஸ். வீதி, மருதனார்மடம்.
☎ 070-212427 வெளிநாடு: 0094 70212424
கபிலன் தொலைத்தொடர்பு சேவை
கே.கே.எஸ். வீதி, றொட்டியாலடி.
☎ 070-212718 வெளிநாடு: 0094 70212718

இனிய தேநீர் சிற்றுண்டிகளுக்கும், பிஸ்கெட்,
ரொபி வகைகளுக்கும் புகழ்மிக்கவர்கள்
வாணி விலாஸ்
மானிப்பாய் றோட் - மருதனார்மடம்.

நவநாகரிக ஆடைத்தெரிவுகளுக்கு முதல்
ஸ்தாபனம்
ரஞ்சனாஸ் ரெக்ஸ்
இல.4, நவீன சந்தை, சுன்னாகம்.


## ஆஞ்சநேயர் ஆலயத்தில் குடமுழுக்கு

சேவைக்கென்றே அவதரித்தவர் ஆஞ்சநேயர். இராமபிரானின் சேவைக்கு மட்டுமன்றி தன் அடியார்களின் சேவைக்கும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். அவர் மேற்கொண்ட காரியங்கள் எல்லாம் வெற்றியே.

மகா பண்டிதன்; அடக்கத்தையே அணிகலனாக உடையவன்; வாக்கு சாதுரியத்தில் வல்லவன்; ராஜ தந்திரத்தில் மகா சமர்த்தன்; வீரத்தில் அவனுக்கு நிகர் அவனே. இன்றுள்ள அவலமான வாழ்க்கையில் நமக்கு ஊன்றுகோலாக இருக்கக் கூடியவர் ஆஞ்சநேயரே. புத்திபலம், மனோபலம், தைரியம் இவைகளுக்கெல்லாம் ஆதர் சமான மகா புருஷர் அவர்.


அருள்பாலிக்கும் ஆஞ்சநேயர்

இராமர் துயரத்தைப் போக்கியவர்; சீதையின் வியாகூலத்தைத் துடைத்தவா; லக்ஷ்மணனுக்கு உயிர் அளித்தவர்; பரதன் உயிரையும் காப்பாற்றியவர். ஆகவே நம் கஷ்டங்களை நீக்க இவரைக் கெட்டியாகப் பற்ற வேண்டும்.

எப்படிப் பற்றுவது?

'ராம்' என்ற ஓரக்ஷர மந்திரம் ஒன்றே போதும். "ரா" என்பது அஷ்டாக்ஷரத்திலுள்ள ஜீவனுள்ள எழுத்து. "ம" என்பது பஞ்சாக்ஷரத்திலுள்ள ஜீவனுள்ள எழுத்து. இந்த வைஷ்ணவ சைவ இணைப்புடன் பிந்து ரூபத்தில் சக்தியின் சின்னமும் இதில் பிணைந்துள்ளது. ஆகவே இவரைக் கொண்டே அவர்கள் அருளைப் பெறலாம்.

சிரஞ்சீவியாக நம்மிடையே வாழந்து வரும் ஸ்ரீமத் ஆஞ்சநேயர் பக்தர்களை ரட்சிப்பதற்காக சதா காலமும் சித்தமாக இருக்கிறார். ஆனால் நாம் உலக வாழ்க்கையில் சிக்குண்டு பக்தி செய்ய நேரம் இல்லாமல் தவிக்கிறோம். அல்லது பக்தி செய்யும் முறை தெரியாது திகைக்கின்றோம். இவரை தியானித்து சிறிது நேரம் பூஜை, பாராயணம் செய்தால் அதிக பலனை அடையலாம்.

இவ்வகையில் சிரஞ்சீவியாக இப்பூவுலகில் நம்மிடையே வாழ்ந்துவரும் ஸ்ரீமத் ஆஞ்சநேயர் யாழ்ப்பாணத்தில் இணுவில் மருதனார்மடம் சுன்னாகத்தில் அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயராக எழுந்தருளியுள்ளார்.

இன்று சுவாமியின் குடமுழுக்கு வைபவத்தைக் கண்டு களிக்கும் அனைத்து அன்பர்களும் ஆஞ்சநேயர் அருளினால் நலமுடன் வாழ அவரின் பாதங்களைத் தொழுது நிறைவு செய்கின்றேன். நன்றி

- சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக்குருக்கள்.

## அவலங்கள் போக்கும் ஆஞ்சநேயர்

அனுமானைச் சமயநோக்கில் இப்போது ஆஞ்சநேயர், வீரஅனுமன், சிறியதிருவடி அனுமார் எனப் பயபக்தியுடன் அழைத்தல் மரபு. விண்ணகரங்களில், அதாவது வைணவத் திருத்தலங்களில் திருமால் மூலவராகக் கருவறையில் எழுந்தருளி இருப்பது வழக்கம். ஆஞ்சநேயர் பரிவாரத் தெய்வமாகத் தனியறையில் அமர்ந்து அடியார்களின் துதிப் பொருளாக விளங்குதலையும் நாம் உணர்கிறோம். இதைவிட மேலும் ஒருபடி உயர்ந்து மருதனார்மடத்தில் ஆஞ்சநேயருக்கு தனிக்கோயில் அமைத்து வழிபடும் சிறப்புநிலை எய்தப்பட்டுள்ளமை எமக்குப் பெருமையே.

ஆஞ்சநேயரின் தெய்வீகச் சிறப்பியல்புகள் பக்தர்களின் உள்ளங்களை ஈர்த்துள்ளமை மிகவும் நல்ல அறிகுறியாகும். அவற்றில் அஞ்சனாபாலனின் பேரறிவு, பேராற்றல், பண்பு மேம்பாடு, பெருவலிமை என்பன திருமாலின் அடியார்களைப் பொதுவாகவும், இராமபக்தர்களைச் சிறப்பாகவும் கவர்ந்துள்ளன.

"புத்திர் பலம்யசோ தைர்யம் நிர்பயத்வம் அரோகதா!
அஜாட்யம் வாக்பருத்வம்ச ஹனுமத் ஸ்மரணாபவேத்"

ஆஞ்சநேயரை வழிபடுபவர்களுக்கு அவர் என்னென்ன அனுக்கிரகங்களை அளிக்கிறார் என்பதை இந்தச்சுலோகம் தெளிவாகச் சொல்கிறது. புத்தி, பலம், புகழ், உறுதிப்பாடு, அஞ்சா நெஞ்சம், ஆரோக்கியம், விழிப்பு, வாக்கு வன்மை என்பவற்றை அளிக்கிறார் என்கிறது சுலோகம்.

ஸ்ரீ ஆஞ்சநேயர் என்றும் பிரம்மச்சாரி. தமிழ் நாட்டில் அவரை அனுமார் என்றும், கர்நாடகத்தில் அனுமந்தையா என்றும், கேரளாவில் ஆஞ்சநேயர் ஸ்வாமி என்றும் மராட்டியத்தில் மாருதி என்றும் வடமாநிலங்களில் மகாவீரர் என்றும் அழைக்கப்பட்டு பக்தியுடன் பூசிக்கப்படுகிறார். ஆஞ்சநேயர் மருதனார்மடத்தில் எம்மக்களின் துயர்துடைக்கவும், அவலங்கள் போக்கவும் காவல் செய்து எமது மக்களுக்கு வெற்றியையும் சகல சௌபாக்கியங்களையும் தந்தருள்வாராக!

சபா.புஸ்பநாதன் (சத்தியப்பிரமாண மொழிபெயர்ப்பாளர்)

## ஸ்ரீ சுந்தர ஆஞ்சநே

மைவரும் வண்ணித்தன் மகி
மதிபூத்த ஞானகுருவே!
கைவரும் நிலையின்றித் தமி
கவலைகள் தீர்க்கொணா
தைவரும் விக்கிரம உத்தரட்
சர்வகுடமுழுக்குகந்த
இவதன, மருதர்பதி ரகுராம சு
ஆஞ்சநேய சுவாமியே!
அருட்கவி

## சுகஞ் செய்யும் தூ

சொந்த நம் மண்ணில் வே
சுதந்திரம் மலரச் செய்
அந்தமில் அமைதி அன்போ
டறநெறி வாழ்க்கை சுவா
சிந்தையில் நாங்கள் ஏற்றும்
சிவனை உன் உருவிற்
சுந்தர ஆஞ்சநேயா
சுகமெல்லாம் தருவாய் பே

## சமாதானத்
## ஆஞ்சநேயரை அ

மருதனார் மடத்திலோர் கோயி
மாருதிக் கடவுளுக்கு குடமு
திருமகள் மார்பனின் அனுமனை
தேசத்தின் காவல் பொறுப்
தருணமதில் சமாதானத் தூது
தமிழரின் உரிமையைச் சேர்
கருணை வள்ளலை அடைக்கல
காவல் செய்யென மன்றாடி
- மதுரகவி காரை.


ஆஞ்சநேயர் விக்கிரகம் தமிழகத்
ஏற்றப்படுவதற்காக தயாராக வைக்கப்
பத்மபூஷணம் எஸ். முத்தையா ஸ்தபதி


ஆஞ்சநேயரே எமது வாடிக்கையாளர்களுக்கு நல்லருள் தாரும் ஐயா!
துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ்
புகழ்பெற்ற புத்தக வியாபாரிகளும் - புதினப்பத்திரிகைகளின் பிரதம முகவரும்
தரமான றபர் முத்திரைகள் (Rubber Stamps) தயாரிப்பவர்களும்.
பஸ்நிலையம் முன்பாக, சுன்னாகம்.

# ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் ஆலய

# ...ருப்பிதழ் - 29-01-2001

## ...ஞ்சநேயர் தோத்திரம்

...தன் மகிழும் மாருதியே தெய்வம்
...ருவே!
...றித் தமியேங்கள் அலைகின்ற
...கௌரைவரதோ
...உத்தராட்டாதியில்
...ந்த
...சுராம சுந்தர
...மியே!
...ருட்கவி. ...விநாசித்தம்பிப்புலவர்

## ...ம் தலைவா போற்றி!

...ணில் வேண்டும்
...ரச் செய்வாய்!
...ி அன்போ
...கை ஈவாய்!
...ள் ஏற்றும்
... உருவிற் காண்போம்!
...ா
...ருவாய் போற்றி!

- சிற்பி

## ...னத் தூதுக்கு ...ரை அழைப்போம்!

...ார் கோயிலுமமைத்தோம்
...க்கு குடமுழுக்கும் வைத்தோம்
...னுமனைத் தொழுவோம்
... பொறுப்பினைக் கொடுப்போம்
...னத் தூது செல்லப் பணிவோம்
...யச் சேர்த்திடச் சொல்வோம்
...அடைக்கலம் புகுவோம்
... மன்றாடி நிற்போம்!


...காரை. எம்.பி.அருளானந்தன்.



...ம் தமிழகத் துறைமுகத்தில் கப்பலில் ...வைக்கப்பட்டுள்ளது. விக்கிரகத்தை வடித்த ...ா ஸ்தபதியாரும் படத்தில் காணப்படுகிறார்.

## என்றும் சிரஞ்சீவியாய் எமக்கருள் செய்பவர்

முன்னொரு காலத்தில் சுமேரு மலையை கேசரி என்ற வானர அரசன் ஆண்டு கொண்டிருந்தான். அவனுடைய மகளான அஞ்சனாதேவி, புத்திர வரம் வேண்டி, சிவபெருமானை நோக்கி நீண்ட காலம் தவம் செய்தாள். அவளுடைய மன உறுதியையும் தூய எண்ணத்தையும் கண்டு மகிழ்ந்த சிவபெருமான் அவள் கேட்ட வரத்தைக் கொடுப்பதற்குத் தீர்மானித்தார். அவ் வேளையிலே, அயோத் தியை ஆண்ட சிவபக்த னான தசரதச் சக்கரவர்த்தி, கலைக்கோட்டு மாமுனிவரைக் கொண்டு புத்திரகா மேஷ்டி யாகத்தைச செய்தான். யாக முடிவில் யாக குண்டத்திலிருந்து பாயசக் கலசம் ஒன்று தோன் றியது. தன் மனைவியர் மூவருக் கும் பாயசத்தைப் பிரித்துக் கொடுத்த பின்னர், தசரதச் சக்கரவர்த்தியால் ஒரு பக்கத்தில் வைக்கப் பட்ட பாத்திரத்தைக் கரு டன் தூக்கிச் சென்றான். ஆனால் காற்றின் வேகத் திற்கு ஈடு கொடுக்க முடி யாத கருடன் அதைத் தவற விட்டான். சிவபெருமானை நோக்கித் தவம் செய்து கொண்டிருந்த அஞ்சனா தேவியின் கரங்களில், வாயு தேவன் அந்தப் பாத்திரத்தை இட்டான். அதிலிருந்த பாய சத்தை உண்ட அஞ்சனா தேவியின் வயிற்றிலே கர்ப் பம் உண்டாகி, வானர உருவத்துடன் ருத்ராம்ச ரூபியாக அனுமான் தோன்றினார்.



தமிழகத்திலிருந்து கொழும்பினூடாக எடுத்துவரப்பட்ட ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் விக்கிரகம் யாழ்ப்பாணத்தில் வீதியூடாக திருஉலாவாக எடுத்துச் செல்லப்பட்டவேளை பிடிக்கப்பட்ட படம்.

அனுமான் இராமபக்தன். இராமனுக்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்து, இராமனுக்குச் சேவை செய்வதையும் இராம நாமத்தை ஜபிப்பதையும் தன் நித்திய கடமையாகக் கொண்ட அனுமான், திரேதா யுகத்திலும், துவாபர யுகத்திலும், கலி யுகத்திலும் நித்திய சிரஞ்சீவியாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.

ஆசார சீலராக, அனுமனை உரிய முறையில் வழிபட்டு வருபவர்களுக்குச் சகல சௌபாக்கியங்களும் கிடைத்து வருவதால், அவனை வழிபடுவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. தமிழ் நாட்டிலே அனுமார் ஆகவும், கன்னடத்திலே அனுமந்தை ஆகவும், தெலுங்கு தேசத்தில் ஆஞ்சநேயலு ஆகவும், மஹாராஷ்டிரத்தில் மாருதி ஆகவும், வடக்கே மஹாவீர் ஆகவும் வெவ்வேறு பெயர்களில் அவர் வழிபடப்படுகிறார்.

"ஞானத்திலே உச்சநிலை, பலத்தில் உச்சநிலை, பக்தியில் உச்சநிலை, வீரத்தில் உச்சநிலை, சேவையில் உச்சநிலை, விநயத்தில் (பணிவு) உச்சநிலை இப்படியெல்லாம் சேர்ந்திருக்கின்ற ஸ்வரூபம் ஒன்று உண்டென்றால் அது ஆஞ்சநேய ஸ்வாமிதான். இதெல்லாவற்றிற்கும் மேலாக, அவருடைய பிரம்மச்சாரியத்தைச் சொல்ல வேண்டும். ஒரு கணம்கூடக் காமம் என்ற நினைப்பே வராத மஹா பரிசுத்த மூர்த்தி அவர். தனக்கென்று எதுவுமே நினைக்காதவர். ஒரு காம நினைவும் இல்லாமல், இராமனுக்குச் சேவை செய்தே நிறைந்துவிட்டார்."

- சிவசரணன் -

"அவரைப் பிரார்த்திப்பவர்களுக்கு ஒரு குறையும் இல்லை. லோகம் முழுவதும் தர்மம் பரவியிருக்க அவரையே பிரார்த்தனை பண்ணுவோம். அவருடைய சகாயத்திலே இராவணாதிகள் தோற்று இராமராஜ்யம் ஏற்பட்டது. அர்ச்சுனனின் தேர்க்கொடியில் அவர் இருந்த விசேஷத்தால், பிறகு தர்மராஜ்யம் ஏற்பட்டது. இன்றும் சகல தேசங்களிலும் தர்மமும் பக்தியும் ஏற்பட, அவர் அனுக்கிரஹம் வேண்டும். நாம் மனமுருகிப் பிரார்த் தித்தால் இந்த அனுக்கிரஹத்தைச் செய்வார்."

சிறந்த சிவபக்தரும், சிவபெருமானின் சந்திரமௌளீச மூர்த்தத்திற்குத் தினமும் மிகவும் விரிவான முறையிலே அபிஷேகம், பூசை முதலியவற்றைச் செய்து வணங்கிய பின்னரே, தன்னுடைய ஏனைய கடமைகளைச் செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்த வருமான ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய ஸ்வாமிகள் அருளுரைக்கிணங்க ஆஞ்சநேய பெருமானை வணங்கி நாமும் வாழ்ந்து இவ்வுலகையும் வாழ வைப்போம்.

**மலர் அமைப்பு:**
**துர்க்கா ஸ்ரேசனேர்ஸ்**
சுன்னாகம்


ஆஞ்சநேயரின் அடி பணிந்தோம்!
**போட்டோ செலெக்ற்**
PHOTO SELECT
298, கே.கே.எஸ். வீதி, மருதனார்மடம், சுன்னாகம்.

ஐஸ் கிறீம் உலகில் முன்னோடிகள்
**குணம் கிறீம் ஹவுஸ்**
வீரவாகு கட்டடம், பஸ்நிலையம், பருத்தித்துறை. T.P.:- 070-213048.
துர்க்காபுரம், தெல்லிப்பழை.
49, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.

**ஐ.பேரம்பலம் அன் சன்**
கோயில் அபிஷேகத் திரவியங்கள், மருந்துச் சரக்கு வகைகளுக்கும்~ வைத்திய சேவைக்கும் சிறப்பானவர்கள்
வைத்திய கலாநிதி பேரம்பலம் பத்மநாதன்
10, கே.கே.எஸ். சாலை, சுன்னாகம்.

ஆஞ்சநேயப் பெருமானே!
தமிழர் எம் வீடிவுக்காகத்
தலை தாழ்த்தி வணங்குகின்றேன்!
**சின்னத்தம்பி நடராஜா**
கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.

* CD யிலிருந்து பாடல் ஒலிப்பதிவுகள் செய்வோர்
* BATA மற்றும் பாதணிகள் விற்பனையாளர்கள்.
**நித்தியா** ஸ்பொட் பாட்டா
23, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.

* ஆங்கில மருந்து வகைகள் * இறக்குமதி செய்யப்பட்ட ரொபிகள் * பால்மா வகைகள்
அனைத்தையும் நியாய விலையில் பெற்றுக் கொள்ள
**மதுரா மெடிக்கல்ஸ்**
(சுன்னாகம் M.P.C.S. முன்பாக)
காங்கேசன்துறை சாலை, சுன்னாகம்.

உள்நாடு: 070-212443
வெளிநாடு: 0094 70212443
**ஐயனார் தொலைத்தொடர்பு நிலையம்**
(தொலைத்தொடர்பு முன்னோடிகள்)
பண்டிதர் மாணிக்கத்தியாகராசா வீதி -சுன்னாகம்.

பிஸ்கட், பால்மா, ரொபி விற்பனையாளர்களும்
பத்திரிகை முகவர்களும்
**மருதனார்மடம் சிற்றி சென்ரர்**
கே.கே.எஸ். வீதி, மருதனார்மடம்.

உயர்தரப் பாடநூல்கள், இனிய வாழ்த்து மடல்கள்,
கலண்டர்கள், டயறிகள் அனைத்துக்கும்
**அம்மா அச்சகம் - புத்தகசாலை**
இணுவில் - மருதனார்மடம்.

விவசாய இரசாயனங்கள், உரவகைகள்,
நவீன தெளி கருவிகள்~ உதிரிப்பாகங்கள் மற்றும் சகல
விதை வகைகளுக்கும்
**வேளான் களஞ்சியம்**
AGRO STORES
கே.கே.எஸ். வீதி, - மருதனார்மடம் - இணுவில்.

**ஸ்ரீ முருகன் நகைமாடம்**
(நவீன நகைகளுக்கு நம்பிக்கையானவர்கள்)
25, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.

ஆஞ்சநேயரைப் போற்றுவோம்! தேறுதலடைவோம்!!
★ முத்திரைகள் ★ மணியோடர் ★ பதிவுத்தபால் ★ கடுகதித் தபால்
★ தமிழ் - ஆங்கில நூலக சேவை ★ றோணியோ ★ தமிழ் - ஆங்கில மொழிபெயர்ப்பு
★ கடிதம் தயாரிப்பு ★ தமிழ் - ஆங்கில தட்டச்சு சேவைகளுக்கு
**நீதினி முகவர் தபாலகம்**
டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.

# தணிக்கையைக் கண்டிக்கிறது மனித உரிமைகள் ஆணைக்குழு

கொழும்பு,ஜன.29

நாட்டில் நடைபெற்று வரும் யுத்தம் தொடர்பான செய்திகள் தேசிய பாதுகாப்பு என்ற போர்வையில் தணிக்கை செய்யப்படுவதை மனித உரிமைகள் ஆணைக்குழு வன்மையாகக் கண்டித்துள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழு நாட்டின் செய்தித் தணிக்கை தொடர்பாக ஆராய்ந்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தது. அந்த அறிக்கையிலேயே இக்கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பொதுமக்களுக்கு தெரியப்படுத்தப்பட வேண்டிய பல பிரச்சினைகள் தேசியப் பாதுகாப்பு என்ற பெயரில் தடைசெய்யப்படுவதுடன் செய்தி ஊடகங்களுக்கும் அவ்வப்போது பல முட்டுக்கட்டைகள் போட்டு வருவதை நாம் அவதானிக்கின்றோம்.

அரசாங்கத்தால் நியமனம் செய்யப்பட்டுள்ள ஒரு நபர் இராணுவச் செய்திகளை சரிபார்ப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளமையும் ஒரு குறைபாடாகும்.

இதனை மாற்றி, செய்தித்தணிக்கையைச் சரிபார்க்க மூத்த பத்திரிகையாளர் ஒருவரையும் இராணுவ அனுபவம் மிக்க ஒருவரையும் இணைத்து தணிக்கைக் குழு ஒன்றை அமைக்க வேண்டும் - இவ்வாறு மனித உரிமைகள் ஆணைக்குழு சிபாரிசு செய்துள்ளது. (உ-6)

## தராசுப் படிக்கு பதில் சைக்கிள் அச்சு

நெல்லியடி, ஜன.29

பருத்தித்துறை மரக்கறிச் சந்தையில் வியாபாரம் செய்யும் வியாபாரிகள் தராசுப் படிகளுக்குப் பதிலாக, சைக்கிள் நடு அச்சு, கற்கள் என்பனவற்றைப் பயன்படுத்தி வருகின்றார்கள்.

கடந்த வருடத்திலும் யாழ். செயலக திடீர் பரிசோதனைக் குழுவினரின் பரிசோதனையின் போது, பல வியாபாரிகள் சிக்கினர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ-9)

## ஏழாலை மேற்கில் திருட்டுக்கள் அதிகரிப்பு

வலி. வடக்கு, ஜன.29

ஏழாலை மேற்குப் பகுதியில் திருடர்களின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

ஊரடங்கு சட்டம் அமுலில் உள்ள நேரத்தில் வீடுகளுக்குள் பிரவேசிக்கும் திருடர்கள் கையில் அகப்பட்டதை திருடிச் செல்கின்றனர்.

தற்போது ஏழாலை மேற்குப் பகுதியில் திருடர்களை பிடிப்பதற காகப்பொதுமக்கள் கண்விழித்துக் காவல் இருந்து வருகின்றனர். ஆனாலும் கூட நேற்று முன்தினம் இரவு வீடொன்றுக்குள் புகுந்த திருடர்களை பிடிக்க பொதுமக்கள் முயன்றபோதிலும் அவர்கள் தப்பிவிட்டனர். (ஐ-86)

## சுயமுயற்சிக் கடன் திட்டம்

குருநகர், ஜன.29

யாழ். மரியன்னை ஆலய இளைஞர் உருவாக்கல் சபையினர் ஆலயப் பங்கைச் சேர்ந்தவர்களிடையே சுயமுயற்சியை ஊக்குவிக்கும் நோக்குடன் சுயமுயற்சிக் கடன்களை வழங்க உள்ளனர்.

இது தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் புதன்கிழமை யாழ். மரியன்னை பேராலயத்தின் இளைஞர் உருவாக்கல் சபை மண்டபத்தில் நடைபெற உள்ளது.

(ஐ-51)

## உதைபந்தாட்டம்

வலி. வடக்கு,ஜன.29

வலிவடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டு கழகங்களிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் கால் இறுதி ஆட்டத்தில் இன்று திங்கட்கிழமை மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அளவெட்டி பாரதி விளையாட்டுக்கழகம் மோதும். (ஐ-86)

## குருநகர் புதுமை மாதா உற்சவம்

குருநகர்,ஜன.29

குருநகர் புதுமைமாதா ஆலயத் திருவிழா எதிர்வரும் பெப்ரவரி மாதம் 3ஆம் திகதி நடைபெற உள்ளது.

அன்றைய தினம் காலை 5.00 மணிக்கு முதற்திருப்பலியும், 7.00 மணிக்கு திருநாள் திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்படும். இத் திருநாள் திருப்பலியை புனித சவேரியார் குருமட அதிபர் அருட்திரு ஜே.நீக்கிலஸ் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுப்பார்.

இம்மாதம் 25 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி உள்ள இந்த ஆலயத்தின் வருடாந்த திருவிழாவில் தினமும் மாலை நேரங்களில் நவநாள் ஆராதனைகள் இடம்பெற்று வருகின்றன. எதிர்வரும் பெப்ரவரி 2ஆம் திகதி வெள்ளிக் கிழமை மாலை 4.30 மணிக்கு நற்கருணை ஆராதனையும் அதனைத் தொடர்ந்து நற்கருணைப் பவனியும் ஆசீர்வாதமும் நடைபெறும்.

(ஐ-51)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| | |
|---|---|
| தோற்றம் | மறைவு |
| 12 | 10 |
| - | - |
| 06 | 02 |
| - | - |
| 1934 | 2000 |

**அமரர் நாகநாதர் இராசா**

(முன்னாள் பிரதம லிகிதர், பொலீஸ் திணைக்களம்)

திதி: 29-01-2001

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

உங்கள் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
உடன் பிறந்தோர், மருமக்கள்,
பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்.

*ஸ்ரீ விக்னேஸ்வரா வீதி,*
*அச்சுவேலி தெற்கு,*
*அச்சுவேலி.*

(83311)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



| அன்னை அணைப்பில் | ஆண்டவர் அணைப்பில் |
|---|---|
| 06 | 29 |
| - | - |
| 05 | 01 |
| - | - |
| 1908 | 2000 |

**திருமதி மேரி அமிர்தம்மா (B) பக்கஸ்**
**(மேரி அக்கா)**

(ஓய்வுபெற்ற ஆசிரியை, மெதடிஸ்த மகளிர் கல்லூரி, பருத்தித்துறை)

திதி: 29.01.2001

"உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம் வைப்பவன்
இறப்பினும் வாழ்வான்"

ஆன்ம இளைப்பாற்றிற்காய் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தியாகராஜா சரஸ்வதி,
குமரேசு கமலாதேவி,
கந்தையா நாகம்மா.
(பெறாமக்கள்)

*வெஸ்லி லேன்,*
*புலோலி மேற்கு,*
*பருத்தித்துறை.*

(83507)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

கொடிகாமம் பிரஜைகள் குழுத் தலைவரும்,
கொடிகாமம் அரசினர் வைத்தியசாலை
அபிவிருத்திச் சங்க உறுப்பினரும்,
சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி பழைய மாணவரும்,
இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தருமாகிய



**திரு.செல்லையா சரவணமுத்து**

(கணேஸ்)

அவர்கள் யாழ். மாவட்ட சமாதானநீதிவானாக யாழ். மாவட்ட நீதிபதி திரு.R.T.விக்னராஜா முன்னிலையில் 25.01.2001 அன்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். அவரின் சேவைகள் தொடர்ந்தும் மேலோங்க வேண்டும் எனப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கொடிகாமம் பிரஜைகள் குழு உறுப்பினர்கள்,
அரசினர் வைத்தியசாலை (கொடிகாமம்)
அபிவிருத்திச்சபை
அங்கத்தவர்களும், நண்பர்களும்.

*கொடிகாமம்.*

(83353)

# முதலாம் ஆண்டு நினைவுப் பூக்கள்



| மண் மகிழ | கண் நெகிழ |
|---|---|
| 12 | 10 |
| - | - |
| 04 | 02 |
| - | - |
| 1925 | 2000 |

**அமரர் Dr. கதிரேசு நல்லையா**

திதி: 29.01.2001

வன்மைமிகு வைத்தியராய் வாடிநின்றோர் துயர்களைய
வாஞ்சையுடன் பயன்கருதாப் பணிசெய்த
திண்மைமிகு திருவேயெம் தெய்வமே! எமையுலகில்
திக்கொளிர உயரவைத்தீர் பெருமைசெய்தீர்!
உண்மையொடு நேர்மைமிகு உயர்நோக்கு ஊரெங்கும்
உதவிநின்றீர் உம்பிரிவின் பின்னரிங்கு
கண்ணீர் மழைசொரிந்தோம் கதறியே ஊர் துறந்து
கலைந்தோம் - என்றுமுமை அர்ச்சிப்போம்!

உங்கள் ஆத்ம சாந்திக்கு எம் இதய அஞ்சலிகள்....

குடும்பத்தினர்.
*மட்டுவில் தெற்கு,*
*சாவகச்சேரி.*

தற்காலிக முகவரி:
*வதிரி,*
*கரவெட்டி.*

(83360)


## விலை மாற்றம்

தரத்தில் சிறந்த
**காவேரி மிளகாய்த்தூள்**
இன்று (29-01-2001) முதல்
ஒரு கிலோவுக்கு
ரூபா 10/= ஆக
அதிகரிக்கப்பட்டுள்ளது.

**காவேரி தொழிலகம்**
*ஆடியபாதம் வீதி,*
*நல்லூர்.* (83507)

உ
சிவமயம்

ரநகர், களபூமி

# ஸ்ரீ முத்துமாரியம்மன் திருக்கோயில்

# ஷேகச் சிறப்பு மலர்

9.01.2001



# அம்பாளின் அருளாட்சியில் புதுமைகள் பல.......



முத்துமாரியம்மன்

"எம் செயலால் ஆவதொன்றில்லை; எல்லாம் அவள் செயல்" எனும் நன்மொழி போன்று, பாலாவோடை அம்மன் திருப்பணி ஆரம்பிக்கப்பட்டு இன்று மகாகும்பாபிஷேகம் நடைபெற இறைவன் திருவருள் கிடைத்தமை, எல்லாம் வல்ல ஸ்ரீமுத்துமாரியம்மன் திருவிளையாடலில் ஒன்றேதான்.

பாலாவோடை குறிஞ்சாக்குளி ஸ்ரீமுத்துமாரியம்மன் திருக்கோயில் பழைமைமிக்க ஆலயமாகும். இங்கு அம்பாளின் அருளாட்சியில் பல புதுமைகள் நடைபெற்றன.

எனது தந்தையார் அமரர் ஆறுமுகம் அவர்கள் அறங்காவலராக இருந்து, பல இன்னல்கள், இடையூறுகளுக்கும் மத்தியில் அம்பாளின் தொண்டுதான் தம் பணியாக இறுதிக் காலம் வரை செய்து வந்தவர்.

நாட்டு நிலைமை காரணமாக ஊரைவிட்டு இடம்பெயர்ந்த துர்ப்பாக்கிய நிலையில் அம்பாளின் பணியில் அவருக்குத் தடையேற்பட்டது.

இந்நிலையில் அவர் மரணத்தைத் தழுவிய பின் அம்பாள் பணி தொடர எமக்குப் பலன் கிடைத்தமை அவளின் திருவருளே.

அம்பாளுக்குத் தொண்டு செய்வதில் அவ்வூர் மக்கள் அனைவருமே பக்தியுடன் பணியாற்றுவது சிறப்புத் தருவதாகும். பக்தர்கள், தொண்டர்கள் ஆகிய எல்லோரும் அம்பாள் பணி தொடர அகிலம் போற்றும் அன்னை துணை புரிந்திட இறைஞ்சுகிறோம்.

ச. ஆ. இராசலிங்கம்,
உபதலைவர்,
அறங்காவலர் சபை.

# பணிகள் தொடர அவளது திருவருளை வேண்டுகிறோம்

ஈழத்துச் சிதம்பரத்தினை தன்னகத்தே கொண்டு சிறப்புற விளங்கும் சிவபுண்ணிய பூமியே காரைநகர் கிராமமாகும்.

இச்சிறந்த புனித பூமியில் பிறந்த தவப்பயனைப் பெற்ற அடியேன் ஏறக்குறைய நான்கு தசாப்தங்களாக அந்நிய நாட்டில் வாழ்ந்தாலும் எங்கள் குலதெய்வமான குறிஞ்சாக்குளி அம்பாள் மீது எமது குடும்பத்தினர் மிகுந்த பக்தி கொண்டு வாழ்ந்து வருகிறோம்.

அருள்மிகு அம்பாளின் நற்கருணையால் ஆலயத்துக்கு ஓர் அறங்காவலர் சபையை அங்குரார்ப்பணம் செய்யவேண்டும் என்ற எண்ணம் எம் மனதில் தோன்றிடவே பாலாவோடை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில் அறங்காவலர் சபை நிறுவப்பட்டது.

இக்கிராம மக்களின் வள்ளல் தன்மையோடும் அறங்காவலர் சபையின் விடாமுயற்சியாலும் அம்மனின் அருட்கடாட்சத்தினாலும் திருப்பணி கைகூடியது. கோயில் புனருத்தாரணப் பணிகள் முடிவடைந்து இன்று கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. இன்றைய போர்க்கால சூழ்நிலையிலும் அம்பாளுக்குப் பணி செய்ய எமக்குப் பலன் கிடைத்தமை ஒரு பெரும்பேறாகும்.

எமது பணிகள் தொடர எல்லாம் வல்ல பாலாவோடை குறிஞ்சாக்குளி அம்பாள் திருவருள் வேண்டி நிற்கின்றோம்.

"தாயே நின்பாதம் சரணடைந்தோம்"

ச. ஞானப்பிரகாசம்.
பொருளாளர்,
அறங்காவலர் சபை.

**விசேட பஸ் சேவை**

இன்று நடைபெறும் மகாகும்பாபிஷேகத்தின் பொருட்டு யாழ்பஸ்நிலையத்திலிருந்து ஆலயம் வரை விசேட பஸ் சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

வெளியிடங்களிலிருந்து வருபவர்கள் பொன்னாலை காவலரணில் காலை ஐந்து மணி முதல் அனுமதிக்கப்படுவார்கள்.


ஸ்ரோர்ஸ்
354, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 3354

K.
க. கனகசுந்தரம்,
152, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

கசு
154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
'பலசரக்குப் பொருள்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

நிறைவேறட்டும். அவள் அருள் அனைவருக்கும் கிடைக்கட்டும்!
க நிறுவனம்
50, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

ஹவுஸ்
300, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
Tel/Fax : 021-2783

உயர்தரமான கணனிகள் உதிரிப்பாகங்கள். இனையம் மை உதிரிபாகங்கள்.
303, K.K.S. Road, Jaffna. T.P.:2670, 3588 Fax.:3214
STEMS E-Mail: DEL SMSKR@eureka lk, SMS.COMJA@Slt net.lk

ADES
Jaffna.
Distributors For:
SMITHKLINE BEECHAM MACKWOODS LIMITED
GAMMA PHARMACEUTICALS (PVT.) LTD.
DELMAGE FORSYTH & CO. LTD.

வக் கடல்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
சங்கமம்)

குகன் ஸ்ரோர்ஸ்
180 (380), ஆஸ்பத்திரி றோட்,
யாழ்ப்பாணம்.
T.P - 24427

கண்ணன் ஸ்ரோர்ஸ்
25, பலாலி வீதி, திருநெல்வேலி.
கண்ணன் தொலைத்தொடர்பு
56, பலாலி வீதி, திருநெல்வேலி.
T.P.: 2865, 3184
கண்ணன் அரைக்கும் ஆலை
54/A, பலாலி வீதி, திருநெல்வேலி.

அம்பிகை துணை
ஊர்மக்கள் நலமுடன் வாழ அம்பிகை அருள்புரிய கும்பாபிஷேக தினத்தில் பிரார்த்திப்போம்
க.கு.கந்தையாபிள்ளை & சன்ஸ்
களபூமி,
காரைநகர்.

அம்பாள் இன்று உள்ளே சென்று வீற்றிருக்கும் நாள் ஊர் செழிக்கும் நாளாகும்.
தேவாலயம் தீர்த்த கரை ஒருங்கிணைந்து இருக்கும் தலங்களில்
பாலாவோடை குறிஞ்சாய்குளி முத்துமாரித் தாயே
உன் அருள் எங்கள் ஊருக்கும் கிடைத்திட அருள் புரிவாய் தாயே!
க.வி.குலரத்தினம்,
168, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

அம்பிகை அருளாட்சி அனைவருக்கும் கிடைப்பதாக
மகோ ஸ்ரோர்ஸ்
மு.சபாரத்தினம்
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

அம்பிகையின் கும்பாபிஷேக நன்நாளில்
அவள் தம் அருளாட்சி அனைவருக்கும் கிடைக்கட்டும்!
க.தேவராசா
நந்தாவில் - களபூமி, காரைநகர்.

அம்பிகையின் அருட்கடாட்சம் அனைவருக்கும் கிடைப்பதாக!
குருபரன் களஞ்சியம்
இல. 160, ஆஸ்பத்திரி றோட், யாழ்ப்பாணம்.

(C/15033)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## மணப்பெண்கள் தேவை

உள்ளூர் உத்தியோக, வெளிநாட்டில் தொழில் புரியும் மணமகன்களுக்கும், 1974இல் பிறந்த லண்டன பொறியியலாளர், ஆஸ்திரேலியா **B.Sc.** பொறியியலாளர் ஆகியோருக்கும் படித்த பட்டதாரி மணப்பெண்கள் தேவை. தொடர்பு: 'அபிராமி திருமண சேவை', ப.ராசாத்தி, ஆடியபாதம் சந்தை வீதி, முதலாம் ஒழுங்கை கொக்குவில். (83437)

## இலக்கியக் கட்டுரைகள்

'வீடற்றவள்' நாவலுக்கும் 'பொருளோ பொருள்' நாடகத்துக்கும் 12 சிறுகதைகளுக்கும் விளக்கங்கள் எழுதியிருக்கிறார் அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை.க.பொ.த. (சாதாரண, உயர்தர) மாணவர்கள் தமிழ் இலக்கியம் கற்க உதவக்கூடிய 38 கட்டுரைகள். (82680)

## மணமக்கள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த இங்கிலாந்தில் கணனி படித்த நிரந்தர வாசியாகிய 40 வயதுடைய அழகிய மணமகனுக்கும், யாழ்ப்பாணத்தில் வசிக்கும் அழகிய 35 வயதுடைய மணமகளுக்கும் மணமக்கள் தேவை. படித்த உத்தியோகத்திலிருக்கும் மணமகன் விரும்பத்தக்கது. சிறந்த சீதனம் கொடுக்கப்படும். மாற்றுச் சம்பந்தம் கவனிக்கப்படும். விள.இல.1196, மே/பா உதயன். (83365)

## வீடு விற்பனைக்கு

நாவலர் வீதி, பெருமாள் கோயிலடியில் 4 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அ. புவனேசன், இல.3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (83506)

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு சமீபமாக கிணற்றுடன் 8 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உள்ளது. தொடர்பு: **M.**மனோகரன், 'மனோ அம்பிஸ்', மானிப்பாய். (83305)

## தவறிவிட்டது

பலாலி மேற்கு, வசாவிளானைச் சேர்ந்த தம்பிஜயா தயாகரன் என்பவரின் தே.அ.அட்டையும் விசேட அ. அட்டையும் (இல.091036607) அச்சுவேலி சந்திக்கும் நெல்லியடிச் சந்தைக்குமிடையில் 17.01.2001 இல் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் அச்சுவேலி சூரியா மருந்தகத்தில் ஒப்படைத்துதவவும். (83505)

புத்தூர் மேற்கு நவற்கிரியைச் சேர்ந்த வைரேப்பிள்ளை மல்லிகா தேவியினது தேசிய அ.அட்டை (இல.757373416**V**), விசேட.அ.அட்டை (இல.0903028503) என்பன யாழ்ப்பாணத்திற்கும் புத்தூருக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் புத்தூரி உள்ள அம்பாள் புடைவையகத்தில் ஒப்படைத்துதவவும். (83511)

சின்னராசா வசந்தா என்பவரின் தங்கத்தாலி உரும்பிராய்க்கும் மருதனார்மடத்திற்கும் இடையில் 26.01. 2001 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து **J/185** உடுவில் மத்தி பிரிவில் உள்ள இலந்தையடி நலன்புரி நிலையத்தில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (83530)

## சம்பளப் பத்திரங்களை ஒப்படைக்கப் பணிப்பு

சம்பள மாற்றியமைப்பின் பிரகாரம் வழங்கப்பட வேண்டிய ஊக்குவிப்புக் கொடுப்பனவு நிலுவைகளை வழங்கவும், இதுவரை ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படாத ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கவும் யாழ்.வலயக் கல்விப் பணிமனையால் யாழ்.வலயப் பாடசாலைகளின் அதிபர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படுவது தொடர்பான சம்பளப் பத்திரங்களை இன்று திங்கட்கிழமை யாழ்.வலயக் கல்விப் பணிமனையில் ஒப்படைக்குமாறு யாழ்.வலயக் கல்வித் திணைக்களக் கணக்காளர் யாழ்.வலயக் கல்விப் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார். (ஐ-51)

## மாணவர் ஆசிரியர் கவனத்துக்கு!

வலி.தெற்கு,ஜன.29

கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயத்தில் கல்வி கற்று, இடம் பெயர்ந்து தற்போது வேறு பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் இலவச சீருடை, இலவச பாடநூல்கள் வழங்கப்படுவதற்கான பதிவுகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை தமது பெயர்களை பதிவு செய்யாதவர்கள் உடனடியாக சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் இயங்கும் கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயத்தில் வந்து பதிவு செய்யுமாறு அதிபர் து.பாலசுந்தரம் அறிவித்துள்ளார்.

பதிவுகளை மேற்கொள்ள வரும் போது மாணவர்கள் தமது முழுப் பெயர், பிறந்த திகதி, தற்போது கல்வி கற்கும் பாடசாலை பெயர், தற்காலிக இருப்பிட விலாசம் என்பவற்றை கொண்டுவருமாறும் அதிபர் கேட்டுள்ளார்.

கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயத்தில் கடமையாற்றும் ஆசிரியர்கள் அனைவரையும் தமது இம்மாதச சம்பளப் பணத்தை ஜனவரி 31ஆம் திகதிக்கு முன் பெற்றுக்கொள்ளுமாறும் அதிபர் அறிவித்துள்ளார். (ஐ-152)

## 'ஆஞ்சநேய பிரபாகம்' தொகுப்பு நூல்

இன்று திங்கட்கிழமை காலை நடைபெற உள்ள மருதனார்மடம் ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் ஆலய நூதனப் பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகத்தின் போது 'ஆஞ்சநேய பிரபாகம்' என்னும் தொகுப்பு நூல் வெளியிடப்பட உள்ளது.

ஸ்ரீசுந்தர ஆஞ்சநேய ஆலய தர்மகர்த்தா சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக் குருக்கள் இந்நூலை தொகுத்துள்ளார்.

ஆஞ்சநேயரை வழிபடும் முறைகள், காலங்கள், ஆலய வரலாறு மற்றும் ஆஞ்சநேய பாராயண பாடல்கள் ஆகியன இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

இந்நூலினை தயா பிறின்ட் ஸ்தாபனத்தினர் அச்சிட்டு அன்பளிப்பாக வழங்கி உள்ளனர். (ஐ-152)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது குழுவின் போஷகரான யாழ்.மாநகர ஆணையாளர்

### திரு.வே.பொ.பாலசிங்கம்

அவர்கள் வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராகப் பதவியேற்றிருப்பதைப் பாராட்டி வரவேற்பதோடு அவரது பணி மேலும் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

சைவசமய விவகாரக் குழு,
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.

(C/15032)

## புதுக்கடைத் திறப்பு விழா

இன்று (29.01.2001) திங்கட்கிழமை காலை 7.00 மணி தொடக்கம் 7.20 மணி வரையுள்ள சுப நேரத்தில்

### ஸ்ரீ ஜனா SRI JANA

என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பிப்பதற்கு இறைவன் திருவருள் கைகூடியுள்ளதால் இந் நிகழ்வில் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

### ஸ்ரீ ஜனா
### மின்பொருள் விற்பனை நிலையம்

611, கே.கே.எஸ். வீதி,
நாச்சிமார்கோயிலடி, அரசடிச் சந்தி.

உரிமையாளர்: **R.ஜனா**

(83529)

உ

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

சங்கானை கிழக்கு

# அருள்மிகு நிகரை ஞானவைரவர் ஆலய

## சம்புரோக்ஷண பஞ்சகுண்ட பக்ஷ

# மஹா கும்பாபிஷேகப் பெருவிழா

## காலம்: 29.01.2001 திங்கட்கிழமை

25.01.2001 கர்மாரம்ப பூர்வாங்கக் கிரியைகளும் -

26.01.2001 நவக்கிரக ஹோமம், திசா ஹோமம், கிராமசாந்தி பிரவேச பலி முதலியனவும் -

27.01.2001 வாஸ்து சாந்தி, கோவாசம், விக்கினேஸ்வர வழிபாடு, மிருத்சங்கிரகணம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், கடஸ்தாபனம், பிரசன்னாபிஷேகம், பிரசன்ன பூசை, கலாதாசனம், க்ஷண ஹோமம், ஸ்தூபிஸ்தாபனம், தீபஸ்தாபனம், யந்திரஸ்தாபனம், பிம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம் நிகழ்வுகளும்,

28.01.2001 விக்கினேஸ்வர வழிபாடு, எண்ணெய் சாத்துதல், விஷேட சந்தி, பூத சுத்தி, யாக பூசை, பாவனாபிஷேகம், திரவியஹோமம் முதலிய கிரியைகள் யாவும் உரிய காலத்தில் நிறைவேறியுள்ளதுடன் -

இன்று 29.01.2001 திங்கள் அதிகாலை விக்கினேஸ்வர பூசை, யாகதீபாராதனை, பூர்ணாகுதி, அந்தர்பலி, பகுர்பலி பூசை, வேதஸ்தோத்திர பாராயணம், ஆசீர்வாதம், திராவிட ஸ்தோத்திரம், தனாதிகள், தூபி அபிஷேகம், கும்ப உத்தாபனம், வீதி பிரதட்ஷணம் இடம்பெற்று -

**காலை 6.00 மணிக்கு மேல் 8.00 மணிக்குள்**

### மஹா கும்பாபிஷேகம்

இடம்பெறுவதுடன்

தொடர்ந்து பிராயச்சித்த ஹோமம், எஜமான் அபிஷேகம், தசதரிசனம், ஆசியுரை, ஆசீர்வாதம், மஹா அபிஷேகம், தீபாராதனை, நிகழ்வுடன் விபூதிப் பிரசாதம் வழங்கலின் பின்னர் மகேஸ்வர பூசை நடைபெறவுள்ளது.

குருமார் விவரம்:

*சர்வசாதக போதகா*
சிவகாம சுரபி சிவஸ்ரீ கதிர் செல்லப்பா குருக்கள்
மாதகல்
*கோயில் குரு*
**சிவஸ்ரீ வை. ஜீவநாதக்குருக்கள்**

*பிரதமகுரு*
ஈச்சமோட்டை ஞானவைரவ
தேவஸ்தான கிரியாகலாமணி
சிவஸ்ரீ
**பாலசுப்பிரமணியக்குருக்கள்**

*இவர்களுடன் ஏனைய குருமார்களாக*

*மாதகல சிவஸ்ரீ சங்கராஜக் குருக்கள்,*
*அரியாலை சிவஸ்ரீ ரு. சோமாஸ்கந்தக் குருக்கள்,*
*சங்கானை சிவஸ்ரீ கி. கைலாசநாதக் குருக்கள்,*
*நல்லூர சிவஸ்ரீ சோ.பாலகிருஷ்ணக் குருக்களும்.*

*சாதகர்களாக*

*இணுவில சிவஸ்ரீ ம.தானுநாதக்குருக்கள்,*
*கொழும்புத்துறை சிவஸ்ரீ மு.ஜெகநாதக்குருக்கள், பிரம்மஸ்ரீ சோ. வரதராஜசர்மா*
இணைந்து நடத்தவுள்ளனர்.

*ஆசியுரை:*

செஞ்சொற் செல்வர்: ஆறு.திருமுருகன் அவர்கள் நிகழ்த்தவுள்ளார்.

இதனைத் தொடர்ந்து 45 நாள்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று 14.03.2001 புதன்கிழமை மகா சங்காபிஷேகம் நடைபெறும்.

இந்தப் புனருத்தாபன மஹா கும்பாபிஷேகத்தை சிறப்புற நடத்த தத்தமது உபயமாகத் திருப்பணிகளும், நிதி உதவி, பொருள் உதவி காணிக்கையென தந்துதவி வரும் ஆலயப் பொதுச் சபை உறுப்பினர் குடும்பங்களுக்கும் ஏனைய அன்பர்கள், அடியார்களுக்கும் எம்பெருமானின் அருள் என்றென்றும் வேண்டி நன்றியுடன் வாழ்த்துகின்றோம்.

*பக்த அடியார்கள் அனைவரும் வருக! அருள் பெறுக!*

**நிகரை ஞான வைரவர் ஆலயப் பரிபாலன சபை வெளியீடு.**

(C/15037)

## அவுஸ்திரேலிய 'இன்பத் தமிழ்' வானொலி ஒலிபரப்பில்

# இரு தமிழர்கள் சாதனை

சிட்னி, ஜன. 29

50 மணித்தியாலங்களுக்கு மேலாகத் தொடர்ந்து வானொலி நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கி இரு தமிழர்கள் சாதனை படைத்துள்ளனர்.

அவுஸ்திரேலியாவில் 'இன்பத் தமிழ்' வானொலி என்ற ஒலிபரப்புச் சேவையின் இயக்குநர் பாலசிங்கம் பிரபாகரன் என்பவரும் சுரேஸ் யோகி என்ற அறிவிப்பாளரும் இணைந்து கடந்த 25ஆம் திகதி அவுஸ்திரேலிய நேரம் 10 மணி 6 நிமிடங்களுக்குத் தமது சாதனை முயற்சியை ஆரம்பித்தனர்.

இவர்கள் சோர்வின்றித் தொடர்ந்து 50 மணித்தியாலங்களுக்கும் மேலாக வானொலியில் நிகழ்ச்சிகளை வழங்கிச் சாதனை படைத்துள்ளனர்.

அத்துடன் இவர்கள் நேற்றும் தொடர்ந்து நிகழ்ச்சிகளை இடைவிடாது வழங்கி வருவதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

பிரபாகரனும், யோகியும் தமது சாதனை முயற்சியின் மத்தியில் இலங்கையில் போஷாக்குக் குறைபாடால் வாடும் குழந்தைகளுக்கு உதவுவதற்காக நிதி திரட்டுவதிலும் ஈடுபட்டனர்.

''போஷாக்குப் பூங்கா'' நிதிசேகரிப்புத் திட்டத்தின் கீழ் ஒரு குழந்தைக்கு 3 மாத காலம் போஷாக்கு உணவைக் கொடுக்கத் தேவைப்படும் தொகையான 52 அவுஸ்திரேலிய டொலர்களை வழங்கும் படி இவர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

இதனையடுத்து நூற்றுக்கணக்கான நேயர்கள் உடனடியாகத் தொடர்பு கொண்டு நிதி வழங்கினர்.

சிட்னி, பரா, மெல்போர்ன் ஆகிய அவுஸ்திரேலிய நகரங்களில் ஒலிபரப்பாகும் இன்பத் தமிழ் வானொலி, இலங்கையில சக்தி வானொலியுடன் இணைந்து ஒலிபரப்புகளை நடத்தியுள்ளது.

அந்தச் சமயத்தில் பாலசிங்கம் பிரபாகரன் வழங்கிய ''சிட்னி சின்னப்பு, என்ற நிகழ்ச்சி வரவேற்பைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

(ஓ-6-7)

## நிர்வாணமாக வாழ்வோரின் முதலாவது உலக மாநாடு

### சிலியில் நடைபெற உள்ளது

சந்தியாகு, ஜன. 29

நிர்வாணமாக வாழவிரும்புவோர் கலந்து கொள்ளும் முதலாவது அனைத்துலக மாநாடு சிலியில் நடைபெற உள்ளது.

இந்தவார இறுதியில் சிலியின் லலுவானா கடற்கரையில் இந்த மாநாடு கூட்டப்படவுள்ளதாகச் சிலி நிர்வாண இயக்கத்தின் தலைவர் கிரீனிபிரோஸ் அறிவித்துள்ளார்.

இயற்கையாக வாழ்வதை அனுபவிக்க விரும்புபவர்களை ஒன்றுசேர்ப்பதுதான். இந்த மாநாட்டின் நோக்கம் என்றும் ஸ்பெயின், பெரு, ஜேர்மனி, பிரேசில், ஆர்ஜென்டீனா உட்படப் பலநாடுகளிலிருந்தும் நூற்றுக்கணக்கான ஜோடிகளும், குடும்பங்களும் மாநாட்டில் பங்கேற்க உள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

லலுவானா கடற்கரையில் நிர்வாணமாக நடமாடுவது சட்டப்படி தடைசெய்யப்பட்டுள்ள போதிலும் மாநாட்டில் கலந்துகொள்பவர்கள் நிர்வாணமாக நடமாடுவதைத் தாம் தடுக்கப்போவதில்லை என்று உள்ளூர்ப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

அதே சமயம், மாநாட்டில் கலந்துகொள்பவர்களை ஒளிந்திருந்து பார்ப்பவர்களை விரட்டுவதே தமக்குப் பாரிய பிரச்சினையாக இருக்கப்போவதாகவும் பொலீஸார் கூறியுள்ளனர்.

(ஓ-6-7)

### உலக அரங்கில்

## ராணுவத் தளங்கள் தொடர்பாக அமெரிக்கா - ஜப்பான் பேச்சு

வாஷிங்ரன், ஜன. 29

சர்ச்சைக்குரிய இராணுவத் தளங்கள் குறித்து அமெரிக்காவுக்கும், ரஷ்யாவுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகியுள்ளன.

வாஷிங்ரனில் இடம்பெறும் இப் பேச்சுவார்த்தையில் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் கொலின் பவுலும், ஜப்பானிய வெளியுறவுத் துறை அமைச்சர் யோஷி கொனோவும் பங்குபற்றுகின்றனர்.

தற்போதைய நிலைவரங்களை மதிப்பிடுவதும், மேலும் ஒத்துழைப்புக் கொள்கைகளைப் பகிர்ந்து கொள்வதும் இந்தச் சந்திப்பின் நோக்கம் என்று அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இரண்டாம்உலகப் போரில் ஜப்பான் தோல்வியடைந்ததையடுத்து ஜப்பானிய பிரதேசங்களில் சில இராணுவத் தளங்களை அமெரிக்கா அமைத்திருந்தது.

இத்தகைய தளங்கள் அமைந்துள்ள பகுதிகளில் வாழும் உள்ளூர் வாசிகள் அமெரிக்க வீரர்களால் பாலியல் வல்லுறவு உட்படப் பல துன்புறுத்தல்களுக்கு ஆளாவதாக குற்றச்சாட்டுகள் எழுந்து வருவது குறிப்பிடத்தக்கது.

(ஓ-6-7)

## 'கலகோஸ்டே' படுகொலைகள் ஜேர்மனியில் நினைவுகூரப்பட்டன

பொன், ஜன: 29

ஜேர்மனியில் 'கலகோஸ்டே' கொடுமைகள் நினைவு கூறப்பட்டன.

2 ஆம் உலகப்போரின் போது யூதர்கள், ஜிப்சிஎன்ற நாடோடிகள், ஓரினச் சேர்க்கையாளர்கள் மற்றும் போர்க் கைதிகள் ஆகிய சுமார் 10 லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்ட ஒஸ்ரிச் எக்னோ படுகொலை முகாம் அழிக்கப்பட்ட நினைவு தினத்தை ஒட்டி அந்த முகாமிருந்த பகுதியில் மலர்வளையங்களை வைத்து பலர் அஞ்சலி செலுத்தினார்கள்.

இரண்டாம் உலகப் போரின் போது இடம்பெற்ற இன ஒழிப்புப் படுகொலைகள் 'கலகோஸ் டே' கொடுமைகளாக ஆண்டுதோறும் நினைவு கூரப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

(ஓ-6-7)

## சீனாவில் தடைசெய்யப்பட்ட பலூன்கொங் மதப் பிரிவினர் தீக்குளிப்பதாக அறிவிப்பு!

பெய்ஜிங், ஜன. 29

சீனாவில் தடைசெய்யப்பட்ட பலூன் கொங் மதப் பிரிவினர் ஒட்டுமொத்தமாகத் தீக்குளிக்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

அரசின் அடக்குமுறைகளை உலக நாடுகளுக்கு அம்பலப்படுத்தவே இந்த முடிவைத் தாம் எடுத்ததாகப் பலூன் கொங் அமைப்பினர் கூறியுள்ளனர்.

தலைநகர் பெய்ஜிங்கில் உள்ள தியனமென் சதுக்கத்தில் பலூன் கொங் மதத்தினர் தீக்குளிக்கப் போவதாக அறிவித்துள்ளதை அடுத்து அப்பகுதியில் மக்கள் நடமாட்டத்துக்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

தியனமென் சதுக்கத்துக்குச் செல்பவர்கள் கடுமையான சோதனைகளுக்குப் பின்னரே அனுமதிக்கப் படுவதாகவும்,

அப்பகுதியில் உள்ள சுரங்கப் பாதைகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாகவும், ஏஜென்ஸிச் செய்திகள் கூறுகின்றன.

இதேசமயம், பலூன் கொங் மதத்தினர் ஒரு இயசக்திக் குழும்பல் என்று தெரிவித்துள்ள சீன அரசு இந்த மதத்தைப் பின்பற்றுபவர்களை அரசுப் பணிகளில் இருந்து நீக்கும்படி உத்தரவிட்டுள்ளது.

(ஓ-6-7)

## தன்சானியாவில் எதிர்க்கட்சித் தலைவர் கைது!

தாருசலாம், ஜன. 29

தன்சானியாவில் பிரதான எதிர்க்கட்சித் தலைவர் இப்ராகிம் லிம் புங்காவும் ஆதரவாளர்களும் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சான்சிகா மாநிலத்தில் தேர்தலை நடத்தி புதிய நிர்வாகத்தை அமைக்கக் கோரிப் போராட்டம் நடத்திய போதே இவர்கள் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

## பாதுகாப்பு அமைச்சர் மறுப்பு

புதுடில்லி, ஜன. 29

காஷ்மீரில் அடுத்த 5 ஆண்டுகளில் இந்திய இராணுவம் படிப்படியாக விலக்கிக் கொள்ளப்படும் என்று கூறப்படுவதை மத்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் மறுத்துள்ளார்.

சமீபத்தில் அமைச்சரவைக் கூட்டத்தில் காஷ்மீரிலிருந்து இராணுவத்தை விலக்குவது குறித்து விவாதிக்கப்பட்டதாக செய்திகள் வெளியாகியிருந்தது குறிப்பிடத்தக்கது.

## பூமியதிர்ச்சியால் பாதிப்புற்ற குஜராத் மாநிலத்துக்கு பல நாடுகளிலிருந்தும் உதவிகள்

புதுடில்லி, ஜன. 29

இந்தியாவில் பூமியதிர்ச்சியால் பாதிக்கப்பட்டுள்ள குஜராத் மாநிலத்துக்கு பல்வேறு நாடுகளிலிருந்தும் உதவிகள் அனுப்பப்பட்டு வருகின்றன.

ரஷ்யா, அமெரிக்கா, சுவிற்சர்லாந்து, இத்தாலி, பெல்ஜியம் ஆகிய நாடுகள் பல லட்சம் டொலர்களை உதவித் தொகைகளாக வழங்கியுள்ளன.

பிறப்புப் பயிற்சி பெற்றவர்களைக் கொண்ட மீட்புக் குழுக்களையும், மீட்புப்பணிகளுக்கு உபயோகப்படுத்தப்படும் நவீன மின்னணுச் சாதனங்களையும், இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளவர்களையும், சடலங்களையும் கண்டறியும் மோப்பநாய்களையும் இந்த நாடுகள் இந்தியாவுக்கு அனுப்பி வருகின்றன.

பூமியதிர்ச்சி ஏற்பட்டு சில மணி நேரங்களில் ஐ. நா. வின் ஒருங்கிணைப்புக் குழு ஒன்று பாதிக்கப்பட்ட இடங்களை வந்தடைந்துள்ளது.

இந்தியாவில் மாநில அரசுகளும் உதவி நிதிகளை அறிவித்துள்ளன. இந்த உதவி நிதிகளில்,

தமிழ் நாடு அரசு வழங்குவதாக அறிவித்துள்ள 5 கோடி ரூபாவும் அடங்கும்.

இதே சமயம்,

சென்னை அருகே உள்ள மேல்பருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீடத்தின் முதல்வர் பங்காரு அடிகளார் சுமார் 25 லட்சம் ரூபா பெறுமதியான நிவாரணப் பொருள்களையும் மருந்துகளையும் அனுப்பி வைத்துள்ளார்.

இத்துடன் இரத்த தானம் செய்வதற்காக 540 தொண்டர்களும் குஜராத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பங்காரு அடிகளார் தெரிவித்தார். (ஓ-6-7)

## நேற்றும் நில நடுக்கம்

புஜ். ஜன. 29

குஜராத்தில் நேற்றுக் காலையிலும் புதிதாக நில அதிர்வுகள் ஏற்பட்டுள்ளன.

ரிக்டர் அளவு கோலில் 5. 9 என்ற அளவில் உணரப்பட்ட இந்த நடுக்கத்தினால் அகமதாபாத் மற்றும் சஜ் பகுதிகள் அதிர்ந்ததாகக் கூறப்படுகிறது இதனை அடுத்து சேதமடைந்த கட்டடங்களின் அருகில் செல்ல வேண்டாம் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## குஜராத் அணுசக்தி நிலையங்கள் அதிர்ஷ்டவசமாகத் தப்பின

புதுடில்லி, ஜன. 29

இந்தியாவின் குஜராத் மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களில் இயங்கும் அணுசக்தி நிலையங்கள் பூமியதிர்ச்சியில் இருந்து அதிர்ஷ்டவசமாக பாதிப்பு ஏற்படாது தப்பிவிட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பூமியதிர்ச்சியால் அணு உலைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டு அவற்றிலிருந்து கதிர்வீச்சு வெளிப்பட்டிருந்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை இலட்சத்தைத் தாண்டியிருக்கும் என்றும் அவர்கள் கூறினர்.

ஹஜீரா—ஜேய்பூர் நிலத்தடி எரிவாயுக் குழாய் இணைப்பும் பூமியதிர்ச்சியினால் பாதிப்படையவில்லை.

மோசமாகப் பாதிப்படைந்துள்ள ரத் நகருக்கு அருகே உள்ள 'காக்ரப்பார்' அணு மின்சார நிலையம் சேதமடைந்ததாக முதலில் வதந்திகள் எழுந்ததாகவும் ஆனால், அங்கு எதுவித சேதமும் ஏற்படாது அணுமின் சார நிலையம் தொடர்ந்து இயங்கிவருவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் மேலும் கூறியுள்ளனர்.

(ஓ-6-7)

## செச்னியாவிலிருந்து ரஷ்யப் படை அடுத்த மாதம் திருப்பி அழைப்பு

மொஸ்கோ, ஜன. 29

செச்னியாவில் இருந்து ரஷ்ய இராணுவத்தின் ஒரு பகுதியினர் அடுத்த மாதம் திருப்பி அழைக்கப்படுவார்கள்.

இதனை ரஷ்ய ராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

செச்னியாவில் நிலை கொண்டுள்ள ரஷ்யப் படையினரின் எண்ணிக்கையை 40 ஆயிரமாகக் குறைக்கும் நோக்குடனேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும், அவர் கூறினார்.

தீவிரவாதிகளை அடக்குவதற்காக ரஷ்யப் படைகள் யுத்தம் ஒன்றை நடத்தி செச்னியாவைக் கைப்பற்றி அங்கு நிலைகொண்டுள்ளனர்.

இதேசமயம், சமீபத்தில் தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு 15 ரஷ்யப் படைகள் உயிரிழந்து உள்ளனர்.

அத்துடன் தலைநகர் குரோஸ்னி அருகே நடந்த மோதலில் 10 ரஷ்யர்கள் இறந்தனர். (ஓ-7)

# கைதடி, நாவற்குழி, மட்டுவிலுக்கு தொடர்ந்து செல்லும் மக்கள்

## உடைமைகளையும் மீட்டு வருகின்றனர்

யாழ்ப்பாணம், ஜன. 29

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் தென்மராட்சிப் பிரதேசத்துக்குச் செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ள போதிலும் கைதடி, நாவற்குழி, மட்டுவில் பகுதிகளுக்கு பொதுமக்கள் சென்று தமது உடைமைகளைமீட்டு வருகின்றனர்.

கடந்த சில நாள்களாக நீர்வேலித் தரவை ஊடாகச் செல்லும்இவர்கள். தமதுவீடுகளில் பல பொருள்கள்காணாமல் போன நிலையில் எஞ்சிய பொருள்களை மீட்டு வருகின்றனர்.

மேற்குறிப்பிட்ட இடங்களில் பல்குழல் எறிகணைகள் விழுந்து வெடித்தமையால் பல வீடுகள், கட்டடங்கள் முற்றாகச் சேதமடைந்துள்ளன என்றும்—

தென்னை, பனை மற்றும் பயன்தரு மரங்கள் அழிந்து போயுள்ளன என்றும் — அங்கு சென்று திரும்பியவர்கள் தெரிவித்தனர்.

இதே சமயம், அந்தப் பகுதிகள் இருப்பிடங்கள் இல்லாத பலரும் கூட அங்கு சென்று அங்குள்ள வீடுகளில் இருந்து பெறுமதியான பொருள்களை திருடி வருவதாகவும் கூறப்படுகிறது.

ஆள்களில்லாத வீடுகளில் அகப்பட்டதைச் சுருட்டுவதில் தீவிரம் காட்டிவரும் இவர்கள் இராணுவத்தினரின் கண்களில் படாமல் அப்பொருள்களை நீர்வேலி, ஆவரங்கால் பகுதிகளுக்கு அப்பால் கொண்டு சென்று விற்பனையும் செய்து வருகின்றனர்.

இவர்களில் பலர் தமது வீடுகளைப் பார்வையிடச் சென்றவர்களினால் நையப்புடைக்கப்பட்டுள்ளனர். மேலும் சிலர் இராணுவத்திடம் வசமாக சிக்கி சுருட்டிய பொருள்களைப் பறி கொடுத்த நிலையில் தப்பி வந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

நேற்று வரையும் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் தென்மராட்சிப் பகுதிக்கு சென்று வந்திருப்பதாகத்தெரிவிக்கப்படுகின்றது. (உ-5)

# முறையற்ற பண வசூல்களில் ஈடுபட்டு மக்களைக் கஷ்டப்படுத்தாதீர்கள்!

## ஈ. பி. டி. பி. கட்சி அறிக்கை மூலம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 29

முறையற்ற பண வசூல்களில் ஈடுபட்டு மக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்த வேண்டாம் என்றும் இத்தகைய செயல்களில் ஈடுபடும் அரசியல் கட்சிகளைக் கோரியிருக்கின்றது ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி.

இது தொடர்பாக அந்தக் கட்சி விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழ் பேசும் மக்கள் மத்தியில் ஜனநாயக அரசியலில் ஈடுபட்டுள்ள தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) உட்பட அரசியல் கட்சிகளின் சில உறுப்பினர்கள் முறையற்ற பண வசூல் போன்ற விரும்பத்தகாத செயற்பாடுகளில் ஈடுபடுவதாக அறிகின்றோம். இது மிகவும் கவலைக்குரியதும், வன்மையான கண்டனத்திற்குரியதுமாகும். ஏனெனில் பரவலான உயிர், உடைமை இழப்புகளைச் சந்தித்தும் நாளாந்த வாழ்க்கை அவலங்களுக்கு முகம் கொடுத்தும் அலலற்படும் மக்களின் மீது மேலும் துன்பங்களைச் சுமத்துவதாகவே இத்தகைய செயல்கள் அமைகின்றன.

மேலும் முறையற்ற விதத்தில் மக்களைத் தொந்தரவுக்கு உள்ளாக்கும் இத்தகைய சக்திகள் எவை என்பது பெரும்பாலும் அம்பலப்படுத்தப்படுவது இல்லை. மாறாக 'ஆயுதக்குழுக்கள்', 'துணைப்படையினர்' என்பன போன்ற அடைமொழிகளால் பூடகமாகக் குறிப்பிடப்படுகின்றன. இதனால் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் தொழிற்படும் அரசியல் கட்சிகள் பலவும் அநாவசியமான அசௌகரியங்களுக்கு இலக்காக நேர்கின்றது. இதனால் நேர்த்தியான வேலைத்திட்டங்களுடன் சேவை புரியும் சக்திகள் மீதும் அநாவசியமான முறையில் களங்கம் கற்பிக்கப்படுகின்றது.

அத்துடன் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் மாற்று அரசியல் அபிப்பிராயங்கள் விதைக்கப்படுவதை விரும்பாதவர்கள். தமிழ் மக்கள் மத்தியில் ஏகப் பிரதிநிதிகளாக எண்ணுபவர்கள் கூட முறையற்றதும் மோசமானதுமான செயல்களில் ஈடுபட்டுவிட்டு ஏனைய அரசியல் கட்சிகள் மீது அபாண்டமான பழியைச் சுமத்துவதிலும் முனைப்புக் காட்டுகின்றன.

பொறுப்பற்ற வகையில் —முறையற்ற பண வசூல்களில்—ஈடுபடுபவர்கள் இந்த உண்மையையும் உணர்ந்து கொள்ள வேண்டும். மேலும் சட்டம், ஒழுங்குஎன்பவற்றை நிலைநாட்டும் பொறுப்புடையவர்களின் கடமைகள் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படுவதன் மூலம் உருவாகின்ற சந்தர்ப்பத்தை இத்தகையோர் தவறாகப் பயன்படுத்துகின்றனர். எனவேதான் சமூகத்தில் அராஜகங்களில் ஈடுபடுவதையும் முறையற்ற வகையில் மக்களை இன்னல்களுக்கு உள்ளாக்குவதையும் பொறுப்பு வாய்ந்த அரசியல் கட்சிகள் தடுக்க முன்வர வேண்டியது அவசியமாகும். இவ்வாறான குற்றச் செயல்களை ஊக்குவிக்காமலும் இவ்வாறான செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் தயக்கம் காட்டப்படக்கூடாது எனவும் வலியுறுத்துகின்றோம். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## யாழ். நகரில் தராசுகளுக்கு முத்திரையிடல்

யாழ்ப்பாணம், ஜன. 29

யாழ். மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட சகல வர்த்தக நிலையங்களிலும் உள்ள நிறுவைகள், அளவைகளுக்கான முத்திரையிடும் பணி நாளை செவ்வாய்க்கிழமை முதல் யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

நாளை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் இந்தப் பணி நாளை மறுதினம் புதன் கிழமையும் அடுத்தமாதம் முதலாம், 2 ஆம், 6 ஆம் 8 ஆம் திகதிகளிலும் பிற்பகல் 1-30 மணி வரையும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-7)

## இன்று மழை

கொழும்பு, ஜன. 29

வடக்கு — கிழக்குப் பகுதிகளில் பல இடங்களிலும் இன்று காலை முதல் தொடர்ச்சியாக மழை பெய்யும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

மத்திய, வடமத்திய மாகாணப் பிரதேசங்களில் இடிமுழக்கத்துடன் கூடிய மழை தொடர்ச்சியாகப் பெய்யும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-7)

## கல்வயல், மட்டுவில் மக்களுக்கு!

யாழ்ப்பாணம், ஜன. 29

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவிலுள்ள கல்வயல் (ஜே-205), மட்டுவில் மத்தி (ஜே-312) ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களின் குடும்ப விவரங்கள் இப்பிரிவுக்குப் பொறுப்பான கிராம அலுவலரினால் பதிவு செய்யப்பட்டு வருகிறது

வலிகாமத்தில் வசிக்கும் இப்பகுதி மக்கள் இணுவிலில் இயங்கும் தென்மராட்சி பிரதேச செயலகத்திலும், வடமராட்சியில் வசிப்போர் நெல்லியடியில் இயங்கும் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் இதற்கென வழங்கப்படும் படிவங்களைப் பூர்த்தி செய்து வழங்குமாறு இருபிரிவுகளுக்குமான கிராம அலுவலர் க. வாமதேவன் தெரிவித்துள்ளார்." (உ-5)

## விசேட பஸ் சேவை

யாழ்ப்பாணம், ஜன. 29

காரைநகர் பாலாவோடை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் இன்று நடைபெறும் மகாகும்பாபிஷேகத்தை முன்னிட்டு அங்கு செல்லவுள்ள பக்தர்களுக்கு விசேட பஸ் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும்—

வெளியிடங்களில் இருந்து வருபவர்கள் பொன்னாலை காவலரணில் காலை 5. 00 மணி முதல் அனுமதிக்கப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும்—

ஈ. பி. டி. பியின் வட்டுக்கோட்டைத்தொகுதி அமைப்பாளரும், வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவருமான ந. திரிலோகநாதன் அறிவித்துள்ளார். (உ-7)

# வடக்கு மக்களின் போக்குவரத்துப் பிரச்சினையை தீர்க்காவிட்டால் ஐ. நா. சபைக்கு முறையிடுவோம்

## நாடாளுமன்றில் மகேஸ்வரன் உரை

கொழும்பு, ஜன. 29

"வடபகுதி மக்களின் போக்குவரத்து மற்றும் உணவுப் பிரச்சினைகள் குறித்து நான் சமர்ப்பித்துள்ள பிரேரணைக்கு அரசாங்கம் பதில் தராதுவிட்டால் இந்தப் பிரச்சினையை ஐக்கிய நாடுகள் சபைக்கு எடுத்துச் செல்வேன், சர்வதேசமயப்படுத்துவேன்."

இவ்வாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி. மகேஸ்வரன் அண்மையில் நாடாளுமன்றில் வடபகுதிக்குப் பிரயாணம் செய்வதிலும் பொருள்களைக் கொண்டு செல்வதிலுள்ள தடையை நீக்குதல்தொடர்பான பிரேரணையைச் சமர்ப்பித்து உரையாற்றும்போது கூறினார்.

அங்கு உரையாற்றும்போது அவர் மேலும் கூறியதாவது:-

தற்போதைய அரசு பதவியேற்றதன் பின் யாழ். குடாவிலும் வன்னிப் பிரதேசத்திலும் வாழ்கின்ற மக்கள் போக்குவரத்துப் பிரச்சினைகளின் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நாடாளுமன்றில் பல தடவைகள் இப்பிரச்சினை தொடர்பாக எடுத்துரைக்கப்பட்டது. ஆனால் தீர்வு காணப்படவில்லை. மாறாக இந்த ஆட்சியில் மிகவும் கொடூரமான, கொடுமையான, சர்வாதிகார, மனிதநேயமற்ற நிகழ்வுகள் நாட்டிலே நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

தமிழ் மக்கள் தாம் வாழ்கின்ற பிரதேசங்களில் தமக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை சாதாரண முறையிலே பெறுவதற்கும், இந்த நாட்டிலுள்ள ஏனைய மக்கள் அனுபவிக்கின்ற உரிமைகள், சலுகைகளை அவர்கள் அனுபவிக்கவும் வழிசெய்ய வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

இங்கு நான் சமர்ப்பித்துள்ள இந்தப் பிரேரணைக்கு அரசாங்கம் பொறுப்புமிக்க பதில் ஒன்றை இந்த மன்றில் சமர்ப்பிக்கத் தவறுமானால் இந்த விடயத்தை ஐ. நா. சபைக்கு நேரடியாக எடுத்துச் செல்வேன்; உலகெங்கும் பறைசாற்றுவேன்.

இந்த அரசாங்கம் யாழ்ப்பாணத்துக்கு உணவுப் பொருள்களை ஏற்றிச் செல்வதற்கு கடந்த ஆறு ஆண்டுகளாக ஒரேயொரு கப்பல் கம்பனிக்கே ஏகபோக உரிமை வழங்கியுள்ளது.

தமிழ் மக்களுடைய குறைபாடுகள் மூடி மறைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த அரசினால் அவர்கள் அடாவடித்தனமாக அடக்கப்படுகிறார்கள்.

யாழ்ப்பாண மக்கள் 'லங்கா முடித்த' என்ற சரக்குக் கப்பலிலே வெளி மாவட்டங்களுக்கான போக்குவரத்தினை மேற்கொள்ளுகின்றார்கள்

நாற்பத்தெட்டு முதல் ஐம்பத்திரண்டு மணித்தியாலங்கள் தொடரும் இக்கப்பல் பயணத்தைத்தான் மக்கள், குழந்தைகள் பச்சிளம் பாலகர்கள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

அரசாங்கத்துக்கு வசதியான நேரத்தில்தான் இக்கப்பல் யாழ்ப்பாணத்திலிருந்து திருமலைக்கும் திருமலையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கும் செல்ல முடியும்.

இந்தக் கப்பலில் உணவில்லை; குடிப்பதற்கு ஏற்ற குடிநீர் இல்லை; மலசலகூடமில்லை: முதலுதவிச் சிகிச்சை வசதிகள் இல்லை. ஆசனங்கள் கூட இந்தக் கப்பலில் இல்லை,

மிருகங்கள் போன்றுதான் இந்தக்கப்பலில் பயணிக்க வேண்டி உள்ளது.

இதன்மூலம், அடிமை போல வாழ்ந்து கொண்டிருக்கின்ற தமிழ் மக்களின் பணத்தை மேலும் மேலும் சுரண்டிக் கொண்டிருக்கின்றது.

இந்த அரசின் கொடுமையினால் கப்பல் கம்பனியினர் விரும்புகின்ற — கேட்கின்ற — தொகைப்பணத்தை கொடுப்பதற்கு யாழ். மக்கள் நிரப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்தக் கப்பல் கம்பனி பொருள்களைக் கப்பலில் ஏற்ற முன்பு வர்த்தகர்களிடம் இருந்து வெற்றுக்காசோலைகளில் கையெழுத்தை வாங்கி பெருள்கள் ஏற்றிய பின் கம்பனியினரே கணக்குப் போட்டு காசோலைக்கான தொகையை எழுதுகின்றார்கள்.

நான் கடந்த நாடாளுமன்ற அமர்வின் போதும்கூட பிரதிநிதியமைச்சர் ஜி. எல் பீரிஸிடம் யாழ்ப்பாண நகரை இலங்கையின் ஒரு பாகமாக ஏற்கின்றீர்களா? என்று கேட்டிருந்தேன். அப்படி அதனை அவர் ஏற்றுக் கொண்டால், ஏன் அங்கு பொருள்களை ஏற்றிஇறக்குவதற்கு மட்டும் ஜீ. எஸ். ரி. வரியை விதிக்கிறீர்கள்?

கொழும்பிலிருந்து மாத்தறை, கண்டி, வவுனியா, மாத்தளை, கதிர்காமம் போன்ற இடங்களுக்கு பொருள்களை ஏற்றிச் செல்வதற்கு வரியில்லை. அப்படியானால் யாழ்ப்பாணத்துக்கு பொருள்களைக் கொண்டு செல்லும் போது மட்டும்ஏன் வரியை அறவிடுகின்றீர்கள்?

அங்கு வாழ்கின்ற மக்களை நீங்கள் நசுக்காதீர்கள் என்று மனிதாபிமான முறையில்உங்களை மிகவும் மன்றாடி நிற்கின்றேன்.

கட்டுபபாடுகளையும் தடைகளையும் சர்வாதிகாரமாகத் தமிழ் மக்கள் மீது விதிக்கின்றீர்கள். அவர்கள் மீது மட்டும் ஜீ. எஸ். ரி. வரியை விதிப்பதற்கு ஒரு தகுந்த காரணத்தைக் கூறுவீர்களா?

யாழ்ப்பாண மக்களுக்கு நீங்கள் வழங்கிய சலுகைகள் என்ன? இந்த அரசு செய்யும் உதவிகள் எவை? அங்குள்ள மக்கள் கடலில் இறங்கி மீன் பிடிக்க முடியாது: அதற்கு அவர்களுக்கு சுதந்திரமில்லை. குடாநாடு என்ற சிறைக்குள்ளே மக்களை நசுக்கி வைத்திருக்கிறீர்கள் — என்றார். (உ-5)

## களஞ்சியம் அமைப்பு

நெல்லியடி, ஜன. 29

30 லட்சம் ரூபா செலவில் மந்திகை நூலக வீதியில் உணவுக் களஞ்சியம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் அமைக்கப்பட்டு வரும் இக்களஞ்சியத்தில் பருத்தித்துறை, துறைமுகத்தில் கப்பலிலிருந்து இறக்கப்படும் பொருள்கள் களஞ்சியப்படுத்தப்படும் என, பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி தெரிவித்தார். (உ-109)

## பரிசளிப்பு விழா

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் நாளும் எதிர் வரும் வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை திறந்தவெளி அரங்கில் அதிபர் ச. கைலாசநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. முதன்மை விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதனும், சிறப்பு விருந்தினராக உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. செல்லையாவும், கௌரவ விருந்தினராக திரு. சி. சண்முகராசா, திரு. மு. நடராசா ஆகியோரும் கலந்து கொள்வர்.

நிறுவுநர் நினைவுரையை சைவப்புலவர் சு. செல்லத்துரை நிகழ்த்துவார். [உ-28]

### நாளை முதல் பெப்ரவரி முடியும்வரை

# படையினரைப் பாராட்டி ஒருமாத காலத்துக்கு விழா

கொழும்பு,ஜன.29

இராணுவ வீரர்களைப் பாராட்டும் விழா ஒன்றை தொடர்ச்சியாக ஒரு மாத காலத்துக்கு நடத்த அரசாங் கம் தீர்மானித்துள்ளது.

நாட்டின் 53 ஆவது சுதந்திர தினம் எதிர்வரும் 4ஆம் திகதி அனுஷ் டிக்கப்படுவதை முன்னிட்டு இந்த விசேட நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட் டுள்ளதாகவும்-

நாளை செவ்வாய்க்கிழமை ஆரம் பமாகும் இந்தப் பாராட்டு விழா அடுத்த மாதம் 28ஆம் திகதி வரை நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தொடர்ச்சி யாக இடம்பெறும் எனவும்-

அரசாங்கம் அறிவித்துள்ளது.

இராணுவத்தினருக்கு யுத்தத்தில் உள்ள ஈடுபாட்டை ஊக்குவித்தல், இளைஞர்களையும், யுவதிகளையும் படைக்குத் திரட்டுதல் ஆகிய நோக் கங்களுடன் இந்த விழா நடத்தப்பட உள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

# அளவெட்டி ஆலயம் புனரமைப்பு

சண்டிலிப்பாய்,ஜன.29

அளவெட்டி கும்பழாவளையைப் பிள்ளையார் ஆலயத்தில் புனருத் தாரணப் பணிகள் ஆலய திருப்பணிச் சபையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அடியார்களும், வெளிநாடுகளி லுள்ள அளவெட்டிப் பகுதியைச் சேர்ந்த இந்து மக்கள் பலரும் இத் திருபணிக்கு நிதி உதவி புரிந்து வரு வதாகத் தெரிவிக்கப்பட்டது.

புனருத்தாரணப் பணிகளை இயன்ற அளவு விரைவில் முடிக்க முயற்சி எடுக்கப்பட்டதாகத் தெரி விக்கப்பட்டது.

(ஐ-135)

# பேராசிரியர் சண்முகதாஸ் மணிவிழா ஞாயிறன்று

யாழ்ப்பாணம்,ஜன.29

பேராசிரியர் அ.சண்முகதாஸுக்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை- பெப் ரவரி நான்காம் திகதி- யாழ்ப் பாணத்தில் மணிவிழா எடுக்கப் படுகிறது.

யாழ்.பல்கலைக்கழக உயர்பட் டப் படிப்புகள், ஆய்வு பீடாதிபதியும், தலைசிறந்த தமிழ்ப் பேராசிரியரு மான சண்முகதாஸின் மணிவிழா திருநெல்வேலி முத்துத்தம்பி வித் தியாசாலையில், மணிவிழா அமைப் பின் தலைவரும் யாழ்.கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியுமான தி.கம லநாதன் தலைமையில் நடைபெறும்.

மணிவிழாவில் வைத்துப் பேரா சிரியருக்கு "செந்தமிழ்த் திலகம்" என்னும் விருதும் வழங்கப்படும் என்று மணிவிழா அமைப்பின் செய லாளர் மதுரகவி எம்.பி.அருளா னந்தன் தெரிவித்தார்."சண்முக தரிச னம்" நூலும் விழாவில் வெளியிடப் படும்.

விழா ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்மந்த பர மாச் சாரிய ஸ்வாமிகள், அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவர், சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப் பாக்குட்டி, பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் ஆகியோர் ஆசியுரை வழங்குவார்கள்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு.க.சண்முகநாதன், யாழ்.பல்க லைக்கழக துணைவேந்தர் பொன் பாலசுந்தரம்பிள்ளை, யாழ்ப்பாண மாகாண மேலதிக கல்விப் பணிப் பாளர் கலாநிதி ச.நா.தணிகாச லம்பிள்ளை ஆகியோர் வாழ்த்துரை நிகழ்த்துவர்.

மலர் வெளியீட்டுரையை முதறி ஞர் சொக்கனும் ஆய்வுரையை கலா நிதி சபா. ஜெயராசாவும் நிகழ்த்துவர்

# தேவைப்படும் போது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆள்களைச் சேர்த்துக் கொண்டு மீண்டும் முயற்சிக்க மாட்டார் என்று அர்த்தமல்ல. அப்படி அவர் செய்ய முற்பட்டால் எங்களாலும் முடியும், நாங்களும் அதற்குத் தயார் என் பதை அவருக்கு உணர்த்துவோம்.

இப்போதைய விரக்தி நிலை கார ணமாக சிறுவர்களையும் ஐம்பது வயதுக்கு மேற்பட்ட முதியவர்களை யும் கூட இப்போது தனது படைக்கு அவர் சேர்த்து வருகின்றார். நாங் கள் 14 வயதுச் சிறுமி ஒருவரைப் பிடித்துள்ளோம்;ஐம்பதுக்கும் அதிக வயதுடைய ஒருவர் எங்களிடம் சர ணடைந்துள்ளார். தமது மகளைப் பலவந்தமாகப் புலிகள் தமது படை யில் சேர்த்துக் கொள்வதைத் தவிர்ப் பதற்காகவே தான் புலிகளுடன் இணைந்ததாக அவர் கூறியுள்ளார்.

பிடிபடும் எல்லாப் புலிகளும் இப் போது சயனைட் உட்கொள்வது இல்லை என்பதை நீங்கள் அவதா னிக்கலாம். அவர்கள் குறுக்காகத் தாண்டி வந்து எங்களிடம் சரணடை கிறார்கள். அவர்கள் சொல்வது அவர்களது உறுப்பினர்களுக்கு இணக் கமானது அல்ல என்பதை இது காட்டுகின்றது.

எதிர்காலம் குறித்து நிச்சயமற்ற நிலை ஒன்று யாழ். மக்கள் மற்றும் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங் கள் மத்தியில் இருந்ததுதான் ஆனால் அந்த நிச்சயமற்ற நிலை இப்போது அகற்றப்பட்டு விட்டது.

கடைசி இராணுவ நடவடிக்கை யாழ்ப்பாணத்தின் ஸ்திர நிலையை மேலும் உறுதிப்படுத்தியுள்ளது. முழுக் குடாநாடும் தீவகமும் படை யினரின் முழுக் கட்டுப்பாட்டில் இப் போது உள்ளது. இது ஒரு மிக முக்கிய சாதனையாகும்.

எங்களைப் பொறுத்தவரை யுத்த நிறுத்தம் என்று ஒன்று இல்லை. தாங்கள் விடுத்த யுத்த நிறுத்த அறிவிப்பையே சுமார் ஐம்பது தட வைகள் புலிகள் மீறியுள்ளார்கள். பீரங்கிகள், மோட்டார்களை அவர் கள் எங்கள் மீது ஏவிவந்துள்ளனர். பெயரளவில்தான் யுத்த நிறுத்தம் உள்ளது. சர்வதேச மட்டத்தில் நலனை எதிர்பார்த்து அவர்கள் அதனை அறிவித்துள்ளனர். எங்கள் தாக்குதல் நடவடிக்கையை நிறுத் தச் செய்வதன் மூலம் போர் இடை வெளியைப் பெறுவதே அவர்களின் எதிர்பார்ப்பு. தமது ஆளணியை மீண் டும் ஒழுங்குபடுத்தி, மீளப்பயிற்சி யளித்து, புதிய ஆயுதங்களைப் பெற றுக் கொள்வதற்கு அவர்களுக்கு ஒரு கால அவகாசம் தேவைப்படு கின்றது. இதுதான் அவர்கள் மன தில் உள்ளது.

போரில் காயமடைந்தவர் களுக்கு சிகிச்சையளிக்கும் பிரச் சினையும் அவர்களுக்கு உள்ளது. காயமுற்றோரை பொதுமக்களின் வீடுகளில் கொண்டுபோய் போட் டிருக்கின்றார்கள். அவர்களைப் பரா மரிக்கும்படி பொதுமக்கள் கட்டா யப்படுத்தப் படுகின்றார்கள். படுகாயம டைந்த சில உறுப்பினர்கள் சிகிச் சையளிக்க முடியாத நிலையில் கொல்லப்பட்டதாகவும் எங்களுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

தாக்குதல் நடவடிக்கையில் ஈடு பட்ட சிலர் திருப்பி ஓட முயன்ற தால் காலில் சுடப்பட்டும் உள்ளனர்.

எந்த நிலையிலும் எமது துருப் புக்கள் (கைப்பற்றிய பிரதேசங் களை) தக்க வைத்துக் கொள்வர் என்ற முழு நம்பிக்கை எனக்குண்டு.

ஆனையிறவை மீளக் கைப்பற்று வது குறித்து பலரும் என்னிடம் வினவி வருகின்றார்கள். இராணுவத் துக்கு - குறிப்பாக எனக்கு- ஆனை யிறவு வெறும் உணர்ச்சிப் பெறுமதி மிக்க விடயம் மட்டும்தான்.

எதிர்காலத்தில் நாம் கைக் கொள்ளவிருக்கும் உத்தியில்தான் ஆனையிறவின் முக்கியத்துவம் தங் கியுள்ளது. ஆனையிறவை மீளக் கைப்பற்றுவது அவசியம் என்பது நமது உத்தியில் அடங்குமானால் நல்ல நேரத்தில் அது கைப்பற்றப் படும்.

எங்கள் உத்தி அதை அவசிய மாகக் கருதாவிட்டால் நாங்கள் அது பற்றியே சிந்திக்க மாட்டோம்.

பிரதேசம் பிரதேசமாக துப்புரவு செய்ய வேண்டியுள்ளது. அது முடிந் ததும் மக்களை மீளச் செல்வதற்கு அனுமதிப்போம்.

புனரமைப்பு நடவடிக்கைகளை யும் செய்ய வேண்டியுள்ளது. அந்த மக்கள் தமது இடங்களுக்கு மீளக் குடியேறுவதற்கு அரசு உதவவேண் டியிருக்கும் - என்றார் (உ)

# பிரதி முதல்வராக இன்று கந்தையன் பதவியேற்பு

யாழ்ப்பாணம்,ஜன.29

யாழ் மாநகர சபையின் பிரதி முதல வராக செல்லன் கந்தையன் இன்று காலை 10 மணிக்கு தமிழர் விடுத லைக் கூட்டணியின் உப தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வீ. ஆனந்தசங்கரி முன்னிலையில் பதவி ஏற்கவுள்ளார்.

யாழ். நகரிலுள்ள தமிழர் விடுத லைக் கூட்டணியின் தலைமைச் செய லகத்தில் சம்பிரதாயபூர்வமாக இந் தப் பதவியேற்பு வைபவம் நடை பெறவுள்ளது.

இந்த வைபவத்தில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா,யாழ்.மாநகர சபை மேயர் சட்டத்தரணி என்.ரவிராஜ் மற் றும் யாழ். மாநகர சபை உறுப்பினர் கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

1998ஆம் ஆண்டு மேயராக இருந்த பொன். சிவபாலன் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து வெற்றிடமாக இருந்த மேயர் பதவிக்கு செல்லன் கந்தை யன் தேர்தல் திணைக்களத்தினால் நியமனம் செய்யப்பட்டிருந்த போதும் கட்சிக் கட்டுப்பாடுகளை மதித்து அப்போது அவர் அப்பதவியை ஏற்க வில்லை.

கட்சிப் பிரதிமேயராக அவரைத் தெரிவு செய்து தேர்தல் திணைக் களமும் அதனை வர்த்தமானியில் வெளியிட்டதைத் தொடர்ந்து இப் பதவியை இன்று அவர் ஏற்கவிருப் பது குறிப்பிடத்தக்கது.

(உ-5)

# இளைஞர் கழகங்கள் வலி. மேற்கில் புனரமைப்பு

மூளாய்,ஜன.29

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் இளைஞர் கழகங் கள் புனரமைப்புச் செய்யப்பட்டு வரு கின்றன.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கீழ் செயற்படும் வகை யில் இக்கழகங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

இப்பிரதேசத்தில் ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலும் தலா ஒவ் வொரு இளைஞர் கழகம் புனரமைக் கப்பட்டு செயற்படவிருக்கிறது.

இவ்வாறான நடவடிக்கைகள் துரி தமாக மேற்கொள்ளப்பட்டு வரு வதாக இப்பகுதிக்கான இளைஞர் சேவை உத்தியோகத்தர் எஸ்.கோகுலராஜன் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் இக்கழகங்களி னூடாக ஆங்கிலக்கல்வி, கணனிப் பயிற்சி, தட்டெழுத்துப்பயிற்சி, விளை யாட்டுத் துறை அபிவிருத்தி, தலை மைத்துவப்பயிற்சி போன்ற பல்வேறு பட்ட அபிவிருத்தி நோக்கிலான செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே இப்பிரதேசத்தில் பல இளைஞர் கழகங்கள் செயற்பட ஆரம்பித்துள்ளன. (ஐ-99)

### சுகாதார பரிசோதகரின் பதவி வெற்றிடம்

சண்டிலிப்பாய்,ஜன.29

யாழ். மார்பு நோய்ச் சிகிச்சை நிலையத்தில் பொதுச் சுகாதாரப் பரி சோதகர் பதவி வெற்றிடமாக இருந்து வருகின்றது.

இங்கு பொதுச் சுகாதாரப் பரி சோதகராகப் பணியாற்றிவந்த எஸ்சதா சிவம் பதவியிலிருந்து ஓய்வு பெற்றுச் சென்றுள்ளார். இவரது இடத்திற்கு இதுவரை எவரும் நியமிக்கப்பட வில்லை.

இதேவேளை-

மார்பு நோய்ச் சிகிச்சை நிலை யத்தின் வைத்திய நிபுணரின் பதவி யும் நீண்டகாலம் நிரப்பப்படாத நிலை யில் இருந்து வருகின்றது. இதனால் காச நோயாளர்கள் பாதிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.


## யாழ்.மாவட்ட மேசைப்பந்தாட்டச் சங்கம்

### யாழ்.மாவட்ட மேசைப்பந்தாட்ட வீரர், வீராங்கனைகள் அணிகள் தெரிவு

மேற்படி அணியினைத் தெரிவு செய்வதற்காக யாழ். மாவட்ட மேசைப் பந்தாட்ட வீர வீராங்கனைகளிட மிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**விண்ணப்ப முடிவு திகதி: 03-02-2001 மாலை 3மணி.**

J.மோகன்
செயலாளர்,
யாழ்.மத்திய கல்லூரி.

(83543)



## கருத்துரையும் கலந்துரையாடலும்

இடம் : வணிகத்துறை மண்டபம் III (CH-III)
காலம் : இன்று 29.01.2001 திங்கள் மாலை 3.00 மணி
தலைப்பு : 'இலங்கையின் நாணயமாற்று வீத நெருக்கடி யும் அதன் அண்மைக் காலப்போக்கும்'
கருத்துரை வழங்குபவர் : V.P.சிவநாதன் M.A.
(பொருளியல் துறைத் தலைவர்)

வணிக மாணவர் மன்றம்,
யாழ்.பல்கலைக் கழகம்.

(83[illegible]8)



PHYSICS
திரு.குகன் B.Sc
A/L 2001,2002
இன்று ஆரம்பம்
திங்கள் :- 4.30
BARATHY
சித்தன்கேணி
(83536)



## அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில் மகா கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துகின்றோம்



அஞ்சிலே ஒன்று பெற்றான் அஞ்சிலே ஒன்றைத் தாவி
அஞ்சிலே ஒன்றாறாக ஆரியர்க்காக ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கைக் கண்டு அயலார் ஊரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான் அவன் நம்மை
அளித்துக் காப்பான்.

## சிவகணேசன் ஸ்ரோர்ஸ்,

41, பெரியகடை, யாழ்ப்பாணம்.
(அழகிய ஜவுளிகளின் ஆலயம்)
(C/15039)


## மரண அறிவித்தல்

### திருமதி தெய்வானைப்பிள்ளை கந்தையா

நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் நல்லூர், சட்டநாதர் வீதி, தேர்மடத்தடி ஒழுங்கையை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி தெய்வானைப்பிள்ளை கந்தையா நேற்று (28-01-2001) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வை.கந்தையாவின் மனைவியும் திருமதி நல்லம்மா இரத்தினம், ஈஸ்வரநாதபிள்ளை (பண்டிதர்-சுதுமலை), திருமதி கனகமணி சுப்பிரமணியம், தியாகராசா (V.S.B குரூப்-யாழ்ப்பாணம்), ஜெகதீசன் (திருகோணமலை), இந்திராதேவி, தீனதயாளன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் க.இரத்தினம்,காலஞ்சென்ற சுப்பிர மணியம், மனோரஞ்சிதம், தேவராணி, பேரின்பநாயகி, ராணி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் குமரன், றொசானி, ஜனனி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29-01-2001) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நண்பகல் 12.00 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் திருநெல்வேலி இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தேர்மடத்தடி ஒழுங்கை,*
*சட்டநாதர் வீதி,*
*நல்லூர்.*

(83542)

தகவல்:
க.ஈஸ்வரநாதபிள்ளை
(மகன்)

# 2 வருடங்களுக்கு இளைஞர்களை இராணுவத்தில் சேர்க்கும் திட்டம்!

## தயாராகின்றது என பிரதமர் அறிவிப்பு

இரண்டு வருட காலத்துக்கு இளைஞர்களை இராணுவத்தில் சேர்ப்பது தொடர்பான தேசியத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது என்று பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

பௌத்த விகாரை ஒன்றில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

கிராமங்களில் உள்ள விகாரைகளை தேர்வு நிலையங்களாகக் கொண்டு இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படும்.

பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு இளம் சந்ததியினர் இராணுவத்தில் சேரவேண்டும்.

இளைஞர்கள் இராணுவத்தில் சேர்வதன் மூலம் இரராணுவத்தின் தன்னம்பிக்கையையும் திடசிந்தையையும் பலப்படுத்த முடியும்.

யுத்தத்தின் மூலமே பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டுவர முடியும்.வேறு எந்த வழியிலும் பயங்கரவாதத்தை முறியடிக்க முடியாது -என்றார்.

## பூமியதிர்ச்சி....

( முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதாகச் செய்தி ஏஜென்சிகள் தெரிவித்தன.

ஐந்து மெகா தொன் ஹைட்ரஜன் குண்டு வெடித்து உருவாக்கக் கூடிய சக்தி அளவை இந்தப் பூமியதிர்ச்சி நிலத்துக்குள் வெளிப்படுத்தி இருப்பதாக நிபுணர்கள் தெரிவித்தனர்.

கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கியிருக்கும் பாடசாலைச் சிறுவர்கள் மற்றும் உறவினர்களைத் தேடி இடிந்த அக் கட்டடங்களுக்கு அருகே கண்ணீரும் கம்பலையுமாக நிற்கும் பெண்கள், தாய்மார், உற்றார், நண்பர்களைப் பார்க்கும்போது மிகச் சோகமாக இருப்பதாக செய்தியாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

"இங்கு வானத்துக்கும் பூமிக்கும் இடையே எதுவும் இல்லை - கட்டட இடிபாடுகளைத் தவிர" என்று குஜ் பகுதியுடன் தொடர்புகொண்ட செய்தியாளர் ஒருவருக்கு அங்கிருந்து பதில் கிடைத்தது. (உ)

## கோடரி வெட்டு

இரண்டு நண்பர்களுக்கிடையில் ஏற்பட்ட வாய்ச்சண்டை கோடரி வெட்டில் முடிந்தது.

நெடுந்தீவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் தனுஷ்கோடி ஜெயரட்ணம் (வயது 31) என்பவரே கோடரி வெட்டுக்கிலக்காகி படுகாயமடைந்தார். அவர் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-15)

## முகமாலையில் மோட்டார் தாக்குதல்

கடந்த சனியன்று காலை முகமாலைப் பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய மோட்டார் தாக்குதலில் மூன்று இராணுவ சிப்பாய்கள் காயமடைந்தனர் என்று விசேட ஊடகத் தகவல் நிலையம் நேற்று அறிவித்தது.

அது மேலும் தெரிவித்ததாவது:-

சனி மாலை முகமாலைப் பகுதியில் நடத்தப்பட்ட சினைப்பர் தாக்குதலில் விடுதலைப் புலிகளில் ஒருவர் உயிரிழந்தார்.

இதேதினம் அரியாலைப் பகுதியில் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த படையினரால் 81 எம்.எம். ரக மோட்டார் குண்டு மற்றும் 110 மிதிவெடிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இதேவேளை அச்செழுவிலும் அசசுவேலியிலும் சிறிய ரக வெடிகுண்டுகளில் சிக்கி இரு சிப்பாய்கள் காயமடைந்தனர். (உ-5)

# புலிகளை பிரிட்டன் தடை செய்யாது!

கொழும்பு,ஜன.29

பிரிட்டனில் புதிதாக நடைமுறைக்கு வரும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் விடுதலைப் புலிகளைப் பிரிட்டனில் தடைசெய்ய வேண்டும் என்று ஸ்ரீலங்கா அரசு திரும்பத் திரும்பக் கோரியுள்ள போதிலும், அந்தக் கோரிக்கைக்கு பிரிட்டன் பெரும்பாலும் இணங்காது என்று தெரியவருவதாக லண்டன் செய்தியாளரை மேற்கோள்காட்டி "த சண்டே ரைம்ஸ்" பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும் ஏனைய இந்திய எதிர்ப்புக் குழுக்களைப் பிரிட்டனில் தடை செய்யவேண்டும் என்ற இந்தியத் தரப்புக் கோரிக்கைக்குச் சாதகமாகப் பிரிட்டன் முடிவெடுக்கும் சாத்தியம் உள்ளது.

கடந்தவாரம் அமைச்சர் பீற்றர் மெண்டல்ஸனின் ராஜினாமா உட்பட அண்மைக் காலத்தில் பல பின்னடைவுகளைச் சந்தித்துவரும் ரொனி பிளேயரின் தொழிற்கட்சி அரசு, இந்த மே மாதம் நடைபெற இருக்கும் பொதுத் தேர்தலில் பலவீனமான நிலையில் பின் தங்கியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

சுமார் ஐம்பது தொகுதிகளில் தொழில்கட்சி புதிய தோல்விகளைச் சந்திக்கும் என்று கருத்துக் கணிப்புகள் கூறுகின்றன. இந்தத் தொகுதிகள் பலவற்றில் கணிசமான வாக்குகளைக் கொண்டிருக்கும் இலங்கைத் தமிழர்களே அங்கு வெற்றியைத் தீர்மானிக்கும் சக்தியாக விளங்குகின்றனர் என்றும் சுட்டிக்காட்டப் படுகின்றது.

இந்தத் தொகுதிகளை இப்போது பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்கட்சி எம்.பிக்கள், அடுத்த முறை தமது வெற்றியை உறுதிப்படுத்துவதற்காக இலங்கைத் தமிழர்களின் வாக்குகளைக் கவரத் திட்டமிட்டுள்ளனர் என்றும்-

இந்த நோக்கத்தின் காரணமாக புலிகளைத் தமது தொழிற்கட்சி அரசு தடைசெய்யாமல் பார்த்துக் கொள்வதில் அவர்கள் அதிக சிரத்தையாக இருக்கின்றனர் என்றும் - கூறப்படுகின்றது. (உ)

## காய்ச்சலால் மரணம்

யாழ்ப்பாணம்,ஜன.29

காய்ச்சல் எனத் தெரிவித்து கடந்த 23 ஆம் திகதி ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு நேற்று முன்தினம் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்ட இளைஞர் நேற்று அங்கு மரணமானார். ஊர்காவற்றுறை, கரம்பொன் மேற்கைச் சேர்ந்த நவரத்தினம் ஜனார்த்தனன் (வயது 15) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார். (உ-15)


கணக்கீடு
A/L 2001
கம்பனி
ஆரம்பம்:
இன்று 4.00 p.m.
வழமையான நேரம்
திங்கள், சனி, ஞாயிறு 4.00 p.m.
ஆசிரியர்: தவா
B.com. (Hons) (Acc.Spl)
SCIENCE COLLEGE
Jaffna. (83516)

நியூ ரியூசன் சென்றர்
கோண்டாவில்
உயிரியல்
A/L 2001
மீட்டல் வகுப்புகள்
2002
தொழில்படும் விலங்கு
ஆசிரியர்:
K. சுகந்தன் (B.Sc.)
ஆரம்பம்: (30-01-2001) செவ். (83428)

எலைற் கல்வி நிறுவனம்
192, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
தரம் 6 முதல் O/L வரை
அனைத்து வகுப்புகளும்
ஆரம்பமாகிவிட்டன.
புதிய அனுமதிகள்
வழங்கப்படுகின்றன.
நிர்வாகி
(83540) T.அற்புதராஜா

CHEMISTRY
A/L 2003,'02'
தென்மராட்சி மாணவர்கள் பின்வரும் நிறுவனங்களில் நடைபெறும் வகுப்புகளில் இணையலாம்.
NAVALAR - ஆனைப்பந்தி.
SRIKANTH ACADEMY - இணுவில்.
PERSONAL CENTRE - 28 ,கதிர்றல் வீதி.
SUBRA - சித்தன்கேணி
NEW BRIGHTMAN- பிறவுண் வீதி.
※ நிலைமை வழமைகளுக்குத் திரும்பின் தொடர்ச்சி வழமைபோல் சாவகச்சேரி 'ஞானோதயா' நிறுவனத்தில் நடைபெறும்.
ஆசிரியர்: திரு.அன்பு
(83522)

முடிவுகள் வெளியாகிவிட்டன!
Scholarship 2001/2002
DCS இனால் நடத்தப்பட்ட கணனிக் கற்கை நெறிக்கான நுழைவுத் தேர்வுப் போட்டிப் பரீட்சை முடிவுகள் யாவும் வெளியிடப்பட்டு உரியவர்களுக்குத் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளன. கிடைக்கப் பெறாதவர்கள் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு பெறுபேற்றை அறிந்து கொள்ளமுடியும்.
※ கற்கை நெறிகள் 02.02.2001தொடக்கம் ஆரம்பமாக உள்ளதால் 31.01.2001க்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளவும்.
※ A/L 2001 க்கு பின்னர் கற்கை நெறிகள் தொடர இருக்கும் மாணவர்களும் 31.01.2001க்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளவும்.
※ இம்முறை புலமைப்பரிசில் பெற்ற மாணவர்கள் தாங்கள் தெரிவு செய்த கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்த பின்னர், இலங்கை அரச அங்கீகார S.L.C.D.L சான்றிதழ்களை பெற்றுக் கொள்வதற்கான கற்கை நெறிகளை விசேட சலுகைக் கட்டணத்தில் தொடரலாம்.
DCS
COLLEGE OF COMPUTER TECHNOLOGY
124/2, Palaly Road, Thirunelvely.
N.M.M.V. Road, Nelliyadi. (C/15020)

PENTIUM III கணனிகள்
(700 MHz - 800 MHz)
இத்துடன்
MULTI MEDIA KIT
தொலைத்தொடர்பாடல்களுக்குரிய
NET 2 PHONE, CD WRITER.
மற்றும் கணனி உதிரிப்பாகங்கள்
※ Mother Board ※ CD Rom
※ Hard Disk ※ Floppy Disk
மேலதிக விபரங்களுக்கு:
அல்டி எலக்ரோனிக்ஸ்,
15, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (C/15044)

IBMS இன் புலமைப்பரிசில் - 2000
O/L மாணவர்களுக்கான விரிவுரைகள் ஆரம்பம்.
மேற்படி புலமைப்பரிசிலின் மூலம் தெரிவு செய்யப்பட்ட O/L மாணவர்களுக்கான விரிவுரைகள் 29-01-2001 திங்கட்கிழமை பிற்பகல் 3.30 (SLT)க்கு ஆரம்பமாக உள்ளது. இப்பிரிவின் கீழ் பதிவுசெய்த மாணவர்கள் அனைவரும் தமக்குரிய விரிவுரை நேரத்தை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.
குறிப்பு :-புதிதாக இப்பிரிவில் இணைந்து கொள்ள விரும்பும் மாணவர்களுக்கு விசேட சலுகைக் கட்டணம்.
IBMS
Head Office:
701,K.K.S Road,Jaffna.
Branches:
Near M.P.C.S Chankanai
N.M.M.V Road, Nelliyadi

IBMS இன் மாபெரும் புலமைப்பரிசில் 2001
மேற்படி புலமைப்பரிசில் மூலம் தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான விரிவுரைகள் 03.02.2001 சனிக்கிழமை முதல் ஆரம்பமாகும். இவர்களுக்கான விரிவுரை நேரங்களை இன்று முதல் அலுவலகத்தில் பார்வையிடலாம்.
Note:-
※ புலமைப்பரிசிலில் இணையத்தவறியவர்களுக்கான அனுமதிகள் விசேட கழிவுக்கட்டண முறை அடிப்படையில் வழங்கப்படுகிறது.
※ புலமைப்பரிசில் மூலம் தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகளில் இதுவரை பதிவுசெய்யத் தவறியவர்கள் 31.01.2001 புதன்கிழமைக்கு முன்னர் பதிவினை மேற்கொள்ளலாம். முன்கூட்டியே பதிவு செய்வதன் மூலம்உங்களுக்கு வசதியான விரிவுரை நேரத்தை தெரிவு செய்யலாம்.
IBMS
Head Office:
No.701,K.K.S Road,Jaffna.
Branches:
Near M.P.C.S Chankanai
N.M.M.V Road, Nelliyadi


## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் மாணிக்கலிங்கம்

(முன்னாள் அரசாங்க மரக்கூட்டுத்தாபன களஞ்சியப் பொறுப்பாளர், நல்லூர்)

நல்லூர் மூத்த விநாயகர் வீதியைப் பிறப்பிடமாகவும், யாழ்.வண்ணார்பண்ணையை வதிவிடமாகவும் கொண்ட வல்லிபுரம் மாணிக்கலிங்கம் நேற்று (28.01.2001) ஞாயிற்றுக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசிரியர் வல்லிபுரம் - மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நடராஜா சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், இந்திராணியின் அன்புக் கணவரும் தர்மினி (வணிகத் துறை 1ஆம் வருடம், யாழ்.பல்கலைக் கழகம்), குமரேஸ்(மாணவன், A/L 2001 யா/பரியோவான் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் படிகலிங்கம்(U.K), இரத்தினலிங்கம் (பிரான்ஸ்), கனகேஸ்வரி(பிரான்ஸ்), சர்வேஸ்வரி (பிரான்ஸ்), பஞ்சலிங்கம் (பிரான்ஸ்), லிங்கேஸ்வரி, நிர்மலேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவசக்தி, இராஜேஸ்வரி, ஜீவராஜா, காலஞ்சென்ற தேவராஜா மற்றும் நவநாதன், ஜெயந்திரா, பாலேந்திரன்(ஆஸ்திரேலியா), கௌரிதேவி (கனடா), விஜயராணி(கனடா) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.01.2001) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

566/3, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
(83544)

தகவல்:
குடும்பத்தினர்
நவநாதன்(மைத்துனர்)
20, மூத்தவிநாயகர் வீதி, நல்லூர்.

இப்பத்திரிகை நய, உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.01.2001 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.